ஸ்ரீ:
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

SERFOGI'S SARASWATI MAHAL LIBRARY + TANJORE +
1038

# Madras Sat Grantha Prakasana Sabha.

Tamil Publication—Third Year—No 1.

சென்னை ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபா.

தமிழ் வெளியீடு—மூன்றாவது வருஷம்—நெ. 1.

# ஸ்ரீ தேசிக ரஹஸ்யமாலை.

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனருளிச் செய்த
முப்பத்திரண்டு ரஹஸ்யங்களில்
ஒன்று முதல் பதினாறு வரையிலுமுள்ள முதற் பகுதி.

[ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் இரண்டாம் பகுதியாக வெளிவரும். ஸாரஸாரம் முதலிய மற்ற ரஹஸ்யங்களெல்லாம் மூன்றாம் பகுதியாக வெளிவரும்.]

ஷை ஸபை வித்வான் ஸ்ரீகாஞ்சி. பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசார்யரால் பரிசோதிக்கப்பட்டு

சென்னை, பிரேமா பிரஸில் பதிப்பிக்கப்பட்டது. 1184

கிடைக்குமிடம்:
ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபா ஆபீஸ்,
14, ஸ்ட்ராட்டன் முத்தியா முதலி வீதி, ஜி. டி. மதராஸ்.

147, அண்ணாபிள்ளை வீதி, ஜி. டி. மதராஸ்.


P. B. A. ஸ்வாமி க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

1949 விலை: 1—0—0

ஸ்ரீ:

ஆழ்வா ரெம்பெருமானர் திருவடிகளே சரணம்.

தூப்புல் வேதாந்ததேசிகன் திருவடிகளே சரணம்.



ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்யபூஷணம்
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம்.

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# முப்பத்திரண்டு ரஹஸ்யங்கள்.

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ,
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி.

## முதல் ரஹஸ்யமான ஸம்ப்ரதாய பரிசுத்தி

தம்பரமென்றிரங்கித் தளராமனம் தந்தருளால்
உம்பர்தொழும் திருமாலுகந்தேற்கு முபாயமொன்ருல்
நம்பிறவித்துயர் மாற்றிய ஞானப்பெருந்தகவோர்
சம்பிரதாயமொன்றிச் சதிர்க்கும் (நிலை) நெறி சார்ந்தனமே. (அம்ருதரஞ்சனி—1)

ஸதாசார்ய ஸம்ப்ரதாயத்தாலே அத்யாத்ம சாஸ்த்ரார்த்த விசேஷ நிர்ணயம் பண்ண வேணு மென்னுமிடம் உபநிஷத்துக்களிலும் உபப்ரும்ஹணங்களிலும் ப்ரஸித்தம். சாஸ்த்ரார்த்த நிரூபணம் பண்ணுமிடத்தில் சக்தியில்லாதவர்களுக்கு, * உபதேசாத் ஹரிம் புத்த்வா * என்கிறபடியே சாஸ்த்ரஜ்ஞ ஸம்ப்ரதாயமாத்ரமும் அபேக்ஷிதார்த்த நிர்ணயகமாம். ஸத்ஸம்ப்ரதாய ரஹிதமான சாஸ்த்ரத்தாலே அர்த்த நிர்ணயம் துஷ்கரம். ஸ்வகரந்தானுகிலும் உபயுக்தமாகாது.

அத்யந்தாதீந்த்ரிய விஷயத்திலே சாஸ்த்ரமூலமல்லாத ஸம்ப்ரதாயமும் ஸம்ப்ரதிபந்ந சாஸ்த்ரவிருத்தமான ஸம்ப்ரதாயமும் ப்ரம விப்ரலம்ப ஸம்பாவனை யுண்டாகையால் பாஹ்யதுல்யமாகையாலே அவிச்வஸநீயம். பர்ஸ்பர விருத்தமாக ஸதஸ்யமும் ரஹஸ்யமுமென்று சொல்லுமவையிரண்டும் ஸவவாக்யத்தாலே பாதிதங்களாம். திரளிலே சொல்லுமவை [களில்] சிலவர்த்தங்களை ஏகாந்தத்தில் சொல்ல விதிக்கையாலே, அவற்றை ரஹஸ்

யங்களென்கிறது. ப்ரஜாபதிவாக்யம் முற்பட அஸுரேந்த்ரனை விரோசநனை மோஹிப்பிக்கைக்காகச் சொல்லப்பட்டு, பிற்பட தேவேந்த்ரனை பர்வக்ரமத்தாலே பரிசுத்தாத்ம விஷயத்திலே ப்ரதிஷ்டித புத்தியாக்குகிறது. உபகோஸல வைச்வாநராதி வித்யைகளிலே முற்பட வேத்யோபாதேயங்களைப் பற்ற ஏகதேசோபதேசம் க்ரமேண சேஷபூரணார்த்தம். ஸர்வேச்வரன்தானும் தானுபதேசித்த ஜ்ஞானத்தைப் பின்னையும் * தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா * என்று பலஜ்ஞாநிகள் பக்கலிலே கேட்க விதித்தானிறே. இப்படிகளால் ஸம்ப்ரதிபந்ந சாஸ்த்ர விரோதமின்றிக்கே சாஸ்த்ரமூலத்வ ஸம்ப்ரதிபத்தி யுண்டான ஸம்ப்ரதாயம் உபஜீவ்யம்.

அப்படிப்பட்ட ஸத்ஸம்ப்ரதாயத்தில் தோற்றும் விரோதம் தத்வவிஷயமாகில் தாத்பர்ய பேதத்தாலே விரோத சாந்தியுண்டாம். அநுஷ்டான விஷயமாகில் அவ்வோ விதிக்கு அநுகுணமாக வ்யவஸ்திதாவ்யவஸ்தித ப்ரக்ரியையாலே விகல்பமாம். நயாஸோபாஸநங்களிலே அதிகாரி பேதத்தையிட்டு வ்யவஸ்தித விகல்பமென்பார்க்கும் பலஸாம்யத்தையிட்டு துல்ய விகல்பமென்பார்க்கும் விரோதமில்லை.

ஸர்வலோகஹிதமான அத்யாத்ம சாஸ்த்ர ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரதமப்ரவர்த்தகன் ஸர்வேச்வரன். மற்றுள்ளாரெல்லாரும் அவன் தானேயாதல் சேதநாந்தர முகத்தாலேயாதல் மயர்வற மதிநல மருள ப்ரவர்த்திப்பிக்கிறவர்கள். இப்படி அநஸூயாதி குணயுக்தராய், * ப்ரணிபத்யாபிவாத்ய ச * இத்யாதிகளிற்படியே ஸம்யகுபஸந்நரான வதிகாரிகளைப்பற்ற யதார்த்த தர்சிகளாய், யதாத்ருஷ்டார்த்த வாதிகளான வ்யாஸ போதாயநாதிகளாலே யதாதிகாரம் ப்ரவ்ருத்தமான வேதாந்த ஸம்ப்ரதாயத்திற்கு இந்த யுகாரம்பத்திலே ப்ரஹ்மநந்த்யாதிகளுக்குப் பின்பு நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானார். * ப்ராப்யம் ஜ்ஞாநம் ப்ராஹ்மணாத் க்ஷத்ரியாத் வா வைச்யாத் சூத்ராத்வாபி நீசாதபீக்ஷ்ணம் * இத்யாதிப்ரமாண பலத்தாலே * மிக்க வேதியர் வேதத்தினுட் பொருள், நிற்கப்பாடி என்னெஞ்சுள் நிறுத்தினான் * என்கிறது உபபந்நம். வேதாந்தார்த்த வைசத்ய ஹேதுவாகையாலே பாஷாந்தரமுபஜீவ்யம். தர்மவ்யாத துலாதாராதி வ்ருத்தாந்தங்களையுமிங்கே யநுஸந்திப்பது. * சூத்ரயோநாவஹம் ஜாதோ நாதோந்யத் வக்துமுத்ஸஹே * என்கிறது விஷயபேதத்தாலே பரிஹ்ருதம்.

இப்பரம்பரையாலும் ப்ராதுர்ப்பாவ விசேஷத்தாலும் நாதமுனிகளுக்கு ஆழ்வார் ஆசார்யரானார். இவரை ப்ரபந்நஸந்தான கூடஸ்ததையாலே ஆளவந்தார் * ஆத்யஸ்ய ந: குலபதே: * என்றருளிச்செய்தார்.

நாதமுனிகள் தம்முடைய திருப்பேரனாரான ஆளவந்தாருக்குத் தாம் உபதேசியாதே தம்முடைய சிஷ்ய ப்ரசிஷ்யர்களை "இவருக்கு ஆகாங்க்ஷை பிறந்தபோது உபதேசியுங்கோள்" என்று ஆஜ்ஞாபித்தது குரு புத்ர பௌத்ராதிகளும் வித்யாப்ரதாநத்திற்கு ப்ரசஸ்த பாத்ரங்களென்றும் ஜ்ஞாநஸந்ததியிலே முற்பட்டவர்களும் குருக்களாக வாதரணீயரென்றும், ஆகாங்க்ஷையின்றிக்கே யிருக்கச்செய்தே சொன்னால் சிஷ்ய புத்தியில் அர்த்தம் ப்ரதிஷ்டிதமாகாதென்றும் தெளிவித்தபடி. மணக்கால்நம்பி ஆளவந்தாருக்கு நெடுநாள் பச்சையிட்டு ஒரு விரகாலே ஆகாங்க்ஷை யுண்டாக்கி யுபதேசித்தது—ஆசார்ய குலத்திற்குத் தாமொரு கிஞ்சித்காரம் பண்ணுகையிலும், பரமாசார்ய நியோகத்தைக் கடுகத் தலைக்கட்டுகையிலும் உண்டான த்வரையாலும் சிரகால பரீக்ஷாதிகள் வேண்டாதபடி * போதநஞ்ச முஹு: க்ரமாத் * என்கிற யுக தர்மாநுஸாரத்தாலும் உபபந்நம். ஆளவந்தார் தாம் நாதமுனிகளை முன்னிட்டு ஸ்தோத்ரம் பண்ணிற்றும் சரணம்புக்கதுவும் தம்முடைய ஆசார்யனுக்கு இது ப்ரியதம மென்றும், தமக்கு ஆசார்யவத்தை முதலான ஸம்பத்துக்களுக்கும் அடி நாதமுனிவம்சத்தில் பிறவி யென்றும் தோற்றுகைக்காகவும் ஆசார்ய விஷயத்திற்போலே பரமாசார்ய விஷயத்திலும் க்ருதஜ்ஞதாதிகள் வேணுமென்கைக்காகவும். ஆசார்ய பங்க்தியில் சிலரை க்ரந்தங்களிலே வ்யபதேசித்தவர்களையும் மற்றுள்ளவர்களையும் அநுஸந்திப்பார்கள்.

ஆளவந்தாருடைய நியோகத்தாலே ஸ்ரீ பாஷ்யகாரரை அங்கீகரித்த பூர்ணரான பெரியநம்பி இவரைத் தமக்கு ஸப்ரஹ்மசாரிகளான திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே அர்த்த சிக்ஷை பண்ணவும் திருமாலையாண்டான் பக்கலிலே திருவாய்மொழி கேட்கவும் ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் பக்கலிலே நல்வார்த்தை கேட்கவும் நியோகித்ததும், * பஹுப்யச் ச்ரோதவ்யம் பஹுதா ச்ரோதவ்யம் * ஜ்ஞாநவ்ருத்தா மயா ராஜந் பஹவ: பர்யுபாஸிதா: * இத்யாதிகளையும் சுகாதி வ்ருத்தாந்தங்களையும் பார்த்து, சிஷ்ய பூதரை பஹுமுக (வித) மாகத் திருத்த வேண்டுமென்கிற அபிஸந்தியாலே உபபந்நதமம்.

இப்படி ஆசார்யாபிமத விஷயத்தில் ஆசார்யாநுஜ்ஞையாலே அபேக்ஷித்த ஜ்ஞாநோப ஜீவநம் பண்ணுமது சாஸ்த்ரார்த்தமென்னுமிடம் அந்திமதசாவதியாக அத்யந்தாவஹிதராய்க் கொண்டு ஸதாசாராநுபாலனம் பண்ணின ஸ்ரீ பாஷ்யகாரருடைய வநுஷ்டானத்தாலே ஸித்தம்.

அத்யாத்ம விஷயத்தில் ப்ரதாநாப்ரதாநாம்சங்களை ஒருவர்க்குப் பலராக உபதேசிக்க வேதாந்தங்களில் பல விடங்களிலே கண்டோம். ஓராசார்யர் பக்கலிலே க்ருத்ஸ்நோபதேசம் மைத்ரேயாதிகளுக்குப் போலே சிலருக்குண்டாம். ப்ரதாநச்ருதத்தினுடைய ப்ரதிஷ்டார்த்தமாகப் பலருபதேசித்தால், * அல்பம் வா பஹு வா யஸ்ய ச்ருதஸ்யோபகரோதி ய:, தமபீஹ குரும் வித்யாத் ச்ருதோபக்ரியயா தயா * என்கையாலே அவர்கள்பக்கலிலும் ஆசார்யப்ரதிபத்தி பண்ண ப்ராப்தம். அவ்யவஹித மோக்ஷோபாய வ்யவஸாயம் பிறப்பிக்கை ப்ரதாநாசார்ய க்ருத்யம். இது கலங்காதபடி பண்ணுகையும் பரிகரபூர்த்தி யுண்டாக்குகையும் ஆசார்யாபிமத சிக்ஷகாந்தர க்ருத்யம். ஆசார்ய ஸம்பந்தத்தை யுண்டாக்கினவர்களும் ப்ரபந்த முகங்களாலே பரம்பரயா உபகரித்தவர்களும் ஆதரணீயர். இவர்களில் ப்ரதாநதமன் ஸர்வ ப்ரேரகனான ச்ரிய:பதி. இவனொருவனுமே தனக்கொரு ஆசார்யனில்லாத பரமாசார்யன்.

ஸ்ரீபாஷ்யகாரருடைய சிஷ்ய ஸம்ப்ரதாயங்களில் ஒன்றிலும் அர்த்த விரோதமில்லை. வாக்யயோஜநா பேதமேயுள்ளது. தேசகாலாவஸ்தா விசேஷங்களாலே வரும் அநுஷ்டான வைஷம்யம் சாஸ்த்ராநுமதம். சோராபராதத்தை மாண்டவ்யன்பக்கல் ஆரோபித்தாப் போலே ஸ்வேச்சைக்கநுகுணமாக அநிபுணர் சொல்லுமது வக்தாக்களுக்கே தோஷமாம். திருமந்த்ரத்தில் பதார்த்த வாக்யார்த்தங்களெல்லாம் மூல பூத நிருக்தாதி வாக்ய விசேஷங்களாலே வந்தவை. இதில் பதத்ரயத்திலுமாகவாதல் ப்ரதம பதத்திலேயாதல் ப்ரதமாக்ஷரத்திலேயாதல் ஸம்க்ஷேபவிஸ்தர க்ரமத்தாலே சப்தார்த்த ஸ்வபாவங்களைக்கொண்டு அர்த்தபஞ்சகாநுஸந்தானம் பண்ணுமதுவும் அந்யோந்ய விருத்தமன்று. இப்படி ப்ரதம த்விதீயாக்ஷரங்களாலே ஆர்த்தமாகவாதல் சாப்தமாகவாதல் சரண்ய ஸஹதர்மசாரிணீ ப்ரதிபாதநம் பண்ணுமதுவும் அவ்வோ வாக்ய விசேஷமூலம். மத்யமாக்ஷரம் பஞ்சீபரமென்னும் நிர்வாஹத்தில் விசேஷோபாதாந பலத்தாலே அவதாரணம் அர்த்த ஸித்தம். இந்த அவதாரணத்தாலே ஆத்ம சரீரபாவம் ஸித்திக்கிறதென்பார்க்கு சேஷத்வாயோக வ்யவச்சேதத்திலே தாத்பர்யங் கொள்ளலாம்.

* மகாரார்த்தோ ஜீவ: * இத்யாதிகளிற்படியே த்ருதீயாக்ஷரம் ஜீவஜாதீய ஸர்வபரமென்பார்க்குமிதில் ஸ்வாநுஸந்தாநம் ஆர்த்தமென்னவேணும். * அகாரார்த்தாயைவ ஸ்வமஹம் * என்று விசேஷித்து வ்யாக்யானம் பண்ணினவர்களுக்கும் இவ்வநுஸந்தானம் ஸர்வ ஜீவ ஸாதாரணாகார விஷயம். பகவச் சேஷத்வம் தோற்றுமிடமெல்லாம் பாகவத சேஷத்வ பர்யந்தமாக அநுஸந்திக்க ப்ராப்தமாயிருக்க ஔசித்யாதிசயத்தாலே மத்யமபதத்திலே இத்தை யநுஸந்திக்குமது உபபந்நம். ப்ரதம த்விதீய சதுர்த்திகளுக்கு ஏகார்த்தத்வ பிந்நார்த்தத்வங்களும் ப்ரமாணாநுகுண வாக்யார்த்த விவக்ஷாபேதத்தாலே சொன்னவை, த்வயத்தில் பூர்வாபர ஸ்ரீமச் சப்தங்களிலும் பூர்வாபர நாராயண சப்தங்களிலும் சிலவாகார விசேஷங்களைப் பிரித்தநுஸந்திக்குமது உபாய பலதசைகளுக்கு உபயுக்ததமாம்ச நிஷ்கர்ஷம் பண்ணினபடி. சரணங்களை உபாயமென்றதுக்கு சரண விசிஷ்டவசீகார்யன் பக்கலிலே தாத்பர்யமாகையாலே ஸித்தோபாய பேதமும் ஸாத்யோபாய பாதமும் வாராது.

நமஸ்ஸ: நாநார்த்தமாக நிருக்தமாகையாலே ப்ரதம த்விதீய ரஹஸ்யங்களில் மத்யம சரமபதங்களுக்கு வாக்யார்த்தாநுகுணமாக அர்த்த பேதம் கொள்ளலாம். த்விதீய த்ருதீய ரஹஸ்யங்களில் கிடக்கிற சரண சப்தம் உபாயபரமானது அடியாக வசீகரணோபாயத்துக்குச் சிலர் பண்ணும் திரஸ்கார மெல்லாம் ஸித்தோபாய ப்ராதாந்யபரம். ஸ்வாநுஸந்தான பரமாயும் விதிபரமாயும் நிற்கிற ஆக்யாதங்களில் ஆவ்ருத்திக்கு ஜ்ஞாபகமில்லாமையாலும் அநாவ்ருத்திக்கு கண்டோக்தி யுண்டாகையாலும் வர்த்தமாந வ்யபதேசம் அநுஷ்டாந காலாபிப்ராயம்.

ப்ரபத்திக்கு யாவஜ்ஜீவாநுவ்ருத்தி சொல்லுவார்க்கும் * த்வயமர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா * இத்யாதிகளிற் சொன்ன ஸ:காலிகையிலே தாத்பர்யங் கொள்ளலாம். * ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத: * என்று சொன்ன ப்ரபத்த்யங்கங்களிலே சிலர் கதிபயாநாதரம் பண்ணுமது அங்கியினுடைய வைபவார்த்தம். விசேஷித்து கதிபயோபாதாநம் பண்ணுமதுவும் அங்காந்தரங்களில் காட்டில் இவ்வங்கங்களுடைய ப்ரசம்ஸார்த்தம். சரமச்லோகத்தில் விதிக்கிற ப்ரபத்தி ஸகல பல ஸாதநமாகையாலே அங்கமாகவும் ஸ்வதந்த்ரமாகவும் வ்யாக்யானம் பண்ணின பாஷ்ய கத்யாதிகளுக்கு விரோதமில்லை. ஸர்வ தர்மசப்தத்தில் ஸங்குசிதாஸங்குசித வ்ருத்திகளைக் கொள்ளுமவர்களுக்குப் பரபக்ஷத்தில் போலே ஸ்வதர்ம ஸ்வரூபத்யாக விதிவிவிக்ஷையில்லாமையாலே ஸ்வதந்த்ராஜ்ஞாநுபாலந விரோதமில்லை.

பரித்யஜ்ய சப்தத்திலும் ஏக சப்தத்திலும் மூல ப்ரமாணாநுகுணமாகச் சொல்லும் பலவர்த்தங்களிலும் பரஸ்பர விரோதமில்லை, அவற்றில் புநருக்தி வாராதபடி யநுஸந்திக்குமதே வேண்டுவது. சரண்யனுக்கு ப்ரபத்திகர்மத்வத்தையும் மோக்ஷகர்த்ருத்வத்தையும் ப்ரதிபாதிக்கிற [மாம் அஹம்] என்கிற பதங்களிலே ஸர்வ ஸ்வீகாரோபயுக்தமான ஸௌலப்யமும் ஸர்வகார்யகரத்வோபயுக்தமான பரத்வமும் அநுஸந்திக்குமிடத்தில் அபேக்ஷித்த விசேஷங்களைப் பிரித்தும் அநுஸந்திக்குமது சேஷவ்யவச்சேதார்த்தமன்று.

[வ்ரஜ] என்றும் [த்வா] என்றும் அர்ஜுநனையொருவனைக் குறித்துச் சொன்னாலும் தாத்பர்ய விசேஷத்தாலே இது ப்ரபத்த்யதிகாரிகளெல்லாருக்கும் வரும். ஸர்வ பாபமோக்ஷ வசனத்தில் புத்திபூர்வோத்தராகத்தையும் கூட்டுவார்க்கு சரண்யாபிப்ராயமூலபுந: ப்ரபதநாதிமுகத்தாலே அவைகளுக்கு விநாசம் விவக்ஷிதமாகையால் சாஸ்த்ர விரோதமில்லை. [மோக்ஷயிஷ்யாமி] என்கிற ஸங்கல்பத்தின் பலத்தை ப்ராரப்த கர்மாவஸாந [கால]த்திலே என்றவர்களுக்கும் ப்ரபத்தி பண்ணுகிறவன் கோலின காலத்திலே என்றவர்களுக்கும் ஆர்த்தியில் தாரதம்யத்திற் கீடாக பலாநுபவத்தாலே யாதல் ப்ரபத்திவைபவத்தாலே யாதல் ப்ராரப்த கர்மாவஸாந [கால]த்திலே மோக்ஷம் துல்யம். அர்ஜுநனுக்கு சோக நிமித்தம் வேறேயாகிலும் * மாசுசஸ் ஸம்பதம் தைவீம் * என்கிற விடத்திற்போலே * மோக்ஷயிஷ்யாமி மாசுச:* என்றதிலும் ப்ரகரணாநுகுணநிமித்த விசேஷாநுஸந்தாந முசிதம். மற்றுமிப்படி வேதாந்த ஸித்தங்களான தத்வஹித புருஷார்த்தங்களில் பரஸ்பர விரோதமும் பூர்வாபர விரோதமுமில்லாத சுத்த ஸம்ப்ரதாய க்ரமத்தை ஸங்க்ரஹித்தனம். * ஸ:வ்யாஹ்ருதாநி மஹதாம் * இத்யாதிகளையுமிங்கே ஸங்க்ரஹித்துக்கொள்வது.

கடலமுதத்தைக் கடைந்து சேர்த்த, திருமாலடி காட்டிய நம்
தேசிகர் தன்னிலே பற்றிச்சேர்ந்தோமே. (அம்ருத ரஞ்சனி 2.)

ஆஸர்வஜ்ஞாதஸ்மதாசார்யபங்க்தேரப்ரத்யூஹம் ஸத்பதம் ஸ்தாபயந்தீ,
ஸைஷா நித்யம் ஸம்ப்ரதாயஸ்ய சுத்திச் ச்ரத்தாதவ்யா சாதகந்யாய நிஷ்டை:.

இதி கவிதார்க்கிகஸிம்ஹ ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர ஸ்ரீமத் வேங்கடநாதார்ய வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு ஸம்ப்ரதாயபரிசுத்திஸ் ஸமாப்தா.

ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் திருவடிகளே சரணம்.

# இரண்டாவது ரஹஸ்யமான தத்வபதவி.

---

ப்ரஸாதாத் தேசிகேந்த்ராணாம் பராவரவிபாகவித்
ப்ரபந்ந: பரமாத்மாநம் ப்ராப்நோதி பரமம் பதம்.

ஸதாசார்யப்ரஸாதத்தாலே பராவரதத்வஜ்ஞானம் [பிறந்தவன்] பிறந்து ஸர்வேச்வரன் திருவடிகளையே உபாயோபேயங்களாகப்பற்றி உஜ்ஜீவிக்கவேணும். பரதத்வமாவது, ஸ்வவ்யதிரிக்த வஸ்துக்களெல்லாத்துக்கும் தாரகனுமாய் நியந்தாவுமாய் சேஷியுமான ச்ரிய: பதி. இவன் ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாய் பரம காருணிகனாய் ஸர்வசரண்யனாய் (பரமோதாரனாய்) மோக்ஷப்ரதனாய், முக்தப்ராப்யனாய், பரவ்யூஹாதி பஞ்சப்ரகாரசுபாச்ரய (திவ்யமங்கள) விக்ரஹ விசிஷ்டனாயிருக்கும். இவனையொழிந்தவை அவரதத்வம். இது சேதநமென்றும் அசேதநமென்றும் இரண்டு வகையாயிருக்கும். சேதநமான அவ்ரதத்வம் பரிச்சிந்நமான அஹமர்த்தம். இதற்கு ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் பராயத்தங்களாயிருக்கும். இது பத்த முக்த நித்யரூபத்தாலே த்ரிவிதம். பத்தராவார் ஸம்ஸரிக்குமவர்கள். முக்தராவார் ஸம்ஸாரம் கழிந்தவர்கள். நித்யராவார் ஒரு காலத்திலும் ஸம்ஸாரமில்லாத நித்யஸூரிகள். அசேதநமாவது அறிவில்லாத வஸ்து. அசேதநத்ரவ்யம் த்ரிகுணமென்றும் காலமென்றும் சுத்த ஸத்வமென்றும் தர்மபூதஜ்ஞாநமென்றும் சதுர்விதமாயிருக்கும். த்ரிகுணமாவது, ஸத்வாதி குண த்ரயாச்ரயமான த்ரவ்யம். இது ப்ரக்ருதி விக்ருதி விபாகத்தாலே (ப்ரக்ருதி புத்த்யஹங்காரமநஸ்ஸுகள் நாலும் தந்மாத்ரைகளைந்தும் ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும் கர்மேந்த்ரியங்களைந்தும் பூதங்களைந்தும் இப்படி) இருபத்துநாலு வகையாய் பகவல்லீலார்த்தமாக க்ஷேத்ரஜ்ஞருக்கு காய கரணாதிரூபேண பரிணமித்து பகவத்ஸ்வரூபதிரோதாநாதிகளைப் பண்ணும்.

காலமாவது—க்ஷணாதிவிபாகத்தை யுடைத்தாய், ஸர்வகர்த்தாவான ஈச்வரனாலே ஸஹகாரியாக ஸ்வீக்ருதமாயிருக்கும். சுத்த ஸத்வமாவது—ரஜஸ்தமஸ்ஸுக்களின்றிக்கே ஸத்வகுணாச்ரயமான த்ரவ்யம். இது ஈச்வரனுக்கும் நித்யருக்கும் முக்தருக்கும் விக்ரஹாதிரூபேண விசித்ர (போக்ய) மாயிருக்கும். தர்மபூத ஜ்ஞானமாவது—பராவராத்மாக்களுக்கு ஸ்வாத்மாவையும் ஸ்வவ்யதிரிக்த வஸ்துக்களையும் ப்ரகாசிப்பிக்கவற்றான ஜ்ஞானம். இந்த ஜ்ஞானத்தாலே ஆத்மாக்களுக்கு ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் உண்டாகின்றன. பத்தருக்கு நிஷித்தகாம்ய கர்த்ருத்வம் ஸம்ஸாரஹேது. தத்வஜ்ஞான மூல நிவ்ருத்திதர்ம கர்த்ருத்வம் மோக்ஷஹேது. பத்தன் முன்பு பண்ணின பந்தகங்களுக்கெல்லாம் தன்னதிகாராநுகுணமாக ப்ரபத்த்யாதி ப்ராயச்சித்தம் பண்ணி, மேலபராதம் பண்ணாதே ப்ராரப்த கர்மத்தையும் ஒரு வழியாலே கழித்து முக்தனாம்.

முத்திக்கருள் சூட மூன்றைத்தெளிமுன்னம்,
இத்திக்காலேற்கு மிதம். (அம்ருதரஞ்சனி. 3)

இதி கவிதார்க்கிகஸிம்ஹ ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
தத்வபதவீ ஸமாப்தா.

---

ஸ்ரீ தேசிகன் திருவடிகளே சரணம்.

# மூன்றுவது ரஹஸ்யமான ரஹஸ்யபதவி.

அநாதிகாலம் ஸம்ஸரித்துப்போந்த ஜீவாத்மாக்களுடைய உஜ்ஜீவநார்த்தமாக அத்யாத்ம சாஸ்த்ரங்கள் தத்வஹித புருஷார்த்தங்களை ப்ரதிபாதிக்கும். அவற்றை ஸங்க்ரஹேண ரஹஸ்யத்ரயம் ப்ரகாசிப்பிக்கும். இவற்றில் திருமந்த்ரம் ஸர்வஸங்க்ரஹம். இதுதான் மூன்று பதமாய் எட்டுத் திருவக்ஷரமாயிருக்கும். இதில் ப்ரதமபதமான ப்ரணவம் ஸாரதம ஸங்க்ரஹம். இது மூன்று பதமாய் மூன்றக்ஷரமாயிருக்கும். இதில் ப்ரதமாக்ஷரம் ஸர்வ காரணபூதனாய் ஸர்வரக்ஷகனாய் நித்யநிருபாதிகசேஷத்வ ப்ரதிஸம்பந்தியான ச்ரிய:பதியைச் சொல்லுகிறது. இதில் சதுர்த்தி சேஷத்வமாகிற ஸம்பந்தத்தைக் காட்டுகிறது. மத்யமாக்ஷரம் இஸ் ஸம்பந்தத்தை மற்றொருவரோடு துவக்கற நியமிக்கிறது. த்ருதீயாக்ஷரம் இஸ் ஸம்பந்தத்துக்கு ஆச்ரயனாய் ரக்ஷணீயனாய் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனாய் ஜ்ஞாநாநந்த குணகனாய் அணுவாய் தேஹாதி விலக்ஷணனான ஜீவாத்மாவைச் சொல்லுகிறது. ஆக இப்ப்ரணவத்தால் * கண்ணபுரமொன்றுடையானுக் கடியே னொருவர்க்குரியேனோ * என்கிறபடியே இஜ்ஜீவாத்மா பகவதநந்யார்ஹ சேஷபூத னென்றதாயிற்று.

மத்யமபதமான நமஸ்ஸு இரண்டக்ஷரமாய் இரண்டு பதமாய் "நானெனக் குரியேனல்லேன், என்கார்யத்துக்கு நிரபேக்ஷ ஸ்வதந்த்ரனுமல்லேன்" என்கிறது. இங்கே பாகவத சேஷத்வம் பலிதம். இந்நமஸ்ஸுக்கு சரணாகதியிலும் தாத்பர்யம். அநிஷ்டநிவ்ருத்தியை ப்ரார்த்திக்கிறதாகவுமாம். இப்படி நமஸ்ஸுதன்னிலே தத்வஹித புருஷார்த்த ப்ரகாசநமுண்டு. நாராயண சப்தம் நாரங்களுக்கு அயனமென்றும் நாரங்களை அயனமாகவுடையனென்றும் ஸர்வாதாரத்வாதி விசிஷ்டனான ச்ரிய:பதியைச் சொல்லுகிறது. இதில் சதுர்த்தி, தாதர்த்யத்தை முன்னிட்டுக்கொண்டு அதின் பலமான கைங்கர்யத்தைக் காட்டுகிறது. இத்தால், * ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டு நாம் * என்றதாயிற்று. * அகாரார்த்தாயைவ * என்கிற ச்லோகத்தை இங்கே அநுஸந்திப்பது.

இதி மூலமந்த்ராதிகார : ப்ரதம :.

இப்படி திருமந்த்ரத்தில் ஸங்க்ருஹீதங்களான தத்வஹித புருஷார்த்தங்களை விசதமாக்குகிறது த்வயம். இதில் பூர்வகண்டம் ஒருவாக்யமாய் உபாயபரம். உத்தரகண்டம் இரண்டு வாக்யமாய் உபேயபரம். இவை ஒரொன்றும் மூன்று பதமாயிருக்கும். ப்ரதம கண்டத்தில் ப்ரதமபதம் மூன்றுபதம் கூட ஸமஸ்தபதமாயிருக்கும். இதில் ஸ்ரீமச்சப்தம் ஸர்வருக்கும் ஆச்ரயணீயையாய் * அகலகில்லே னென்கிறபடியே தன்னையாச்ரயித்திருக்கிற பெரிய பிராட்டியாரோடு பிரிவற்றவனென்கிறது. நாராயண சப்தம் * நிகரில் புகழாய் * இத்யாதிகளிற் சொன்ன வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌசீல்ய ஸௌலப்யாதிகளை யுடையனான ஸர்வேச்வரனைச் சொல்லுகிறது. சரணசப்தம் சரண்யவிஷயத்தில் க்ருபோத்தம்பநாதிகளுக்காக தாஸபூதன் பற்றும் துறையான திருவடிகளைக் காட்டுகிறது. சரணம் என்கிற பதம் திருவடிகளுடைய உபாய பாவத்தைச் சொல்லுகிறது. ப்ரபத்யே என்கிற பதம் அகிஞ்சநாதிகாரி சரண்யன் திருவடிகளை உபாயமாகக் கொண்டு மஹாவிச்வாஸாதி விசிஷ்ட பரந்யாஸம் பண்ணுகிறபடியை ப்ரகாசிப்பிக்கிறது. ஸ்ரீமதே என்கிற பதம் ப்ராபகனான நாராயணன் ப்ராப்யனாய்க்கொண்டு கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாம்போது பத்நீவிசிஷ்டனாயிருக்கும்படியைக் காட்டுகிறது. இங்குற்ற நாராயண சப்தம் ஸர்வ ப்ரகார விசிஷ்டனாய்க் கொண்டு நிரதிசயபோக்யனான ஸர்வசேஷியை ப்ரதிபாதிக்கிறது. இதின் சதுர்த்தியிலும் திருமந்த்ரத்தில்போலே கைங்கர்யப்ரார்த்தனையைக் கண்டு கொள்வது. இக்கைங்கர்யம் ஸர்வவிரோத ரஹிதமானபடியை இந்நமஸ்ஸு கணிசிக்கிறது. ஸ்ரீமானான நாராயணன்

திருவடிகளில் களையற்ற நித்ய கைங்கர்யம் பெறுகைக்கு ஸ்ரீமானன நாராயணன் திருவடிகளி ரண்டையும் சரணமாகப் பற்றுகிறேனென்று இதில் திரண்டபொருள். ... ... *

இதி த்வயாதிகாரோ த்விதீய:.

---

இப்படி திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் ப்ரகாசித்த வுபாயத்துக்கு அகிஞ்சநாதிகாரத்வ நிரபேக்ஷத்வாதிகளைக் காட்டிக்கொண்டு, விதிமுகத்தாலே உபப்ர்ம்ஹணம் பண்ணுகிறது சரமச்லோகம். இதுதான் மூன்று வாக்யமாய் பன்னிரண்டு பதமாயிருக்கும். இப்படி ரஹஸ்யத்ரயம் உத்தரோத்தரம் பதங்களிரட்டிப்பாய் விசதீகரணமாயிருக்கும். இச் ச்லோகத்தில் ப்ரதமவாக்யம் உபாயவிதாயகம். மத்யமவாக்யம் பலப்ரதிபாதகம். உத்தரவாக்யம் க்ருதக்ருத்யத்வாதி தத்பரம். ஸர்வதர்மங்களையும் விட்டு என்கிற விரண்டு பதங்களாலே, * நின்னிலங்கு பாதமன்றி மற்றோர் பற்றிலேன் எம்மீசனே * என்கிறபடியே அபிமதஸித்திக்கு உபாயாந்தர மற்றிருக்கிறவதிகாரி விசேஷத்தை யாதல், ப்ரபத்தியினுடைய தர்மாந்தர நைரபேக்ஷ்யாதிகளையாதல் சொல்லுகிறது. 'என்னையொருவனை' என்கிற விரண்டு பதங்களாலே ஸௌலப்யாதி குண விசிஷ்டமுமாய் ப்ரதானோபாயத்வ நிரபேக்ஷத்வ ஸர்வபலப்ரதத்வாதி விசிஷ்டமுமான ஸநாதந தர்மத்தைக் காட்டுகிறது. 'சரணமாகப்பற்று' என்கிற விரண்டு பதங்களாலே மஹாவிச்வாஸாதி விசிஷ்ட பரந்யாஸத்தை விதிக்கிறது. 'நானுன்னை' என்கிற விரண்டு பதங்களாலே பரஸ்வீகாரம் பண்ணின ஸர்வ சக்தியையும் ந்யஸ்தபரனை சாதகவ்ருத்தியையும் சொல்லுகிறது. 'எல்லா பாபங்களில் நின்றும் விடுவிக்கக் கடவேன்' என்கிற விரண்டு பதங்களாலே கைங்கர்ய விரோதிகளை நிச்சேஷமாகக் கழிக்கும்படியைச் சொல்லுகிறது. 'சோகிக்கவேண்டாம்' என்கிற விரண்டு பதங்களாலே புகலற்றுத்தளும்பின பூர்வதசையை விலக்கி, * நிஸ்ஸம்சயஸ் ஸுகமாஸ்வ * என்றருளிச்செய்த உத்தரதசையை உபலக்ஷிக்கிறது. த்வயத்தில் பூர்வோத்தர கண்டங்களுக்கு இதில் பூர்வோத்தரார்த்தங்கள் சேர்த்தியாகிறன. ... ... ... ... .... *

இதி சரமச்லோகாதிகாரஸ் த்ருதீய:.

மூன்றிலொருமூன்று மூவிரண்டுமுந்நான்கும்,
தோன்றத் தொலையும் துயர். (அம்ருதாஞ்சனி. 4.)

இதி தத்வத்ரயஸ்யைஷா ரஹஸ்யத்ரிதயஸ்ய ச,
பதவீ வேங்கடேசேந ப்ரத்யக் ப்ராசீ ப்ரதர்சிதா.

ஸ்ரீரங்க த்விரத வ்ருஷாத்ரி பூர்வகேஷு ஸ்தானேஷு ஸ்திரவிபவா பவத்ஸபர்யா,
ஆகல்பம் வரத விதூதவைரிபக்ஷா பூயஸ்யா பவதநுகம்பயைவ பூயாத்.

இதி கவிதார்க்கிகஸிம்ஹ ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர ஸ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ரஹஸ்யபதவீ ஸமாப்தா.

---

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# நான்காவது ரஹஸ்யமான தத்வ நவநீதம்

உயிருமுடலு முடலாக ஓங்கித்
தயிர் வெண்ணெய் தாரணியோடுண்டான்—பயிரில்
களைபோலசுரரைக் காய்ந்தான்றன் கையில்
வளைபோலெம் மாசிரியர் வாக்கு.

ஸம்ஸ்க்ருத த்ராவிட ச்ருதி ஸ்ம்ருதி (இதிஹாஸ புராணங்) களில் சொல்லுகிற தத்வஜ்ஞான பூர்வகமாக மோக்ஷோபாயாநுஷ்டானம் வேண்டுகையாலே முமுக்ஷுவுக்கு விசேஷித்தறியவேண்டும் சிதசிதீச்வர தத்வங்களை போக்தாவென்றும் போக்யமென்றும் ப்ரேரிதாவென்றும் உபநிஷத்துச் சொல்லிற்று. போக்தாவாகையாவது, போகத்தை யுடையனாகை. இது ஸர்வேச்வரனுக்கும் பொதுவாயிருக்க அவனை ப்ரேரிதாவென்று பிரியச் சொல்லுகையாலே ஸர்வ ப்ரேரகத்வமன்றிக்கே பராதீந போகனான ஜீவனை இங்கு போக்தா வென்கிறது. * அதிஷ்டாநம் ததா கர்த்தா * என்கிற விடத்திலே கர்த்ரு சப்தமும் பராதீந கர்த்தாவைச் சொல்லுகிறது. சிதசிதீச்வரர்களென்னும்போது சிச்சப்தமும் பராதீந சேதந விஷயம். * இச்சாத ஏவ தவ விச்வபதார்த்தஸத்தா * இத்யாதிகளிற்படியே ஜீவனுடைய ஜ்ஞாநாநந்த ஸ்வரூபாதிகளும் பராதீநங்களாயிறே யிருப்பது.

இஜ்ஜீவவர்க்கத்தில் பீஜாங்குர (ந்யாய) க்ரமத்தாலே அநாதியான அபராத ப்ரவாஹமடியாக * முடிவில் பெரும்பாழான சிறைக்கூடத்திலே முப்பிரியான ஸத்வாதி குணங்களாலே கட்டுண்டு, கழலவிரகற்றுக் கிடக்கிறவர்கள் பத்தர்கள். இவர்களிலே மோக்ஷசாஸ்த்ரங்களில் சொல்லுகிறதொரு விரகாலே [மோக்ஷயிஷ்யாமி] என்னும்படி முனிவுதீர்ந்து நித்யரோடொக்க * முகப்பே கூவிப்பணிகொள்ளப் பெற்றவர்கள் முக்தர்கள். நித்ய பகவதநுபவத்தாலே நித்ய கைங்கர்யபரரான சேஷ சேஷாசநாதிகள் நித்யர்கள். போக்யமென்பது அநுபாவ்ய மென்றபடி. இது ஜீவேச்வரர்களிருவர்க்கும் பொதுவாகையாலே பூர்வாபரபதங்களில் சொன்ன போக்த்ருத்வமும் நியந்த்ருத்வமும் இல்லாத விஷயத்தை இங்கு போக்யமென்கிறது. இத்தை அசித்தென்றது ஜ்ஞாநரஹித மென்றபடி. அசேதநத்வம் கேவல குணங்களுக்கும் தர்ம பூதஜ்ஞானத்துக்கும் பொதுவாகிலும் இங்கு த்ரிவிதாசேதநமென்று பூர்வர்கள் நிரூபித்தவை த்ரிகுணமும் காலமும் சுத்த ஸத்வமும் என்கிற த்ரவ்ய விசேஷங்கள்.

த்ரிகுணமாவது பரிமித ஸுகத்துக்கும் துக்கத்துக்கும் மோஹத்துக்கும் விசேஷ காரணங்களான ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்களாகிற குணங்களுக் காச்ரயமான த்ரவ்யம். இது கேவல ப்ரக்ருதியென்றும் ப்ரக்ருதி விக்ருதியென்றும் கேவல விக்ருதி யென்றும் மூன்று வகையாய் இருபத்துநாலு தத்வரூபமாயிருக்கும்.

இவற்றில் ஸ்வபாவத்தாலும் பஞ்சீகரணாதிகளாலும் தேசகாலபேதத்தாலே யுண்டாம் விக்ருதிகளுக்கு எல்லையில்லை. காலமாவது, ஜடத்வ விபுத்வங்களை யுடைத்தாய், பாலவ்ருத்தாதி வ்யவஸ்தைகளுககு விசேஷகாரணமான த்ரவ்யம். இது எப்போதும் அவ்வோவஸ்துக்களுடைய பூதபவிஷ்யத் வர்த்தமாந வ்யபதேசங்களுக்கும் தன் அவச்சேதங்களாலே நியாமகமாயிருக்கும். இதற்கு ஸத்வாதிகுண த்ரயமுமின்றிக்கேயிருக்கஉபாதி விசேஷங்களாலே சீதகாலம் உஷ்ணகாலம் என்னுமாப்போலே ஸாத்விக ராஜஸ தாமஸாதிகால விபாக முண்டாகிறது. ப்ரஹ்மதிவஸம் முதலாக மநுஷ்யதிவஸ பர்யந்தமாக எங்குமிது கண்டு கொள்வது. சுத்த ஸத்வத்தில் இப்படிப்பட்ட காலவிபாக மின்றிக்கே பூர்வாபராதி விபாகமாத்ரமேயாயிருக்கும். சுத்த ஸத்வமாவது. ரஜஸ்தமஸ்ஸுக்களின்றிக்கே ப்ராக்ருத

ஸத்வ விலக்ஷண ஸத்வத்துக் காச்ரயமான த்ரவ்யம். இது ஸபரிகரனான ச்ரிய:பதிக்கு போக்ய போகோபகரண போகஸ்தானரூபமாய்க் கொண்டு அநந்தாச்சர்யமாய் ஹிரண்யகர்ப்பாதி ஸ்தானங்களெல்லாம் நரகமாய்த் தோற்றும்படியான ஆநுகூல்ய ப்ரகர்ஷத்தாலே பரமபத சப்தவாச்யமாயிருக்கும்.

இப்படி மூன்றுவகையான சேதநாசேதநங்களுடைய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகள் மூன்றும் தானிட்ட வழக்காம்படி நிற்கிற ச்ரிய:பதியை ப்ரேரிதா வென்கிறது. இவன் மூன்று ஸம்பந்த நியமத்தாலே ஸர்வசரீரியாய், மூன்று வ்யாபார விசேஷங்களாலே ஸர்வகார்யங்களுக்கும் ஸர்வகாரணமாய், மூன்று காலத்திலும் எகரூபஸ்வரூப ரூபங்களையுடையனாய், மூன்று ஸ்தானத்திலே நித்ய வாஸத்தை யுடையனாய், மூன்று வகையான அர்ச்சாவதாரத்தையுமுடையனாய், மூன்று யுகத்திலே விசேஷித்து ப்ரகாசிக்குமவனாய், மூன்று குண யுகத்தாலும் த்ரியுகனாய், மூன்று வ்யூஹங்களாலே மூவிரண்டு ப்ரகாரங்களைப் பண்ணுமவனாய் மூன்று புருஷார்த்தங்களுக்கும் மூலமாய், மூன்று ப்ரமாணங்களாலும் ப்ரதிக்ஷேத மில்லாதவனாய், மூன்று மாத்திரையான ஒற்றையெழுத்துக்கு முக்யார்த்தமாய், மூன்று ரஹஸ்யங்களில் சிக்ஷையாலே விசேஷித்தறியப்படும். ப்ரஹ்மத்துக்கு உபநிஷத்துக்களிற் சொன்ன த்ரைவித்யம் போக்த்ரு விசிஷ்ட ரூபத்தாலும் போக்ய விசிஷ்ட ரூபத்தாலும் ப்ரேரகத்வ விசிஷ்ட ரூபத்தாலும் உபபந்நம். தன்னையும் ப்ரேரிதாவையும் பிரியவறிந்து பற்றினவனுக்கு அவன் ப்ரஸாதத்தாலே மோக்ஷமென்றிறே இங்கே ஓதுகிறது. இப்படியே பஞ்சதசாத்யாயாதிகளிற்படி பராவரதத்வ விவேகம் பிறந்தால் * த்யேயோ நாராயணஸ் ஸதா * என்றும் * ஸ்மர்த்தவ்யஸ் ஸததம் விஷ்ணு: * என்றும் * துஞ்சும் போதும் விடாது தொடர் * என்றும் சொல்லுகிற ஸதாநுஸந்தானம் க்ருத்ய சேஷமுடையவனுக்கு உபாயோபகார விதையாலே வந்த போகம் க்ருத க்ருத்யனுக்கும் கைங்கர்யோபகார விதையாலே வந்தபோகம், போக்யனாய் நித்ய ஸ்ரீயான சேஷி ஸமாதிக தரித்ரனைப்போலே போகமும் நிஸ்ஸமாப்யதிகமாம்.

அலையற்றவாரமுதக் கடலக்கடலுண்டமுகில்
விலையற்றநன் மணிவெற்பு வெயில்நில வோங்குபகல்
துலையற்றனவென்பர் தூமறைசூடும் துழாய்முடியாற்கு
இலையொத்தனவவன் பாதம் பணிந்தவர்க்கெண்ணுதற்கே. (அம்ருதாஞ்சனி. 6.)

ஸத்ஸம்ப்ரதாய தத்நஸ் ஸமுத்த்ருதம் வேங்கடேசேந,
தத்வநவநீதமேதத் தநுதே நவநீதநர்த்தகப்ரீதிம்.

வரத விரசய த்வம் வாரிதாசேஷதோஷாம்
புநருபசிதபுண்யாம் பூஷிதாம் புண்யகோட்யா,
ஸிதமுதிதமநோபிஸ் தாவகைர் நித்யஸேவ்யாம்
ஹதரிபுஜநயோகாம் ஹஸ்திதாம்நஸ் ஸம்ருத்திம்.

இதி கவிதார்க்கிகஸிம்ஹ ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர வேதாந்தாசார்யக்ருதிஷு

தத்வநவநீதம் ஸமாப்தம் 4.

---

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஐந்தாவது ரஹஸ்யமான ரஹஸ்ய நவநீதம்

உத்தி திகழுமுறை மூன்றின் மும்மூன்றும்
சித்த முணரத் தெளிவித்தார்—முத்திதரும்
மூலமறையின் முடிசேர் முகில்வண்ணர்
சீலமறிவார் சிலர். (அம்ருதாஞ்சனி 7)

ஸகலவேத ஸாரமான திருமந்த்ரத்தில் மூன்று வாக்யங்களில் அடைவே ஸ்வரூப ஸமர்ப்பணமும் பரஸமர்ப்பணமும் பலஸமர்ப்பணமும் அநுஸந்தேயம். இங்கு ஸ்வரூப ஸமர்ப்பணமாவது * ஸர்வோபாதிவிநிர்முக்தம் க்ஷேத்ரஜ்ஞம் ப்ரஹ்மணி ந்யஸேத் * என்கிற படியே வபுராதிகளில் வேறுபட்டு ஜ்ஞாநாநந்தஸ்வரூபனாய் ஜ்ஞாநாநந்த குணகனாய் ஸ்வயம் ப்ரகாசமானனாய் ஸ்வஸ்மைபாஸமானனாய் அணுவான நான் ஸர்வஜகதேக காரணபூதனாய் ஸர்வரக்ஷகனாய் ஸர்வ சேஷியான ச்ரிய:பதியைப் பற்ற, * நானு முனக்குப் பழவடியேன் * கண்ணபுரமொன்றுடையானுக்கடியே னொருவர்க்குரியேனோ * என்கிறபடியே நித்யநிருபாதிக சேஷபூதனென்று அநுஸந்திக்கை. இஸ்ஸம்பந்தாநுஸந்தானம் அர்த்த பஞ்சகாநுஸந்தானத்திற்கு அஞ்சுருவாணியாய் நிற்கும். பரஸமர்ப்பணமாவது, * ஆத்மாத்மீய பரந்யாஸோ ஹ்யாத்ம நிக்ஷேப உச்யதே * என்கிறபடியே நித்ய சேஷபூதனுமாய் நித்ய பாதந்த்ரனுமாய் அபிமதஸித்திக்கு புகலொன்றில்லாவடியேனை இனியொரு கர்த்தவ்யத்திலே மூட்டாதே அடைக்கலமாகக்கொண்டு ரக்ஷித்தருளவேணுமென்கை. பல ஸமர்ப்பணமாவது— * தேந ஸம்ரக்ஷ்யமாணஸ்ய பலே ஸ்வாம்ய வியுக்ததா * இத்யாதிகளிற்படியே களையற்ற ஸூரி துல்ய கைங்கர்யத்துக்கு ஸ்வரூபயோக்யனான ஆரா வன்பிலடியேனுக்கு உபாதியடியாக வந்த அயோக்யதைகளெல்லாம் கழித்து வழுவிலா வடிமைகொண்டு வாழ்வித்தருள வேணுமென்கை. இப்படி சேஷ சேஷிபாவத்தாலே இருவரையு முறவாக்கி சேஷசேஷி க்ருத்யத்தாலே இருவரையும் வணக்கி சேஷ சேஷி பலத்தாலே இருவரையும் ஏகரஸமாக்குகிறது திருமந்த்ரம். இதிலே சாரீரக க்ரமத்தாலே தோற்றின பரதத்வத்தையும் பரமஹிதத்தையும் பரம புருஷார்த்தத்தையும் ஸ்வரூபாநுரூப விசேஷண விசிஷ்டமாக வெளியிடுகிற சரணாகதி மந்த்ரத்தில் மூன்று வாக்யங்களிலடைவே உபாய விசேஷமும் புருஷார்த்த விசேஷமும் விரோதி நிவ்ருத்தி விசேஷமும் ஸித்த ஸாத்ய ரூபத்தாலே இருவகையாகச் சேர்ந்து நிற்கும்படி யநுஸந்தேயம்.

எங்ஙனே யென்னில் ஸ்ரீமானான நாராயணன் அபிமத ஸித்திக்கு வ்யாஜமாத்ரஸாபேக்ஷமுமாய் தத்ப்ரவர்த்தகமுமாய் வ்யவதாநமற்று ப்ரதானமான ஸித்தோபாயம். * அநந்யஸாத்யே * அகலகில்லேன் * இத்யாதிகளில் சொல்லுகிற சரணாகதி, அவனுடைய வசீகரமான ஸாத்யோபாயம். புருஷார்த்த விசேஷமாவது, * தனக்கேயாகவெனைக் கொள்ளுமீதே * என்கிறபடியே தன்னோடும் தான் பண்ணுகிற கைங்கர்யத்தோடும் துவக்கற்று, * கண்டு கேட்டுற்று * இத்யாதிகளிற்படியே நிரதிசய போக்யமான நித்யஸித்த ப்ராப்யமும் அதின் பரிபூர்ணாநுபவ பரீவாஹமாய்க்கொண்டு ஸாத்யமான சேஷி (ஸ்வாமி) யுகந்த கைங்கர்யமும். விரோதி நிவ்ருத்தி விசேஷமாவது * தனக்கேயாக வெனைக் கொள்ளுமீதே * என்கிறபடியே (தன்னோடும் தான் பண்ணுகிற கைங்கர்யத்தோடும் துவக்கற்று) ஸர்வாவித்யா நிவ்ருத்தி பிறக்கை. இப்படிப்பட்ட ஸித்த ஸாத்யங்களான புருஷார்த்த ஹேதுக்களையும் ஸித்த ஸாத்யங்களான புருஷார்த்தங்களையும் சேர்த்து ஸாத்ய புருஷார்த்தத்தில் இருவகையான களையற்றபடியையும் காட்டுகிறது த்வயம். இதில் பூர்வோத்தர கண்டங்களுக்கு * ஸ ப்ராது ச்சரணௌ

காடம் * * பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா * என்ற விரண்டு ச்லோகங்களும் சேர்த்தியாகிறது. இவற்றில் தோன்றின பரமஹிதத்தினுடைய அதிகார நைரபேக்ஷ்ய ஸ்வரூப ப்ரபாவங்களையும் வெளியிட்டுக்கொண்டு உபப்ரும்ஹணமான சரமச்லோகத்தில் மூன்று வாக்யங்களிலடைவே அதிகாரி ச்ருத்யமும் சரண்ய க்ருத்யமும் க்ருதக்ருத்யனுடைய உத்தரக்ருத்யமும் அநுஸந்தேயம். அதிகாரி க்ருத்யமாவது—* மேம்பொருள் * இத்யாதிகளில் படியே விவேகாதியுக்தனைய்க்கொண்டு * விடைக்குலங்கள் * என்கிறபாட்டின்படியே ஸநாதனதர்மமான ஸர்வலோக சரண்யனுக்கு விண்ணப்பம் செய்கை. சரண்யக்ருத்யமாவது * தமர்கள் கூட்ட வல்வினையை நாசம் செய்யும் சதிர்மூர்த்தி * என்கிறபடியே சரணாகதி விரோதிகளையெல்லாம் கழிக்கைக்கு ஸர்வசேஷியான தன்னைத் தட்டுமாறித் தாழநின்று ஏற்றின சுமையை யெல்லாமேறிட்டுக்கொண்டு இவனைத் தன்னளவாக உயர்வெடுக்கை. உத்தர க்ருத்யமாவது, * அத்தனைகியன்னையாகி * என்கிறபாட்டின்படியே மநஸ்ஸைத் தேற்றி * சிற்றஞ்சிறுகாலே * என்கிறபாட்டின்படியே ஸர்வப்ரகாரத்தாலும் அநந்யனாய் ஸ்வயம் ப்ரயோஜந சாஸ்த்ரீய கைங்கர்ய பரனாகை.

இப்படியால் ஓரதிகாரியை சரண்யன் ஹிததமத்திலே மூட்டும்படியையும் இவனுக்கு ப்ரியதமத்தைப் பண்ணும்படியையும் சரணாகதன் வீதசோகனாய் ஸர்வசேஷிக்கு ப்ரியதமங்களான ஸர்வசேஷ வ்ருத்திகளையும் பண்ணும் ப்ரகாரத்தையும் கணிசிக்கிறது சரம ச்லோகம். இதில் சொன்ன சரண்யனுக்கும் சரணாகதிக்கும் பலத்துக்கும் தேச காலாதிபரிச்சேதமில்லை, ப்ரபத்த்யத்யாதிகளெல்லாம் இதின் விஸ்தாரம்.

எனக்குரியனெனது பரமன்பேறென்னாது
　　இவையனைத்துமிறையல்லா விறைக்கடைத்தோம் *
தனக்கிணையொன்றில்லாத திருமால்பாதம்
　　சாதனமும் பயனுமெனச் சலங்கள்தீர்ந்தோம் *
உனக்கிதமென் றுருபாகனுரைத்ததுற்றே
　　முத்தமனுமவனுதவி யெல்லாங்கண்டோம் *
இனிக்கவருமவை கவரவிகந்தோம் சோக
　　மிமையவரோடொன்றினின மிருக்குநாளே *

(அம்ருதாஞ்சனி 8)

குருபஜநநேத்ரபாஜா மதிதரஹஸ்யேந வேங்கடேசேந,
நவநீதமிவ க்ருஹீதம் நவகமிதம் நித்யமாஸ்வாத்யம்.

ப்ரசமித கலிதோஷாம் ப்ராஜ்யபோகாநுபந்தாம்
ஸமுதிதகுணஜாதாம் ஸம்யகாசாரயுக்தாம்,
ச்ரிதஜநபஹுமாந்யாம் ச்ரேயஸீம் வேங்கடாத்ரேள
ச்ரியமுபசிநு நித்யம் ஸ்ரீநிவாஸ த்வமேவ.

இதி கவிதார்க்கிகஸிம்ஹ ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ரஹஸ்ய நவநீதம் ஸமாப்தம் 5.

ஸ்ரீமத்வேதாந்த தேசிகன் திருவடிகளே சரணம்.

# ஆருவது ரஹஸ்யமான தத்வமாத்ருகா

தத்துவங்களெல்லாம் தகவாலறிவித்து
முத்திவழிதந்தார் மொய்கழலே—அத்திவத்தில்
ஆரமுதமாறு மிரு நிலத்திலென் றுரைத்தார்
தாரமுதலோதுவித்தார் தாம். (அம்ருதரஞ்சனி 9)

ஸதாசார்யோபதேசத்தாலே சாரீரக மூலமந்த்ராதிகளைக்கொண்டு ஸாத்விகருக்கறிய வேண்டும் தத்வம் பரமென்றும் அவரமென்றும் இரண்டு வகையாயிருக்கும்.

(1) பரதத்வமாவது, * நினைந்த வெல்லாப் பொருள்களுக்கும் வித்தாய், ஸர்வ வஸ்துக்களிலும் * உடன்மிசையுயிரெனக் கரந்து, * நந்தாவிளக்கே யளத்தற்கரியாய் * என்றும் * உணர்முழுநலமென்றும் * அளப்பரியவாரமுதை என்றும் * அமலனென்றும் சொல்லுகிறபடியே அத்யத்புத(தம)மாய் குணங்களுக்கும் அதிசயாவஹமாய் திருவுக்கும் திருவாம்படி நிருபாதிக மங்களமான ஸ்வரூபத்தையுடையனாய் * உயர்வற உயர்நலமுடையவன் யவனவன் * என்னும்படி அநவதிகாதிசயாநந்தம் முதலான அநந்தகல்யாண குணங்களையுடையனாய், ஆச்ரிதர் பல பிறப்பும் பிறவாதபடி தான் * எங்நின்றயோனியுமாய்ப் பிறக்கக்கடவனாய், அவர்கள் நாட்டில் பிறந்து படுமவை படாமைக்காகத் தான் பிறந்து படாதனபடக்கடவனாய் தான் சொல்லிற்றுச் செய்யும் தேவப்ரக்ருதிகளுக்குத் தானும் சொல்லிற்றுச் செய்யக்கடவனாய் விபரீதாசரணம் பண்ணும் ஆஸுர ப்ரக்ருதிகளுக்குத்தானும் விபரீதா சரணம் பண்ணக் கடவனாய், தன்னை அந்தராத்மாவென்று நினைத்திருப்பாரைத் தானும் தனக்கு அந்தராத்மாவென்று நினைத்திருக்குமவனாய், தனக்கு ஆத்மாத்மீய ஸமர்ப்பணம் பண்ணினாருக்குத் தானும் ஆத்மாத்மீய ஸமர்ப்பணம் பண்ணக் கடவனான ச்ரிய:பதி புருஷோத்தமன்.

(2) இவன் *பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே யாள்கின்ற வெம்பெருமான் செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார் * என்கிறபடியே உபயவிபூதி நிர்வாஹகனாய் * தன்னொப்பாரில்லப்பனென்றும் * இனனிலனெனனுயிர் மிகுநரையிலனே * என்றும் * ஒத்தார் மிக்காரை யிலையாய மாமாயா * என்றும் சொல்லுகிறபடியே ஸமாதிக தரித்ரனாயிருக்கும்.

(3) அப்ராக்ருதமாய் பஞ்சோபநிஷத் ப்ரதிபாத்ய சுத்த ஸத்வ பஞ்ச சக்திமயமாய் அஸ்த்ரபூஷணரூப விசித்ர தத்வாச்ரயமான திவ்ய மங்கள விக்ரஹ விசேஷத்தாலே விசிஷ்டனாய்க்கொண்டு பரவ்யூஹாதி பஞ்ச ப்ரகாரனாயிருக்கும்.

(4) பரரூபமாவது, நித்யமாய் ஏகரூபமாய் நித்யருக்கும் முக்தருக்கும் ஸேவ்யமாய் * குழுமித் தேவர் குழாங்கள் கைதொழச்சோதி வெள்ளத்தினுள்ளே யெழுவதோருரு * என்றும், * ஆதியஞ்சோதியுரு வென்றும் சொல்லுகிறபடியே * வானுயரின்பம் மன்னி வீற்றிருந்த ரூபம்.

(5) வ்யூஹங்களாவன, இப்பரரூபமடியாக பூர்வ பூர்வத்திற்கு உத்தரோத்தரம் கார்யமாய்க்கொண்டு பிரிந்து * முன்னை வண்ணம் பாலின் வண்ணம் * பாசினீர்மை செம்பொனீர்மை இத்யாதிகளிற்படியே க்ருத த்ரேதாதியுகங்கள் தோறும் மாறி மாறி வரும் நிறங்களையுடைத்தான ரூபங்கள்.

6. அபிமான விசேஷத்தாலே ஜீவமனோஹங்கார சப்தவாச்யங்களான ஸங்கர்ஷண ப்ரத்யும்நாநிருத்த ரூபங்களில் ஜ்ஞாநபலாதிகளில் இவ்விரண்டு குணங்களும் ஸம்ஹார சாஸ்த்ர ப்ரவர்த்தநாதிகளில் இவ்விரண்டு தொழில்களும் உடைத்தாயிருக்கும்.

(7) வாஸுதேவாதிகளான நாலு வ்யூஹங்களிலும் ஒவ்வொரு வ்யூஹத்திலே மும்மூன்றாகப் பிரிந்து * கேசவன் தமரில் சொல்லுகிற திருநாமங்களையுடைய ரூபங்கள் பன்னிரண்டும் வ்யூஹாந்தரங்கள்.

(8) விபவங்களாவன, * மீனாயாமையுமாய் * இத்யாதிகளிற்படியே விபூதிகளோடு ஸஜாதீயங்களாய்த் தோன்றும் ரூபங்கள்.

(9) அவைதன்னிலே தோன்றுவன சில ரூபங்கள் விபவாந்தரங்கள்.

(10) அந்தர்யாமி ரூபமாவது * கண்கள் சிவந்து * இத்யாதிகளிற்படியே—உள்ளே யோகிகளுக்குக் காணலாவதொரு ஸௌக்ஷ்மரூப விசேஷம்.

(11) அர்ச்சாவதாரமாவது * தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே— தமருகந்ததெப்பேர் மற்றப்பேர் * * நெஞ்சினால் நினைப்பான் யவனவனாகும் நீள்கடல் வண்ணன் என்னும்படி ஸ்வயம் வ்யக்த திவ்யார்ஷ (மாநுஷ) வைஷ்ணவ ஸ்தானங்களிலே ஸர்வஸஹிஷ்ணுவாய் அர்ச்சகபாரதந்த்ர்யத்திற்கு எல்லை நிலமாய் சேஷ சேஷிபாவசபளமாய் * பூமேளகதம் பூஜயதாம் ப்ரமேயம் * என்று தானே யருளிச்செய்த ரூபம்.

(12) * தன்னுளே திரைத்தெழும் * இத்யாதிகளிற்படியேநிற்கிற இவ்வஞ்சு ரூபமும் * அகலகில்லேனிறையு மென்றலர்மேல் மங்கையுறையும் படியான சுபாச்ரயமா யிருக்கும்.

(13) * திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் * என்கிறபடியே ஸலக்ஷ்மீகமாக இப்பரதத்வத்தைக் கண்டவன் * மற்றிங்கோர் திருவில்லாப்புதுத் தெய்வம் தேறான்.

(14) இப்படி * சுடர்மிகு சுருதியுள் உளனை ச்ரிய:பதிக்கு சரீரமென்று ப்ரமாண ஸித்தமான அவரதத்வம் சேதநமென்றும் அசேதநமென்றும் இரண்டு வகையாயிருக்கும்.

(15) சேதநமான அவரதத்வமாவது ஜீவசப்தவாச்யமாய் ஸ்வரூபத்தாலும் சக்த்யாதி குணங்களாலும் பரிச்சேதவத்தான அஹமர்த்தம்.

(16) இது ஸ்வயம் ப்ரகாசதையாலும் ஜ்ஞான குணாச்ரயமாகையாலும் ஜ்ஞாநமென்று பேர்பெற்று இரண்டு படியாலும் தனக்குத்தான் தோன்றுமதாய் அநுகூலஸ்வபாவமாய் அதிஸௌக்ஷ்மமாய் திலத்தில் தைலம்போலவும் தாருவில் அக்நிபோலவும் ஸர்வாசேதநங்களிலும் அநுப்ரவேசிக்கவற்றாய் நிர்விகாரமாய் குணத்ரய ரஹிதமாய் * கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலும் ஐங்கருவிகளுக்கும் விஷயமன்றிக்கே நிஷ்க்ருஷ்டவேஷத்தில் தேவத்வ மநுஷ்யத்வாதி பேதங்களில்லாமையாலே தேவ மநுஷ்யாதி சப்த கோசரமன்றிக்கே ஸர்வாத்மஸாதாரணங்களான அஹம்புத்தி சப்தங்களாலே தந்தாமுக்கு அநுபாவ்யமாயிருக்கும்.

(17) நானென்கிற அர்த்தந்தானே பரபுத்தி விஷயமாம்போது * அவனிவனுவனெவன் என்றும் நீ என்றும் தோற்றும்.

(18) இஜ்ஜீவதத்வம் பத்தரென்றும் பந்தரஹிதரென்றும் இரண்டு படியாயிருக்கும்.

(19) பத்தராவார் * பல செய்வினை வன்கயிற்றால் திண்ண மழுந்தக் கட்டுண்டு பெருந்துயரிடும்பையிலே மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து * மண்ணாய் நீரெரிகால் மஞ்சுலாவுமாகாசமுமாம் புண்ணாராக்கையின் வழியுழன்று * நாநாவித நரகம்புகும் பாவம் செய்து * சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவில் பெரும்பாழிலே * பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும் இந்நின்ற நீர்மையென்னும்படி தன்னுருக்கெடுத்து வேற்றுருக்கொண்டு * ஆவாரார் துணை யென்றலை நீர்க்கடலுளழுந்தும் நாவாய்போல் பிறவிக்கடலுள் நின்று துளங்குகிற சேதநர்.

(20) இவர்களுக்கு அநாதியான கர்ம ப்ரவாஹ வைஷம்யத்தாலே அவ்வோபோகங்களுக்குப் போலே அவஸர ப்ரதீக்ஷபகவத் க்ருபாமூலமான மோக்ஷத்திற்கு முற்பாடு பிற்பாடுகளுண்டாம்

(21) பந்த ரஹிதர் முக்தரென்றும் நித்யரென்றும் இரண்டு வகை

(22) முக்தராவார் * எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்கும் கண்டீர் * என்னும்படி * நடுவே வந்துய்யக்கொள்கின்ற நாதன் திருவருளாலே * கருவிலே திருவுடையராய் * பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து பாதவிலச்சினை வைத்து ஜ்ஞாநக்கை தர, * யானே யென்றனதே என்கிற அஹங்கார மமகாரங்களாகிற படுகுழியில் நின்றுமேறி * ஒண்டொடியாள் திருமகளும் திருமகள் சேர்மார்பனுமே நிலாநிற்பக்கண்டசதிர்கண்டு ஐங்கருவி கண்டவின்பம் தெரிவரியவளவில்லாச் சிற்றின்பம் ஒழிந்து, களைகண் மற்றின்றி நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கென்று திருநாரணன் தாள் காலம்பெறச் சிந்தித்து, புகலொன்றில்லா வடியேனுன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே * என்று அடைக்கலம் புகுந்தவென்னை அஞ்சலென்ன வேண்டுமென்றும் * தொன்மாவல்வினைத்தொடர்களை முதலரிந்து * மங்கவொட்டுன்மாமாயை * மாயம் செய்யேலென்னை * என்றும் விளைத்து * ஆக்கை விடும் பொழுதெண்ண * பாவமெல்லாம் சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்து அமரரோடுயர்வில் சென்று, * மன்னும் கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்னடுவுள் அன்னதோரில்லியினூடுபோய் இமையோர் வாழ் தனி முட்டைக் கோட்டையினில் கழித்து வாட்டாற்றான் பணிவகையே வானேறப்பெற்று, * ஆண்மின்கள் வானகம் ஆழியான் தமரென்று வாளொண்கண் மடந்தையர் வாழ்த்த, கொடியணி நெடுமதிள் கோபுரம் குறுகி, வாசலில் வானவர் வைகுந்தன் தமரெமரெமதிடம் புகுதென்று, விதிவகை புகுந்தனரென்று நல்வேதியர் பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவ, நிதியும் நற்சுண்ணமும் நிறைகுட விளக்கமும் மதிமுக மடந்தையர் ஏந்தி வந்தெதிர்கொள்ள, தன்மை பெறுத்தித் தன் தாளிணைக் கீழ்க்கொள்ளுமப்பன் கொழுஞ்சோதியுயரத்துக் கூட்டரிய திருவடிக்கண் கூட்ட, அவன் தாளிணைக்கீழ்வாழ்ச்சி பெற்று, அடியார்கள் குழாங்களுடன் கூடி மாமணி மண்டபத்தில் அந்தமில் பேரின்பத்தடியாரான நித்ய ஸூரிகளோடு நிரையொக்கவிருந்து அனைத்துலகுமுடைய அரவிந்த லோசனனைத் தினைத்தனையும் விடாதேயநுபவித்து ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்து வாழும்படி வீடு திருத்துவான் பக்கல் வீடு பெற்றவர்கள்.

(23) நித்யராவார்—நித்யமான பரிபூர்ணபகவ தநுபவத்தை யுடையராய் வடிவுடை வானவரென்றும் முடியுடைவானவரென்றும் வைகுந்தத்தமரரென்றும் ஸூரிகளென்றும் ஸாத்ய தேவர்களென்றும் சொல்லப்பட்ட அனந்த கருட விஷ்வக்ஸேநாதிகளான அயர்வறுமமர்கள்.

(24) பத்தருக்கு கர்மப்ரவாஹமநாதியாய் அந்தவத்தாயிருக்கும்.

(25) முக்தருக்குக்கைங்கர்ய ப்ரவாஹமாதிமத்தாய் அந்தரஹிதமாயிருக்கும்.

(26) நித்யருக்கு பகவதபிமத விபரீத ருசியில்லாமையாலே ஒரு காலத்திலும் கர்ம ஸம்பந்தமின்றிக்கே அதிகாரி நியமத்தோடே கூடின கைங்கர்ய ப்ரவாஹம் அநாத்யந்தமாயிருக்கும்.

(27) இப்படி ஷட்விம்சகனென்றும் பஞ்சவிம்சகனென்றும் பிரிக்கப்பட்ட தத்வங்களில் பரமாத்மாவுக்கு ஸர்வாவஸ்தையிலும் ஸ்வாச்ரித விஷயத்திலுள்ள பாரதந்த்ர்ய சேஷத்வங்கள் ஸ்வாதந்த்ர்ய நிபந்தனங்களாயிருக்கும்.

28. ஜீவாத்மாக்களுக்கு ஸர்வாவஸ்தையிலும் ஸ்வவ்யாபாராதிகளிலுள்ள ஸ்வாதந்த்ர்யசேஷித்வங்கள் பாரதந்த்ர்ய நிபந்தனங்களாயிருக்கும்.

(29) இப்படி பரமசேஷியாயும் த்வாரசேஷியாயுமுள்ள பராவராத்மாக்களிருவரிலும் வேறுபட்ட அசேதந தத்வம் த்ரிகுணமென்றும் அத்ரிகுணமென்றும் இரண்டு வகையாயிருக்கும். அத்ரிகுணம் காலமென்றும் சுத்தஸத்வமென்றும் இரண்டு வகையாயிருக்கும்.

(30) அசேதநத்ரவ்யமான தர்மபூத ஜ்ஞாநத்தோடே கூட நாலுவகையென்று எண்ணலாயிருக்க இத்தை சரீரமாகக்கொள்ளாமையாலும் ப்ரயோஜந விசேஷத்தாலும் இவை மூன்றையும் வகுத்து அநுஸந்தித்தார்கள்.

(31) த்ரிகுணமாவது—ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்களுக்கு ஆச்ரயமான த்ரவ்யம்.

(32) ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்களாவன—அடைவே ஜ்ஞாநஸுகாதிகளுக்கும் ராகதுக்காதிகளுக்கும் ப்ரமாத மோஹாதிகளுக்கும் ஹேதுக்களான குணவிசேஷங்கள்.

(33) இத்த்ரிகுணத்தினுடைய காரணதசையையும் கார்யதசையையும் கூட * பிரகிருதிமானுங்கார மனங்கள் * பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூதம் * என்றும் பிரித்து சாஸ்த்ரம் சொல்லாநிற்கும்.

(34) இவற்றில் குணஸாம்யத்தையுடைய மூலப்ராக்ருதியில் ஒரு ப்ரதேசத்திலே பகவத்ஸங்கல்ப நியதகாலமான குண வைஷம்யமடியாக ஸாத்விகராஜஸ தாமஸங்களென்று பிரிவையுடைத்தான மஹாந் பிறக்கும்.

(35) இதில் நின்றும் இவ்வடைவே ஸாத்விகராஜஸ தாமஸாஹங்காரங்களுண்டாம்.

(36) ராஜஸாஹங்காரம் துணையாக ஸாத்விகாஹங்காரத்தில் நின்றும் ஏகாதசேந்திரியங்களும் தாமஸாஹங்காரத்தில் நின்றும் தந்மாத்ரைகளை யிடையிட்டுக்கொண்டு பஞ்சபூதங்களும் உத்பந்நங்களாம்.

(37) பூதங்களுக்கு உபாதாநங்களான சப்தாதி தந்மாத்ரைகளும் பூதங்களுக்கு குணங்களான சப்தாதிகளும் வேறுபட்டவை,

(38) இப்பூதங்களைந்திலும் குணங்களைந்தும் நிற்குமடைவை * பூநிலாய வைந்துமாய் * என்கிற பாட்டின்படியே அநுஸந்திப்பது.

(39) இப்படி மஹதாதிகளான தத்வங்களும் இவற்றின் கலசுதலடியாகப் பிறக்கும் அநந்தங்களான ப்ரஹ்மாண்டங்கள் முதலான கார்யங்களுமெல்லாம் த்ரிகுணத்ரவ்யம கிற பெருங்கடலிலலைகளும் நுரைகளும் குமிழ்களும்போலே ஆவதழிவதாய் வருகிற ப்ரவாஹம் அநாதியாக விச்சேதமறப்பொருகைக்கடி * பலபலமாய மயக்குக்களால் இன்புறுமிவ்விளையாட்டுடையானுடைய இச்சாநுவர்த்தியான காலமநாதியாய் அநந்தமாய் நடக்குமென்னுமிடத்தை * அநாதிர் பகவாந் கால : * இத்யாதிகளிலே கண்டு கொள்வது.

(40) காலமாவது—எதிர் நிகழ்கழிவென்றும் முன்பு பின்பு ஒருகாலம் பலகாலம் என்றுப்போலே சொல்லுகிற பாசுரங்களுக்கு இலக்காயிருப்பதொரு த்ரவ்ய விசேஷம்.

(41) இதில் இறைப்பொழுது முதலாக நாள் திங்கள் ஆண்டூழிகல்பம் பரார்த்தம் த்விபரார்த்தம் மஹாகல்பம் என்றுப்போலே சொல்லுகிற எல்லைகளெல்லாம் ஸ்வதந்த்ர ஸங்கல்பமாகிற சூறுவளிக்காற்றாலே சுழன்றுவாராநின்றால் கழிந்தக்ஷணங்களும் கல்பங்களும் வரும்க்ஷணங்களும் கல்பங்களும் அநந்தங்களாய் இவற்றாலே லீலாவிபூதியிலுள்ள கார்யங்களுக்கு உத்பத்தி ஸ்திதி நாசவ்யவஸ்தை யுண்டாயிருக்கும்.

(42) சுத்த ஸத்வத்தில் இக்காலதத்வமுண்டேயாகிலும் அங்குள்ள கார்யங்களினுடைய உத்பத்த்யாதிகளுக்கு இக்கடைத்த காலவிசேஷம் நியாமகமன்று.

(43) சுத்த ஸத்வமாவது குணத்ரயாஹிதமாயும் குணத்ரயாச்ரயமாயுமுள்ள த்ரவ்யங்களிற் காட்டில் வேறுபட்டு விலக்ஷணமான ஸத்வகுணத்திற்கு ஆச்ரயமான த்ரவ்யம்.

(44) இதின்படியைப் பார்த்தால் பரமயோகி வாங்மநஸாபரிச்சேத்ய ஸ்வரூப ஸ்வபாவமாய் சேணுயர் வானமென்றும், தெளிவிசும்பென்றும் பொன்னுலகென்றும் கலங்காப் பெருநகரென்றும் மாநவைகுந்தமென்றும் சொல்லப்பட்ட வேறுபாட்டையுடைத்தாய் ப்ரஹ்மாதி பதங்களுமெல்லாம் நரகதுல்யங்களாய் தோற்றும்படி அபரிமிதைச்வர்யங்களான போக்ய போகோபகரண போகஸ்தானங்களை யுடைத்தாய் ஸர்வேச்வரனுக்கும் நித்யருக்கும் முக்தருக்கும் விக்ரஹாதிரூபேண விசித்ர ப்ரவாஹமாயிருக்கும்

(45) இப்படி அநந்தங்களான ஜநபத நகர விமானமண்டப கோபுராதி விபாகங்களை யுடைத்தான திவ்யலோகத்தில் ப்ரதாநதமமான திருமாமணி மண்டபத்திலே அநந்ததேவதாத்மகமான திவ்யயோகபர்யங்க விசேஷத்திலே த்ரிவிதசேதநரையும் த்ரிவிதாசேதநங்களையும் ஸ்வாதீனங்களாக்கிக்கொண்டு * வைகுண்டே து பரே லோகே * இத்யாதிகளிற்படியே ஸர்வ சேஷியான ச்ரிய:பதியெழுந்தருளியிருக்கும்படி முமுக்ஷுதசையில் நித்யாநுஸந்தேயமாய் முக்த தசையில் நித்யாநுபாவ்யமாயிருக்கும்.

(46) இப்பராவர தத்வங்க ளிரண்டுக்கும் ஓரோராகாரங்களாலே ஸாதர்ம்யமுண்டே யாகிலும் விசேஷாகாரங்களாலே வேறுபட்டு சேஷசேஷிபாவ நியந்த்ரு நியாம்யபாவ-வ்யாப்ய வ்யாபகபாவ ஆதாராதேயபாவாதிகளாலே இவையொன்றி நிற்கும் நிலே—ப்ரணவத்திலும் ஸத்யசப்தத்திலும் புருஷ சப்தத்திலும் நாராயண சப்தத்திலும் புருஷோத்தம சப்தத்திலும் * கறந்தபாலுள் நெய்யே போல் * * அடியேனுள்ளானுடலுள்ளான் * ஊனிலுயிரிலுணர்வினில் நின்றவொன்றை * உலகு நின்னெடொன்றிநிற்க வேறு நிற்றி * இத்யாதிகளிலும் சுருங்கவநு ஸந்திக்கலாம்.

(47) ஒன்றையறிகையும் அதினறிவடியாக வ்யாபரிக்கையும் ஒரு பலத்தை புஜிக்கையும் தனக்குத்தான் தோன்றுகையுமில்லாத த்ரவ்யம் அசேதநதத்வம்.

(48) இவற்றைப் பராதீனமாகவுடையது ஜீவதத்வம்.

(49) த்ரிவித சேதநா சேதநங்களுடைய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகள் மூன்றும் தானிட்டவழக்காம்படி நிற்கிறது பரதத்வம்.

(50) இத் தத்வ விவேகத்திற்கு ப்ரயோஜநம் தன் விசேஷணங்களையறியாமையாலே வருகிற ப்ரக்ருத்யாத்ம ப்ரமமும் தன் விசேஷ்யத்தை யறியாமையாலே வருகிற ஸ்வதந்த்ராத்ம ப்ரமமும் கழிந்து தன் ஸ்வரூபத்திற்கு த்யாஜ்யோபாதேய புருஷார்த்தங்களைத் தெளிந்து விபரீதாபிஸந்தி நிவ்ருத்தியும் ப்ராப்யருசியும் பிறந்து ப்ராபக ஸாபேக்ஷதை.

திருநாரணனெனும் தெய்வமும் சித்துமசித்துமென்று
பெருநான்மறைமுடிபேசிய தத்துவ மூன்றிவைகேட்டு
ஒரு நாளுணர்ந் தவருய்யும் வகையன்றி யொன்றுகவார்
இருநாலெழுத்தி னிதையங்களோதியவெண்குணரே.

காரணமா யுயிராகியனைத்தும் காக்கும் கருணைமுகில் கமலையுடனிலங்குமாறும்
நாரணனர் வடிவான வுயிர்களெல்லாம் நாமென்று நல்லடிமைக்கேற்குமாறும்
தாரணிநீர் முதலான மாயைகாலம் தனிவா னென்றிவையுருவாம் தன்மை தானும்
கூரணிசீர் மதியுடைய குருக்கள் காட்டக் குறிப்புடன் நாம் கண்டவகை கூறினேமே.

(அம்ருதரஞ்சனி 10—11)

ஸ்தநந்தயைரபி ஸஹஸைவ ஸாக்ரஹா ஸமுத்திதா நிதிரிவ வேங்கடேச்வராத்,
பராவரஸ்திதி மிஹ தத்வமாத்ருகா கரோத்யஸௌ கரதலமௌக்திகோபமாம்.

அக்ஷய்யசாந்தி மகரந்தரஸப்ரஸக்தாந் அப்யர்த்தயே முரபிதங்க்ரி ஸரோஜப்ருங்காந்,
காமம் ப்ரஸீதத யதாஹமநந்யபாவ: கர்ணம்ருதாநி பவதாமவதாரயேயம்.

இதி கவிதார்க்கிகஸிம்ஹ ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர ஸ்ரீமத் வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு தத்வமாத்ருகா ஸமாப்தா 6.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாயநம:

# ஏழாவது ரஹஸ்யமான ரஹஸ்யமாத்ருகை

அப்படி நின்றவமலன்படியெல்லாம்
இப்படியெம் முள்ளத்தெழுதினர்—எப்படியும்
ஏரார் சுருதியொளியாயிருள் நீக்கும்
தாராபதியனையார் தாம் (அம்ருதரஞ்சனி 12.)

திருமந்த்ரத்தில் மூலமாகிய ஒற்றையெழுத்தான முதல் பதத்தில் முதலெழுத்திலே ச்ரிய:பதியினுடைய ஸர்வஜகத் காரணத்வமும் ஸர்வரக்ஷகத்வமும் நித்யநிருபாதிக ஸர்வ சேஷித்வமும் ஜீவனுடைய நித்ய நிருபாதிகசேஷத்வமும் இதின் நடுவெழுத்திலே ச்ரிய: பதிக்கு நிருபாதிகசேஷபூதனான ஜீவன் மற்றொருவர்க்குரியனல்லாதமையும், மூன்றுமெழுத்திலே ஜீவனுடைய (லக்ஷணமான) தேஹேந்த்ரியாதிகளில் வேறுபாடும் அறிவானமையும் அறிவுடையனானமையும் இரண்டாகாரத்தாலும் ஆனந்த ஸ்வரூபனாயும் ஸ்வயம் ப்ரகாசனாயுமிருக்கும்படியும் தனக்குத்தான் தோற்றும்படியும் அணுவானமையும், (நம:) என்கிற இரண்டாம்பதத்திலே இஜ்ஜீவன் அநாதியாக விரோதிகையிலே அகப்பட்டு நின்றமையும், தான் ஒன்றையும் பற்ற நிருபாதிக சேஷியல்லாமையும் ஒரு கார்யத்திலும் நிரபேக்ஷ கர்த்ருத்வமில்லாமையும் ஸ்வதந்த்ரஸ்வாமியாலே பாகவதசேஷமாக விநியுக்தனானபடியும் அநந்யோபாயத்வமும் உபாய விசேஷ பரிக்ரஹமும் * நலந்தரும் சொல்லான நாராயண சப்தத்தில் அசித்தினுடைய ஸ்வரூபாந்யதாபாவமும் ஜீவர்களுக்கு ஸ்வரூபாந்யதாபாவ மில்லாமையும் க்ஷேத்ரஜ்ஞருடைய ஸ்ருஷ்டிஸம்ஹார விஷயத்வமும் சேதநவர்க்கத்தினுடைய ஆநந்த்யமும் ஸர்வநியந்தாவினுடைய ஸ்வரூபஸ்வபாவ நித்யத்வ ப்ரகாரமும் நேத்ருத்வமும் ஸர்வவ்யாபகத்வமும் ஸர்வாதாரத்வமும் ஸர்வவிதபந்துத்வமும் ஸர்வவித புருஷார்த்தோபாயத்வமும் முக்தப்ராப்யத்வமும் நாராயண சப்தத்தில் சதுர்த்தியிலே * ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்யவேண்டும்படியும் ப்ரதானமாக வநுஸந்தேயம்.

இப்படி திருமந்த்ரத்தில் ஸர்வவேதங்களுக்கும் விதையான முதல் பதத்திலே முளைத்து இரண்டாம் பதத்திலே வளர்ந்து மூன்றும் பதத்திலே பலபர்யந்தமான ஸம்யக்ஜ்ஞாநத்தையுடையவனுக்கு அநுஷ்டேயமான ஸாங்கபர ஸமர்ப்பணத்தை விசதமாக ப்ரகாசிப்பிக்கிற த்வயத்தில் ப்ரதமாக்ஷரமான ஸ்ரீ சப்தத்திலே விஷ்ணுபத்நியாய் புருஷகார பூதையான * வேரி மாறாத பூமேலிருப்பாள் வினைதீர்க்கும் ப்ரகாரங்களும் அதின் மதுப்பிலே அலர்மேல்மங்கை அசரண்ய சரண்யனானவன் மார்பிலே, * அகலகில்லேனிறையுமென் றுறையும்படியும், நாராயண சப்தத்தில் * நிகரில் புகழாய் * இத்யாதிகளில் அருளிச்செய்த சரண்ய ஸ்வபாவமும் சரண சப்தத்தில் உபாயோபேயதசைகளை ஊடுருவி நிற்கிற திவ்யமங்கள விக்ரஹயோகமும் (சரணம்) என்கிற சப்தத்திலே * நின் சரணல்லால் சரணில்லை * என்று கழல்களவையே சரணாகக் கொள்ளுகிறபடியும் (ப்ரபத்யே) என்கிற பதத்திலே கத்யர்த்தமான தாதுவில் ப்ரமாணாநுஸாரத்தாலே அத்யவஸாயாதி பூர்வகமாக அடிக்கீழமர்ந்து அடைக்கலம் புகுகிறபடியும், இப்பதத்தில் உத்தமனிலே * களைகண்மற்றிலேன் என்னும்படி தானும் தமரும் பிறரும் தனக்குத் தஞ்சமன்றிக்கே * புகலொன்றில்லா வடியேன் என்று நிற்கிற நிலையும், (ஸ்ரீமதே) என்கிற பதத்திலே * பூவளரும் திருமகளால் பொன்னுலகிலருள் பெறுமவனுக்கு * கோலத்திருமாமகளோடுன்னை யென்னும்படி நின்ற ப்ராப்யதம்பதிகளுடைய பிரிவற்ற சேர்த்தியும், (நாராயணாய) என்கிற பதத்திலே வழுவிலாவடிமைக்கு வகுத்த சேஷியினுடைய நிரதிசய போக்யத்வமும் நமச்சப்தத்திலே ஸர்வ விரோதி நிவ்ருத்திதசையில் வரும் கைங்கர்யங்களையற்று யிருக்கும்படியும் ப்ரதானமாக வநுஸந்தேயம்.

இம்மந்த்ரங்களிரண்டிலும் தோற்றுகிற அநுஷ்டானத்திற்கு விதாயகமான சரமச் லோகத்தில் (ஸர்வதர்மாந்) என்கிற பதத்திலே * குறிக்கொள் ஜ்ஞானங்களாலே பண்ணு மருந்தவங்களினுடைய நாநாவிதத்வமும் (பரித்யஜ்ய) என்கிற பதத்திலே போக்கற்றவன் ப்ரஹ்மாஸ்த்ரதுல்யையான ப்ரபத்தியைப் பண்ணும்போது அநபேக்ஷிதங்களிலும் தனக்கு சக்யமல்லாதவற்றிலும் துவக்கற்று வெறுமையே துணையாக முன்னிடும்படியையும், (மாம்) என்கிற பதத்திலே * மலர்மகள் விரும்பும் நமரும் பெறலடிகள் பத்துடையடியவர்க் கெளிய வனாய், அருள்புரிந்த சிந்தையடியார் மேல்வைத்து அடைக்கலம் கொள்ள ஒருப்பட்டு நிற்கிற நிலையும் (ஏக) மென்கிறபதத்திலே * தாமரையாள் கேள்வனொருவனே பற்றிலார் பற்ற நிற்கிற படியும், (சரணம்) என்கிற பதத்திலே அசரண்ய சரண்யன் விபரீதாபிஸந்தியற்ற தேவப்ர க்ருதிகளுக்கு வன்சரணாய் தன் சரண் நிழல்கீழ் வைக்க வருத்தமையும், (வ்ரஜ) என்கிற பதத் திலே * நெறியெல்லாமெடுத்துரைத்த நிறைஞானத்தொரு மூர்த்தி தந்தஞானக்கையாலே * நின்னிலங்கு பாதமன்றி மற்றோர் பற்றிலேனென்று நாமவனைப்பற்றலாம்படி தன் பாதமே சரணாகத் தந்தொழிந்தமையும், (அஹம்) என்கிறபதத்திலே * வல்லைகாணென்னும்படியான ஸர்வசக்தி * கொழுஞ்சோதியுயரத்துக் கூட்டரிய திருவடிக்கள் கூட்டியடிமைகொள்ள ஒருப் பட்டபடியும், (த்வா) என்கிற பதத்திலே * நின்னருளே புரிந்திருந்தே னென்றிருக்கிற க்ருத க்ருத்யனை * ஆரால் குறைவுடைய மென்னும்படி சாதக வ்ருத்தியாக்கினபடியும் (ஸர்வபா பேப்ய:) என்கிறபதத்திலே * நானே நாநாவித நரகம்புகும்பாவம் செய்தேனென்றும் * நம்மன் போலே வீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ள பாவமெல்லாம் * என்றும் சொல்லுகிறபடியே * எண்ணாரத்துயர் விளைக்கும் * வல்வினையே மாளாதோ * என்னும்படி எண்ணிறந்து கிடக்கிற படியும் (மோக்ஷயிஷ்யாமி) என்கிறபதத்திலே * இருள் தருமா ஞாலத்துள் இனிப்பிறவி கழிந்து மருளொழிந்த மடநெஞ்சமுடையார்க்கு வேண்டிற்றெல்லாம் தரும் வள்ளல் மணி வண்ணன் விண்ணுலகம் தரவிரைந்து சார்ந்தவிரு வல்வினைகளும் சரித்துமாயப்பற்றறுத்து தீர்ந்து தன் பால் மனம் வைக்கத்திருத்தி வீடு திருத்துகிறபடியும் (மாசுச:) என்கிற வாக்யத் திலே * உழலையென்பில் பேய்ச்சிமுலை யூடவளையுயிருண்டான் கழல்களவையே சரணாகக் கொண்டு * செய்தவேள்வியர் * திருமால் தலைக்கொண்ட நங்கட்கு எங்கே வரும் தீவினையே * கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை நான் கண்டேன் * என்று தெளிவுற்ற சிந்தையாலே தேறி, யாவச் சரீரபாத மாஜ்ஞாநுபாலனத்தாலே அக்ஷீந்த்ராதி சப்தங்களை ப்ரயோகிக்கு மளவிலும் அந்யதேவதாபிஸந்தியற்ற ஸ்வயம் ப்ரயோஜந கைங்கர்ய ரஸத்தாலே க்ருதார்த்த னாயிருக்கும்படியும் ப்ரதானமாக அநுஸந்தேயம். இப்படி திருமந்த்ராதிகளில் முற்பட சிக்ஷிக்குமர்த்தமே மோக்ஷசாஸ்த்ரங்களில் முதல் நடுவிறுதியாக முகம்மாறிக் கோக்கிற வர்ண ஸரங்களுக்கெல்லாம் மாத்ருகை.

செம்பொற்கழலிணைச் செய்யாளமரும் திருவரங்கர்
அன்பர்க்கடியவராயடி சூடியநாமுரைத்தோம்
இன்பத்தொகையெனவெண்ணிய மூன்றினெழுத்தடைவே
ஐம்பத்தொரு பொருளாருயிர் காக்குமமுதெனவே. (அம்ருதாஞ்சனி 13.)

பஹுச்ருதைரியமதுநாமிதப்ரியைரரங்க்ரமா தநுதிநபோகலாலஸை:,
ரமாபதேள நிஹிதபரைருதீரிதா ரஸாவஹா பவதி ரஹஸ்யமாத்ருகா.

ரஹஸ்யமாத்ருகா ஸேயம் வேங்கடேசவிபச்சிதா,
விசுத்ததேசிகவதா ரங்கதாம்நி வ்யலிக்யத.

இதி கவிதார்க்கிகஸிம்ஹ ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர ஸ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ரஹஸ்யமாத்ருகா ஸமாப்தா 7.

ஸ்ரீ தேசிகன் திருவடிகளே சரணம்.

# எட்டாவது ரஹஸ்யமான தத்வஸந்தேசம்

ஸ்வாதீனத்ரிவிதேத்யாதே ரபிப்ராய : ப்ரகாச்யதே,

கஸ்யசித்தத்வ நிஷ்டஸ்ய காம்க்ஷிதப்ரதிபத்தயே.

ஸர்வமந்த்ர ப்ரதானங்களான வ்யாபகமந்த்ரங்கள் மூன்றிலும் சேர ஸர்வாதார பூதனுமாய் ஸர்வ சரீரியாய் நிற்கிற நிலையிலே இவனை ஸ்வாதீன த்ரிவித சேதநா சேதந ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதனென்று ஸ்ரீ ஆளவந்தாரும் ஸ்ரீ பாஷ்யகாரரும் அருளிச் செய்தார்கள். இதில் (ஸ்வாதீந) என்கிற சப்தத்தாலே ஸ்வரூபாதீனத்வமும் இச்சாதீனத்வமும் ஸங்க்ருஹீதம். இவை யிரண்டும் சரீராத்மபாவச் ச்ருத்யாதி ஸித்தம். இவற்றில் ஸ்வரூபாதீனத்வமும் ஈச்வரஸ்வரூபவ்யதிரிக்த ஸர்வ வஸ்துக்களுக்கும் யதா ஸம்பவம் வ்யவஹிதாவ்யவஹிதபேதவத்தாயிருக்கும். ஈச்வரேச்சாதீனத்வம் ஜீவேச்சாதீன(தத்வ)ங்களிலும் ஏகரூபம். இவற்றில் வைத்துக்கொண்டு நித்யங்கள் நித்யேச்சா ஸித்தங்களாயிருக்கும். அநித்யங்கள் காலாவச்சிந்நங்களாகையாலே அநித்யேச்சாஸித்தங்களாயிருக்கும். நித்யங்களுக்கு நித்யேச்சாஸித்தத்வமாவது இவனுடைய இச்சையில்லாதபோது அநித்யம்போலே இல்லையாக ப்ரஸங்கிக்கு மென்னும்படி நிற்கை. இவ்வர்த்தத்தை * இச்சாதஏவ தவ விச்வபதார்த்த ஸத்தா * என்கிற ச்லோகத்தாலே ஆழ்வானருளிச்செய்தார். இவற்றில் ஸவரூபாயத்தமாகையாலே ஆதேயத்வமும் இச்சாயத்தமாகையாலே ஆதேயத்வத்தோடே கூட விதேயத்வ சேஷத்வங்களும் தோற்றுகிறன. * உபாதத்தே ஸத்தாஸ்திதி நியமநாத்யைச்சிதசிதௌ ஸ்வமுத்திச்ய ஸ்ரீமாந் * என்கிறபடியே ஈச்வரேச்சோபாத்தங்களாயிறே இவை இவனுக்கு சேஷங்களாகிறது.

த்ரிவிதசேதநரென்றது அநுவ்ருத்த ஸம்ஸாரராயும் நிவ்ருத்தஸம்ஸாரராயும் ஸம்ஸாராத்யந்தாபாவவான்களாயுமுள்ள பரதந்த்ர சேதநரைச் சொல்லுகிறது. பத்தசேதநர் தங்களுக்கே முக்ததசையாகையாலே தர்மிபேதமில்லையாயிருக்க நித்யருக்குப் போலே முக்தருக்கும் பத்தரில் காட்டில் அத்யந்த வைஷம்யம் தோற்றுகைக்காக ஜீவத்ரைவித்யம் சொல்லப்படுகிறது. த்ரிவித சப்தம் த்வந்த்வாத் பூர்வமாகையாலே அசேதந சப்தத்தோடு மந்வயிக்கிறது. த்ரிவிதா சேதநங்களென்றது வ்யக்தாவ்யக்த காலங்களென்றும் சிலர் சொல்லுவர்கள். அவர்களும் த்ரிகுண காலவிலக்ஷணமான சுத்த ஸத்வரூபா சேதநத்தை ஈச்வர நிரூபணத்திலே சுபாச்ரயவிக்ரஹாதிரூப விசேஷணமாகச் சேர்த்தநுஸந்திப்பார்கள். த்ரிகுண கால சுத்த ஸத்வங்களென்கிற மூன்றையும் த்ரிவிதா சேதநங்களென்று சிலர் நிரூபிப்பார்கள். இவற்றை அசித்துக்களென்றும் அசேதநங்களென்றும் சொன்னது இவற்றிற்கு ஜ்ஞாநாச்ரயத்வ மில்லாமை யடியாகவாகையாலே. அப்ராக்ருதாசித்தென்று ஒன்றைச் சொல்லலாமோ? அப்ராக்ருதமான ஆத்மாவைப்போலே சித்தென்ன வேண்டாவோ வென்கிற சோத்யத்திற்கு ப்ராக்ருதங்களன்றிக்கே அசித்துக்களாயிருக்கிற காலாதிகளை த்ருஷ்டாந்தமாக்கி பரிஹாரம் சொல்லுவது. அசேதநத்வமுண்டாயிருக்க ஜ்ஞாநரூபத்வவசனபலத்தாலே தர்மபூத ஜ்ஞாநத்திற்குப் போலே சுத்தஸத்வத்திற்கும் சிச்சப்தவாச்யத்வமுமுண்டென்று சிலர் சொல்லுவார்கள். இங்கு அசேதநத்வம் ஒருஜ்ஞாநத்திற்கு ஆச்ரயமில்லாத தர்மபூதஜ்ஞாநத்திற்கும் ஸமாநம். இது த்ரிவித சேதநோபபாதநத்திலே விசேஷணமாய்க்கொண்டு ப்ரதிபாதிதமாகையாலே பிரியச் சொல்லப்பட்டதில்லை. ஸர்வ வஸ்துக்களுக்கும் ஸாதர்ம்யமும் வைதர்ம்யமும் ப்ரமாண நியதமாகையாலே யதாப்ரமாணமங்கீகார்யம்.

இச்சேதநா சேதநங்களுக்கு ஸ்வரூபமாவது—ஸ்வாஸாதாரணமான தர்மத்தாலே நிரூபணீயமான தர்மி. ஸ்திதியாவது—இதினுடைய காலாந்தராநுவ்ருத்தி. ப்ரவ்ருத்தியாவது—வ்யாபாரம்: நிவ்ருத்தி ரூபவ்யாபாரமும் ப்ரவ்ருத்தி விசேஷம். இச்சேதநா சேதநங்களுடைய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகளில் மூன்றுக்கும் பேதமென்றது. அவ்வோ ப்ரமாணங்கள் சொன்னபிரிவு. இங்கே ஸ்வாதீனேத்யாதியாலே நாநாப்ரகாரமான ஈசேசிதவ்யபேதத்தையும் ஈசிதவ்யங்களில் சேதநா சேதந பேதத்தையும் அவை தன்னில் அவாந்தரபேதத்தையும் தர்மி தர்மபேதத்தையும் வேதாந்த ஸித்தாந்தத்தில் ப்ரதாநப்ரதிதந்த்ரங்களையும் பேதாபேத கடகச்ருத்யாதிகளின்படியே யநுஸந்திப்பது. இந்த ஈச்வரதத்வத்தையும் ஈசிதவ்ய தத்வங்களையும் இப்படி பிரியவநுஸந்தித்து ஏகதத்வ மென்பார்க்கு ஸ்வநிஷ்டமான விசிஷ்டதத்வம் ஏகமென்கையிலே தாத்பர்யம். இவ்வீச்வரதத்வமிருக்கும்படியை * ஏகச்சாஸ்தா ந த்வித்ீயோஸ்தி சாஸ்தா * சாஸ்தா விஷ்ணுரசேஷஸ்ய * ஜகத் ஸர்வம் சரீரம் தே * * ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ: *. இத்யாதிகளில் கண்டுகொள்வது. த்ரிவிதசேதநருடைய ப்ரகாரங்களை * ப்ரஹ்மாத்யாஸ்ஸகலா தேவா மநுஷ்யா: பசவஸ்ததா, விஷ்ணுமாயாமஹாவர்த்தமோஹாந்த தமஸாவ்ருதா: * * இதம் ஜ்ஞாநமுபாச்ரித்ய மம ஸாதர்ம்ய மாகதா:, ஸர்க்கேபி நோபஜாயந்தே ப்ரளயே ந வ்யதந்தி ச * * யத் வை பச்யந்தி ஸூரய: * இத்யாதிகளிலே அறிவது. த்ரிவிதா சேதநத்தின்படியை * அசேதநா பரார்த்தா ச நித்யா ஸததவிக்ரியா, த்ரிகுண கர்மிணும் க்ஷேத்ரம் ப்ரக்ருதே ரூபமுச்யதே. அநாதிர்பகவான் காலோ நாந்தோஸ்ய த்விஜ வித்யதே, அவயுச்சிந்நாஸ் ததஸ்த்வேதே ஸர்க்கஸ்தித்யந்தஸம்யமா:. திவ்யம் ஸ்தானமஜரம் சாப்ரமேயம் துர்விஜ்ஞேயம் சாகமைர்கம்யமாத்யம் * இத்யாதிகளிலே காண்பது.

தமஸ்ஸூக்ஷ்மனந்தரமாய் அக்ஷரமென்றோதப்பட்ட த்ரிகுணபரிணாம விசேஷமே பரமபதமென்றும் காலமும் இப்படியே ஒரு த்ரிகுணபரிணாமமென்றும் சொல்லுகிற பேதாபேதவாதிகளுக்கு ப்ரமாணாபாவமும் ப்ரமாணவிரோதமும் ஸ்வவசனவிரோதமும் கண்டுகொள்வது. இப்படி விவேகித்தவன், * நானுன்னையன்றியிலேன் * என்கிறபடியே அவனுடைய ஸத்தையாலே தனக்கு ஸத்தையென்றும், * அதுவும் அவனதின்னருளே * என்கிறபடியே அவனுடைய வ்யாபாரத்தாலே தன்னுடைய உபாயாதிவ்யாபாரமென்றும், * தனக்கேயாகவெனைக்கொள்ளுமீதே எனக்கே கண்ணனை யான்கொள் சிறப்பே * என்கிறபடியே அவன் ப்ரயோஜநவிசேஷத்தாலே தனக்கு ப்ரயோஜந விசேஷமென்றும் தெளிந்து, ஸ்வாதிகாராநுகுணமாக ஸ்வரூபபரஸ்ஸமர்ப்பணத்தாலே இவை மூன்றிலும் நிர்மமனாய் வர்த்திக்கும்.

த்ரிவிதசிதசிதேகதந்த்ரலக்ஷ்யே யதிபதியாமுநபாஷிதே நியோக்து:,
இதமிதி நிகமாந்ததேசிகேந ப்ரதிஸமதிச்யத மாதவாத்மஜஸ்ய.

ஸத்வஸ்தாந்நிப்ருதம் ப்ரஸாதய ஸதாம் வருத்திம் வ்யவஸ்தாபய,
த்ரஸ்ய ப்ரஹ்மவிதாக ஸஸ் த்ருணமிவ த்ரைவர்கிகாந் பாவய.

நித்யே சேஷிணி நிக்ஷிபந் நிஜபரம் ஸர்வம்ஸஹே ஸ்ரீஸகே,
தர்மம் தாரய சாதகஸ்ய குசலிந் தாராதரைகாந்திந:.

இதி கவிதார்க்கிகஸிம்ஹ ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
தத்வ ஸந்தேசஸ் ஸமாப்த 8.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாயநம :

## ஒன்பதாவது ரஹஸ்யமான ரஹஸ்யஸந்தேசம்.

யானறியும் சுடராகி நின்றேன் மற்றும் யாதுமலேன்
வானமருந்திருமாலடியேன் மற்றோர் பற்றுமிலேன்
தானமுதாமவன் தன்சரணே சரணென்றடைந்தேன்
மானமிலாவடிமைப்பணி பூண்டமனத்தினனே. (அம்ருதரஞ்சனி 14.)

* அஹமாத்மா ந தேஹோஸ்மி விஷ்ணுசேஷோபரிக்ரஹ:,
தமேவ சரணம் ப்ராப்தஸ்தத்கைங்கர்ய சிகீர்ஷயா.

அயர்வறுமமரர்களான அனந்த கருட விஷ்வக்ஸேநாதிகளோடு துல்யமாக அபரிச்சிந்ந புருஷார்த்தமான பகவத் கைங்கர்யத்திற்கு ஸ்வரூபயோக்யதை யுண்டாயிருக்க * அநாதி மாயையாலே ஸுப்தனாய் அனந்தக்லேசபாஜநமான ஸம்ஸாரஸாகரத்திலே யழுந்திக்கிடக்கிற க்ஷேத்ரஜ்ஞன் பூர்ண ப்ரதிபுத்தனான ஆசார்யனாலே அத்யந்த சோகார்த்தனானவளவிலே “நீ அதிதுஷ்கர தர்மங்களொன்றிலும் அலையவேண்டாம்”, அப்பாபங்களெல்லாற்றையும் விடுவிக்கைக்கு ஸமர்த்தனுமாய் அவஸரப்ரதீக்ஷனுமாய் நிற்கிறவென்னையொருவனையுமே சரணமாகப்பற்று” என்று சரண்யனான ச்ரிய:பதிதானே சரமச்லோகத்தாலே யருளிச்செய்த ஸர்வாதிகார சரணாகதியினுடைய விஷயஸ்வரூபபரிகரபலவிசேஷங்களை விசதமாக ப்ரகாசிப்பிக்கிற த்வயத்திற்கு அபேக்ஷிதார்த்த ஸங்க்ரஹரூபமான திருமந்த்ரத்திலே ப்ரக்ருத்யாத்ம விவேகமும் ஜீவேச்வர விவேகமும் பிறந்து ஸ்வாபாவிக பகவத் ஸம்பந்தத்தை யுணர்ந்து ஔபாதிக தேஹ விபூத்யாதி சம்பந்தத்தை யிகழ்ந்து ஸ்வரூபாநுரூபபரமபுருஷார்த்தஸித்திக்கு ஸ்வாதிகாராநுகுணமாக ஸுகரோபாய விசேஷத்தைப்பற்றி ஸ்வாமி கைங்கர்ய மநோரதனாய் நிற்கிற நிலையை “அஹமாத்மா” என்கிற ச்லோகம் ப்ரதிபாதிக்கிறது. இதில் (அஹமாத்மா ந தேஹோஸ்மி) என்கிறவிரண்டு வாக்யமும் த்ருதீயாக்ஷரத்தின் பொருளைச் சொல்லுகிறது. அஹம் என்கிற பதத்தாலே அநாத்மந்யாத்ம புத்தியைக் கழிக்கிறது. அநேகாவயவோபசயரூபமான தேஹத்திற்காட்டில் வேறு என்று சொன்னவிது இந்த்ரியங்களில் அந்யதைக்கும் உபலக்ஷணமாகையாலே பஞ்சவிம்சகனுடைய தத்வாந்தர வைலக்ஷண்யம் பலிக்கிறது. (விஷ்ணுசேஷ:) என்கிறபதம் ப்ரதமாக்ஷரத்தில் ப்ரக்ருதி ப்ரத்யயார்த்தங்களைத் காட்டுகிறது. (அபரிக்ரஹ:) இதில் விசேஷநிர்த்தேச ஸ்வாரஸ்யத்தாலும் ஸமாஸ ஸாமர்த்யத்தாலும் விஷ்ணுவுக்கே சேஷமென்று தோற்றுகையாலே அந்யசேஷத்வத்தையும் கழிக்கிற நமஸ்ஸில் அர்த்தத்தையும் காட்டுகிறது. இந்நமஸ்ஸு தன்னிலே விவக்ஷிதமான பகவச்சரணாரவிந்த சரணாகதியை தத்ப்ரேரிதனாய்க்கொண்டு தான் பண்ணின ப்ரகாரம் (தமேவ சரணம் ப்ராப்த:) என்று சொல்லப்படுகிறது. (தத்கைங்கர்ய சிகீர்ஷயா) என்கிற பதம் த்ருதீயபதத்தில் ப்ரக்ருதி ப்ரத்யயாம்ச தாத்பர்யத்தை ஸங்க்ரஹிக்கிறது. இதிலர்த்தக்ரமத்தைப் பார்த்தால் தேஹாதி விலக்ஷணனாய் ஜ்ஞாதாவாய் ஜ்ஞாநஸ்வரூபனுமாய் இரண்டுபடியாலும் ப்ரத்யக்காய் பகவதேகசேஷபூதனாய் நிருபாதிகசேஷித்வாதி ரஹிதனான நான் நிரவதிக பகவத்கைங்கர்ய ரஸலாபார்த்தமாக அவன் தன்னையே சரணமாகப் பற்றினேனென்று ப்ரபன்னனுடைய ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநம் சொல்லுகிறது. ந்யஸ்தபரனுக்குமிது ஸ்வபரஸந்தோஷார்த்தமாக நித்யமநுஸந்தேயம்.

சீலங்கவர்ந்திடும் தேசிகர் தேசின் பெருமையினால்
தூலங்களன்ன துரிதங்கள் மாய்ந்தன துஞ்சல் தரும்
கோலங்கழிந்திடக்கூறிய காலங்குறித்து நின்றோம்
மேலிங்குநாம்பிறவோம் வேலைவண்ணனை மேவுதுமே. (அம்ருதரஞ்சனி 15.)

ஸ்ரீமத்வேங்கடநாதேந சிஷ்யாணாம் ஹிதமிச்சதா,
இத்தம் ரஹஸ்யஸாரார்த்த: ஸங்க்ருஹ்ய ஸமதிச்யத.

இதி கவிதார்க்கிகஸிம்ஹ ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர ஸ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ரஹஸ்யஸந்தேச: ஸமாப்த: 9.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# பத்தாவது ரஹஸ்யமான ரஹஸ்யஸந்தேச விவரணம்.

---

ரஹஸ்யஸந்தேசத்தில் சரணாகதியினுடைய விஷயஸ்வரூபபரிகர பல விசேஷங்களை ப்ரகாசிப்பிக்கிறது த்வயமென்கிறவிடத்தில். விஷய விசேஷமாவது—சரண்யாந்தரங்களு மன்றிக்கே ஸ்வரூபமாத்ரமுமன்றிக்கே பத்நீஸம்பந்தகுண விக்ரஹவிசிஷ்டனான ஸர்வேச்வரன். ஸ்வரூபவிசேஷமாவது—துஷ்கரத்வ சிரகால ஸாத்யத்வாதிகளையுடைத்தான உபாஸநாதிகளில் காட்டிலும் அதின் பரிகரங்களில் காட்டிலும் வேறுபட்ட பரந்யாஸம். பரிகர விசேஷமாவது—யமநியமாதிகளான உபாஸநாங்கங்களிலும் பக்திப்ரபத்திகளிலுங்காட்டில் வேறுபட்ட ஆநுகூல்ய ஸங்கல்பாதி பஞ்சகம். பலவிசேஷமாவது—ஐச்வர்ய கைவல்யரூப ப்ரயோஜநாந்தரங்களிலும் பகவத் ஸாலோக்யாதி மாத்ரத்திலும் வ்யாவ்ருத்தமாய் தேசகாலாதி பரிச்சேதமில்லாத கைங்கர்யபர்யந்தமான பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம்.

* சீலங்கவர்ந்திடுமென்கிற பாட்டாலே ஸதாசார்ய ப்ரஸாதமடியாக தனக்கு வருகிற பரமபுருஷார்த்தலாபத்தை அநுஸந்திக்கிறான். (சீலங்கவர்ந்திடுமென்றது) ஆத்மகுணங்களையும் ஆசாரத்தையும் அங்கீகரிக்குமவர்களென்றபடி. (தேசிகரென்றது) ஆச்ரிதரை வழியல்லா வழிபோகாதபடி விலக்கி நல்வழி காட்டுகைக்கு நிலவரென்றபடி. (தேசின் பெருமையினால்) என்றது சர்வேச்வரனிவர்களை அநுபந்திகளோடும்கூட ரக்ஷிக்கக்கடவோமென்னும்படி பண்ணின ஆத்மாத்மீய பரந்யாஸ ப்ரபாவத்தாலே என்றபடி. (தூலங்களன்ன துரிதங்கள் மாய்ந்தன) என்றது—* போயபிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும் * என்று உபநிஷத்துச் சொன்னபடியே உத்தரபூர்வாகங்கள் கழிந்தபடியைக் கணிசிக்கிறது. (துஞ்சல் தருங்கோல) மென்றது—* அநாதிமாயயா ஸுப்த: * என்கிறபடியே ஆத்மபரமாத்மாதிஜ்ஞாந மில்லாதபடி பண்ணுகிற ப்ராக்ருத சரீரமென்றபடி. (கழிந்திடக்கூறியகால) மென்றது—ப்ராரப்தசரீரமாகிற சிறையை ஸ்வதந்த்ரனான ஸ்வாமி மாற்றுகைக்கு ப்ரமாணநியதமான ஸமயமென்றபடி. (குறித்து நின்றோமென்றது) அதற்கு ஸ்வயத்நாபேக்ஷையற ஓடம்பார்த்திருப்பார்க்கு ஓடம் வருமாபோலே இது ஸ்வயமாகதமாய் அணித்தாகப் பெற்றோமென்றபடி. (மேலிங்கு நாம் பிறவோம்) என்றது—ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே சரீராந்தரஹேதுவான ப்ராரப்த கர்மாம்சமும் கழியப்பெற்ற நாம் * இருள் தருமாஞாலத்துள் துக்கஹேதுவான சரீர பரிக்ரஹம் பண்ணோமென்கிறது. (வேலைவண்ணனை மேவுதுமே) என்றது—ஸம்ஸார ச்ரம பரிதாபசமனமான திருமேனியையுடையனான ஸ்ரீவைகுண்டநாதனை கெடுமரக்கலம் கரை சேர்ந்தாற்போலே சேரக்கடவோமென்றபடி. இப்படி ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தியும் நிரதிசயாநந்த ரூபபரிபூர்ண பகவதநுபவமும் உண்டாம்படி கூட்டரிய திருவடிக்கண்கூட்டினை நான் கண்டேனென்று க்ருதக்ருத்யனான தான் க்ருதார்த்தனாகிறான்.

இதி கவிதார்க்கிகஸிம்ஹ ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர ஸ்ரீமத் வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு

ரஹஸ்யஸந்தேச விவரணம் ஸமாப்தம் 10.

---

ஸ்ரீமதே வேதாந்தமஹா குரவே நம:

# பதினேராவது ரஹஸ்யம் தத்வரத்நாவளி.

வண்மையுகந்தவருளால் வரம்தருமாதவனர்
உண்மையுணர்ந்தவரோதுவிக்கின்ற உரைவழியே
திண்மைதரும் தெளிவொன்றால் திணியிருள் நீங்கியநாம்
தண்மைகழிந்தனம் தத்துவங்காணும் தரத்தினமே. (அம்ருதரஞ்சனி 16.)

ஸதாசார்யோபதேச பூர்வகமாக அறியவேண்டும் தத்வத்ரயத்தில் ஜீவதத்வமாவது— ஸ்வரூபத்தாலும் ஸாமார்த்யத்தாலும் பரிசிந்நமான அஹமர்த்தம்.

1. த்ரிவிதஜீவவர்க்கத்தினுடைய ஸ்வரூபாதிகளெல்லாம் ஸர்வரக்ஷகனை ச்ரிய:பதிக்கு அநந்யார்ஹநிருபாதிக சேஷபூதங்களென்று நிகமாந்தங்களில் நிர்ணீதமாகையாலே இஜ்ஜீவன் தன் ஸ்வரூபத்திலும் தனக்குள்ள வதிசயங்களிலும் தான் செய்யும் சேஷவ்ருத்திகளிலும் தனக்கு ப்ரதான(மான) சேஷித்வமும் உபகார ப்ரத்யுபகார ப்ரஸங்கமும் அற ஸர்வாவஸ்தையிலும் நிர்மமனயிருக்க ப்ராப்தன்.

2. இவனுடைய ஸ்வரூபசக்த்யாதிகளெல்லாம் பரதந்த்ரங்களா யிருக்கையாலே தன்னையும் பிறரையும் பற்றவிவன் நிரபேக்ஷ ரக்ஷகனல்லன்.

3. சேஷத்வத்தாலே ஸ்வாமிக்கிஷ்டவிநியோகயோக்யனும்.

4. பாரதந்த்ர்யத்தாலே யதேஷ்ட விநியுக்தனும்.

5. * அடியார்க்கென்னை யாள்படுத்த விமலன் * என்கிறதற்கு ஸ்வார்த்த ப்ரவ்ருத்தனை ஸ்வாமியுடைய க்ருதக்ருத்யதையிலும் அவனுடைய விநியோக விசேஷத்தாலே க்ருதார்த்தனை தாஸபூதனுடைய க்ருதஜ்ஞதையிலும் தாத்பர்யம்.

6. இச்சேஷத்வ பாரதந்த்ர்யங்களும் நித்யஸித்தஜ்ஞாநாநுஷ்டாந ஸாமார்த்யங்களுங் கூட ஸ்வதந்த்ரஸ்வாமிஸம்மதங்களான உபாயபல விசேஷங்களுக்கு உபயுக்தங்களாம்.

7. இஜ்ஜீவதத்வம் ஆதேயத்வ விதேயத்வ சேஷத்வநியமத்தாலே * உடன்மிசையுயிரெனக்கரந்து நிற்கிற உயர்வறவுயர்நல முடையவனுக்கு தன்னுடம்பும் தானுமுடம்பாயிருக்கும்.

8. இப்படி சரீரதயா பரதந்த்ரயமாய் சரீரங்களையுமெடுத்து ஜ்ஞாத்ருத்வகர்த்ருத்வாதிகளை யுடைத்தாயிருந்தாலும் ஸ்வரூபத்தில் நாமாந்தரம் வரும்படியான அவஸ்தாவிசேஷங்களில்லாமையாலே ஜீவனுக்கு விசேஷித்து நித்யத்வ நிர்விகாரத்வாதிகளைச் சொல்லுகிறது.

9. ஸ்வரூபநித்யத்வம் சேதநாசேதநங்களெல்லாத்திற்கும் துல்யம்.

10. அசேதநமாவது—அறிவில்லாதவஸ்து.

11. இது ஸ்வப்ரகாசத்திற்கும் பரப்ரகாசத்திற்கும் பலியல்லாமையாலே இதற்கு ப்ரத்யக்த்வ போக்த்ருத்வங்களில்லை.

12. தன்னையும் பிறரையும் காட்டுகிற ஜ்ஞாநத்திற்காச்ரய மல்லாமையாலே ஸ்வபுத்தி பூர்வ ப்ரவ்ருத்தி லக்ஷணகர்த்ருத்வமில்லை.

13. அசேதந த்ரவ்யங்களில் த்ரிகுணம் ஸர்வேச்வரனுக்கு லீலாவிபூதியாய் ஸம்ஸாரிகளுக்குக் கரணகளேபராதி ரூபமாய்க்கொண்டு பரிணமித்துக் கர்மாநுகுண வைஷம்யத்தாலே விஷமங்களான ஆநுகூல்ய ப்ராதிகூல்யங்களை உடைத்தாயிருக்கும்.

14. இதுதானே இவர்கள் முக்தரானல் ஸ்வாமிவிபூதியான வேஷத்தாலே ஸ்வாபாவிகமான ஆநுகூல்யாதிசயத்தை யுடைத்தாம்.

15. பூர்வாவஸ்தையில் தன்னைப்பற்ற உண்டான ப்ராதிகூல்யமும், பரப்ரதிகூலமான வாகாரமும் முக்தனுக்குத் தோன்று நின்றாலும், ஈச்வரனுக்குப்போலே இவனுக்கும் ப்ரதிகூலமாயிராது.

16. ஸத்வமாத்ராச்ரயமான த்ரவ்யம் போகவிபூதியாய் ஸூரிஸேவ்யனை ச்ரிய:பதிக்கும் ஸூரிகளுக்கும் ஸூரிதுல்யஜ்ஞாநவிகாஸம்பெற்ற முக்தருக்கும் ஸ்வச்சந்ததேஹாதி ரூபமாய் ஸர்வதா அத்யந்தாநுகூல ரூபமாயிருக்கும்.

17. ஸத்வாதி குணத்ரயமில்லாத காலத்ரவ்யம் விபூதித்வயத்தையும் வ்யாபித்து நின்றாலும் கல்பாதி விபாகத்தாலே லீலாவிபூதியில் விகார விசேஷங்களுக்கு நியாமகமாயிருக்கும்.

18. ஜீவாத்ம பரமாத்மாக்களுடைய ஜ்ஞாநமும் குணத்ரயரஹிதமான அசேதந த்ரவ்யமாய் தன்னையும் தானல்லாதவற்றையும் தன்னாச்ரயத்திற்கு ப்ரகாசிப்பிக்கவற்றாகையாலே சிச்சப்தவாச்யமாய் தானொரு ஜ்ஞாநத்திற்கு மாச்ரயமல்லாமையாலே அசிச்சப்தவாச்யமுமாயிருக்கும்.

19. உக்தமான சேதநத்ரவ்யம்—ஈச்வரனைப்போலே ஆத்மாவென்றும், அசேதநத்ரவ்யம் கேவல குணங்களைப்போலே அநாத்மாவென்றும் பிரிக்கப்படும்.

20. ஈச்வரன் ஸர்வநியந்தாவான நாராயணன்.

21. நித்யாநித்ய ஸர்வவஸ்துக்களும் இவனுடைய நித்யாநித்யேச்சா ஸித்தங்களாய் இவனாலே வ்யாப்தங்களாய் இவனுக்கு அப்ர்தக்ஸித்தப்ரகாரங்களா யிருக்கும்.

22. இவன் ஸர்வகார்யங்களுக்கும் காரணமாம்போது உபாதாநபூத ஸர்வதத்வங்களுக்கும் அந்தராத்மாவாய் நின்று வாமந த்ரிவிக்ரம ந்யாயத்தாலே விசிஷ்டவேஷத்தாலே உபாதாநமுமாய் உபாதேயமுமாம்.

23. ஸங்கல்ப விசேஷங்களாலும் நிமித்தபூத ஸர்வவஸ்துக்களாலும் விசிஷ்டனாய்க் கொண்டு நிமித்தமுமாம்.

24. இவனுக்கு அந்தர்வ்யாப்தியாவது—ஸர்வவஸ்தக்களிலும் தானில்லாத விடமில்லாதபடி நிற்கை.

25. பஹிர்வ்யாப்தியாவது—பரிச்சிந்ந வஸ்துக்களுக்குப் புறம்புமுண்டாகை.

26. ஸர்வசரண்யனைவிவனுக்கு ஸ்வரூபகுண விபூதிகளெல்லாத்தாலுமுள்ள நித்ய பரத்வம் உத்தராவதி ரஹிதமாயிருக்கும்.

27. அதில் சீலாதிகளால் வந்த பரபாரம்யந்தானே ஸௌலப்ய பர்யந்தமாம்.

28. அதடியாக சாஸ்த்ரவிஹிதஸாத்யோபாயவசீகார்யனை இவன் ஸித்தோபாயமாம்

29. ஸாத்யப்ராப்யமான கைங்கர்யத்திற்கு ப்ரதிஸம்பந்தியாய்க்கொண்டு ஸித்தப்ராப்யனும்.

30. இந்த தத்வ ரத்நாவளியிலே ஏதேனுமொன்றையும் எல்லாப்ரகாரத்தாலும் தெளிகை ஸர்வஜ்ஞனுக்கல்லது கூடாமையாலே உபயுக்த தமமானவிவ்வளவு தெளிந்தாலும் உபாயபலஸித்தியுண்டாம்.

நாராயணன் பரன் நாமவனுக்கு நிலையடியோம்
சோராதனைத்து மவனுடம்பென்னும் சுருதிகளால்
சீரார் பெருந்தகைத் தேசிகரெம்மைத் திருத்துதலால்
தீராமயலகற்றும் திறம்பாத் தெளிவுற்றனமே. (அம்ருதாஞ்சனி 17.)

மாநதஸ் ஸம்மதத்வேபி மஹதீ பரமார்த்தத:,
தத்வரத்நாவளீரியம் ஸத்பிர் தார்யா தமோபஹா.

இதி கவிதார்க்கிகஸிம்ஹ ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர ஸ்ரீமத் வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
தத்வரத்நாவளீ ஸமாப்தா 11.

———

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# பன்னிரண்டாவது ரஹஸ்யமான தத்வரத்நாவளீ ப்ரதிபாத்யஸங்க்ரஹம்.

---

தத்வரத்நாவளியில் முதல் கவியாலும் முடிவில் கவியாலும் ஆசார்யன் பண்ணின க்ருஷி பலித்தபடியைச் சொல்லுகிறது. நடுவுள்ள வாக்யங்களாலே ஒவ்வோர் குழி முதலாக எட்டுக்குழி விளைந்தபடி சொல்லுகிறது. இதில் ஜீவவிஷயமான பத்து வாக்யத்திலே ஜீவனுடைய லக்ஷணமும் இவனுடைய சேஷத்வப்ரகாரமும் பாரதந்த்ர்யப்ரகாரமும் சேஷத்வோபயோகமும் பாரதந்த்ர்யோபயோகமும் உபயஸித்தமான உபசிதோபயோக விசேஷமும் ஜ்ஞாநாதி ஸஹிதோபயோகமும் ஆதேயத்வ விதேயத்வ ஸஹிதோபய பலமும் உக்தப்ரகாரங்களாலே சங்கிதாநித்யத்வாதி பரிஹாரமும் ஸர்வத்ரவ்ய ஸாதாரண ஸ்வரூப நித்யத்வமும் என்றிவை பத்தும் ப்ரதிபாத்யம். அசேதநவிஷயமான பத்து வாக்யத்தில் அசேதநத்தினுடைய லக்ஷணமும், அதினுடைய ப்ரத்யக்த்வ போக்த்ருத்வாபாவமும், புத்திபூர்வ கர்த்ருத்வாபாவமும் அசேதநத்ரவ்யங்களில் த்ரிகுணத்திற்கு கர்மவச்யரைப்பற்றவுண்டான ப்ராதிகூல்யாதி ப்ரகாரமும் அகர்மவச்யரைப்பற்ற இதினுடைய ஆநுகூல்யாதிசயமும் ப்ராதிகூல்ய சங்காபரிஹாரமும் பரமபதத்தினுடைய போக்யதாதிசயமும் காலத்தின் ப்ரகாரமும் தர்மபூத ஜ்ஞாநத்தின் ப்ரகாரமும் இவற்றினுடைய அநாத்மத்வமும் என்றிவை பத்தும் ப்ரதிபாத்யம்.

பரதத்வவிஷயமான பத்து வாக்யத்தில் ஈச்வரனுடைய லக்ஷணமும் இவனுடைய நிரங்குச ஸ்வாதந்த்ர்யாதிகளும் உபாதாந காரணத்வப்ரகாரமும் நிமித்தகாரணத்வப்ரகாரமும் அந்தர்வ்யாப்தி ஸ்வரூபமும் பஹிர்வ்யாப்தி நியமமும் ஸர்வப்ரகார பாரம்யமும் ஸௌலப்ய விசேஷமும் ஸித்தோபாயத்வமும் ஸித்தப்ராப்யத்வமும் என்றிவை பத்தும் ப்ரதிபாத்யம். நிகமந வாக்யத்தில் இவ்வளவு தெளிவு கொண்டும் ஈடேறலாமென்று சேதநரைத் தேற்றுகிறது. மேலநுஷ்டுப்பில் இதின் சிறுமை கண்டு இகழாதே சீர்மையைக்கண்டு சிந்தாமல் கொள்ளச்சொல்லுகிறது.

இதி கவிதார்க்கிக ஸிம்ஹ ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்ரீமத் வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு

தத்வரத்நாவளீ ப்ரதிபாத்யஸங்க்ரஹ: ஸமாப்த:. 12.

---

ஸ்ரீமதே வேதாந்த மஹாகுரவே நம:

# பதின்மூன்ருவது ரஹஸ்யமான ரஹஸ்ய ரத்நாவளி.

ஒன்றே புகலென் றுணர்ந்தவர் காட்டத் திருவருளால்
அன்றேயடைக்கலங்கொண்ட நம்மத்திகிரித் திருமால்
இன்றேயிசையின் இணையடி சேர்ப்பர் இனிப்பிறவோம்
நன்றே வருவதெல்லாம் நமக்குப் பரமொன்றிலதே. (அம்ருதாஞ்சனி 18.)

1. ஒரு ஜீவனுக்கொரு ஜீவன் தஞ்சமல்லன். ஸ்ரீமானான நாராயணன் ஒருவனுமே ஸர்வஜீவர்களுக்கும் தஞ்சம்.

2. இஜ்ஜீவன் அநாதிகாலம் அநுபவிக்கப்பெறாத ச்ரிய:பதியைப்பெறுகைக்கு ஹேதுவானவுபாயத்தை ரஹஸ்யத்ரய முகத்தாலே உபதேசித்து அவ்வழியாலே ஆசார்யன் இவனுக்குத் தஞ்சமாகிறான்.

3. ஸர்வஸ்வாமிநியாய் ஸர்வேச்வரனுக்கு சேஷமாய் ஸஹதர்மசாரிணியான பெரிய பிராட்டியார் இத்தலையில் வாத்ஸல்யாதிசயத்தாலும் அத்தலையில் வால்லப்யாதிசயத்தாலும் புருஷகாரமாய்க்கொண்டு இஜ்ஜீவர்களுக்குத் தஞ்சமாகிறாள்.

4. இவளைப் புருஷகாரமாக்கவேண்டுகிறது—ஈச்வரன் தண்டதாரனாகையாலே.

5. இத்தண்டகாரணம் அநாதியான ஆஜ்ஞாதிலங்கநம்.

6. இப்படி அபராதாநுரூபமாக தண்டதரனாய்ப் போருகிற சரண்யனுடைய வசீகரணங்களில் ப்ரதாநம்—ஸர்வாகிஞ்சநாதிகாரமான ஆத்மரக்ஷாபரஸமர்ப்பணம்.

7. இது ஸபரிகரமாக ஸக்ருத்கர்த்தவ்யம்.

8. இஸ்ஸமர்ப்பணத்தைத் தானனுஷ்டிக்கவுமாம், தனக்காக ஆசார்யாதிகளனுஷ்டிக்கவுமாம்.

9. இதற்குக் கோலின பலத்தைப்பற்ற புந: ப்ரபத்தி முதலான கர்த்தவ்ய சேஷமில்லை.

10. இப்படி க்ருதக்ருத்யனான ப்ரபந்நனுக்கு வர்ணாச்ரமாதி தர்மங்கள் ஸ்வதந்த்ராஜ்ஞாஸித்தங்களான கைங்கர்ய விசேஷங்கள்.

11. இவனுக்கு ஆஜ்ஞாநுஜ்ஞாஸித்தங்களான கைங்கர்யங்களெல்லாம் ஸ்வயம்ப்ரயோஜநங்கள்.

12. கரணாகரணரூபங்களான அபசாரங்கள் புகுந்தாலும் ப்ரபந்நனுக்கு நரகாதிகளில்லை.

13. ராஜகுமாரனுக்கும் அவதாநம் பண்ணி நடக்கவேண்டுமாபோலே லகுப்ரத்யவாயமும் வாராமைக்காக அபசாரங்கள் தூரபரிஹரணீயங்கள்.

14. ப்ரபத்திக்குக் கோலின பலத்திற்கு ஒன்றாலும் ப்ரதிபந்தமில்லை.

15. புத்தி பூர்வாபசாரங்கள் புகுந்தாலும் ப்ராயச்சித்த விசேஷம் அதிகாரிவிசேஷநியதம்.

16. இப்படி ப்ராயச்சித்தத்திலே மூட்டுகிறதும் கடிநப்ரக்ருதிகளுக்குக் கசைகாட்டு வாரைப்போலே அவன் பண்ணுகிற சிக்ஷைகளுமெல்லாம் சரண்யப்ரஸாத பலம்.
17. இங்கிருந்த காலம் தர்மாநுபந்தியான போகத்திலும் போகபுத்தியாலே ப்ராவண்யம் பிறந்ததாகில் இது தன்னதிகாராநுரூபமான கைங்கர்யாம்ருத ரஸத்திற்குத் தண்ணீர்த்துரும்பு.
18. இப்படி நிஷித்த போகப்ராவண்யம் கைங்கர்யாம்ருதரஸவிருத்தமாகையாலே த்ருஷ்டி விஷம்போலே தூரபரிஹரணீயம்.
19. கைங்கர்யமாவது ஸ்வாமியுகந்த ஏவல்தொழில் செய்கையாகையாலே இது யதா சாஸ்த்ரம் பண்ணினால் உகப்பாம்.
20. பகவத் கைங்கர்யமும் பாகவத கைங்கர்யமும் சேர அநுஷ்ட்டிக்க அரிதான போது பரமபுருஷார்த்த காஷ்ட்டையான பாகவத கைங்கர்யமே உபாதேய தமம்.
21. இவையிரண்டிலும் ப்ரதாநம் ஆசார்ய கைங்கர்யம்.
22. இக்கைங்கர்யபரனுக்குப் பரமைகாந்திகளுகந்தவிடமே உசிதஸ்த்தானம்.
23. இப்படி துல்யசீலரைக்கிடையாதபோது விபரீதஸம்ஸர்க்கம் ஏகாந்தவாஸ பரிஹார்யம்.
24. இவனுக்கு கதிசிந்தநாதிகள் சித்தஸந்தோஷஹேதுவான காலயாபநம்.
25. சாதகவ்ருத்தியானவிவனுக்கு அந்திமப்ரத்யயம் ஸ்வயத்நஸாத்யமன்று.
26. இப்படி க்ஷணக்ருத்யமான ஆத்ம ஸமர்ப்பணயாகத்திற்கு பகவத்ஸங்கல்பஸாத்யமான தேஹாவஸாநம் அவப்ருதம்.
27. ஸதாசார்ய பரிக்ரஹத்திற்கு முன்புள்ளவநாதிகாலமெல்லாம் ஒரு காளராத்ரி.
28. பின்பு தேஹாவஸாநத்தளவும் நல்விடிவு.
29. மேல்முழுக்க ஸ்வச்சந்தகைங்கர்ய மஹோத்ஸவதிவஸம்.
30. இது ஸாத்விகஹ்ருதயங்கமையான ரஹஸ்யரத்நாவலீ.

சிறுபயனிற்படியாத தகவோரெம்மைச்சேர்க்கவடைக்கலம்கொண்ட திருமால்தானே
மறுபிறவியறுத்தழியாவானில் வைக்கும் மனமே நீ மகிழாதேயிருப்பதென்கொல்?
உறுவதுனக்குரைக்கேனிங்கிருந்த காலம் ஒரு பிழையும் புகுதாதவுணர்த்தி வேண்டிப்
பெறுவதெல்லாமிங்கே நாம் பெற்றுவாழிப் பேரடிமையாலேதென்றிகழேல் நீயே.

(அம்ருதரஞ்சனி—19.)

ரக்ஷந்த்வநந்யரக்ஷ்யாம் லகீயஸீமபி கரீயஸீம் ஸந்த:,
லக்ஷ்மீஸஹாயஹ்ருத்யாம் ரஹஸ்யரத்நாவலீம் ரம்யாம்.

இதி கவிதார்க்கிகஸிம்ஹ ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர ஸ்ரீமத் வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ரஹஸ்யரத்நாவலீ ஸமாப்தா 13.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# பதினுன்காவது ரஹஸ்யமான ரஹஸ்யரத்நாவலீஹ்ருதயம்

பகவந்தமிவாநந்த கல்யாண குணஸாகரம்,
வேதாந்த தேசிகம் ஸௌமி வேங்கடேச குருத்தமம்.

தத்வோபாயபுமர்த்தேஷ்வத்யாத்மவிதாம் விபாவநீயேஷு,
ஸ்வயமேவ ஸூசயாமோ ரஹஸ்யரத்நாவலீஹ்ருதயம்

ஸதாசார்யோபதேச பூர்வகமாக ஸர்வேச்வரன் திருவடிகளிலே ஸமர்ப்பிதபரனை முமுக்ஷுவினுடைய நிர்ப்பரத்வாத்யவஸாயத்தைச் சொல்லுகிறது முதல்கவி. இதில் *ஒன்றே புகல் * என்றது— * நாரஸ்த்விதி ஸர்வபும்ஸாம் ஸமூஹ: பரிகீர்த்தித:, கதிராலம்பநம் தஸ்ய தேந நாராயணஸ்ஸ்ம்ருத:. நாரோ நராணும் ஸங்காதஸ் தஸ்யாஹமயநம் கதி:, தேநாஸ்மி முநிபிர் நித்யம் நாராயண இதீரித:. ததேததிது:க்காநாம் ஆஸ்பதே து பவார்ணவே, பததாம் கத்யதே ஸத்யம் விஷ்ணுரேக: பராயணம். கர்மணும் பரிபாகத்வாதாவிரிஞ்சாதமங்களம், இதி மத்வா விரக்தஸ்ய வாஸுதேவ: பரா கதி:. யே ச வேதவிதோ விப்ரா யேசாத்யாத்மவிதோ ஜநா:, தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம். அம்ருதம் ஸாதநம் ஸாத்யம் தம் பச்யந்தி மநீஷிண:, யஜ்ஞாக்யம் பரமாத்மாநம் விஷ்ணும் த்யாயந் ந ஸீததி. * நாகணைமிசை நம்பிரான் சரணேசரண் நமக்கென்று * இத்யாதிகளில் ஒரு அதிகாரி விசேஷத்துக்கு பரமப்ராப்யனை ச்ரிய:பதி ஒருவனுமே வ்யாஜ விசேஷவசீகரணீயமான ஸித்தோபாயமென்றபடி. (உணர்ந்தவர்) என்று ப்ரதிபுத்தாதிகாரி விசேஷத்தைச் சொல்லுகிறது. * ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணே ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந:. ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தேஸ்ததா ப்ராப்திவிரோதிச. வதந்தி ஸகலா வேதாஸ் ஸேதிஹாஸபுராணகா: * இத்யாதிகளில் சொன்ன அர்த்தபஞ்சகத்தையும் சகாரஸமுச்சிதமான ஸம்பந்தவிசேஷத்தையும் ஸத்வநிஷ்டருக்கு ச்ரோதவ்யசேஷமற உரைக்கலாம்படி திருந்தக்கண்டவர்களே ப்ரதிபுத்தரென்கிறது. ப்ராப்யமான ப்ரஹ்மமாவது. * விஷ்ணோஸ்ஸகாசாதுத்பூதம் ஜகத்தத்ரைவசஸ்த்திதம், ஸ்திதிஸம்யமகர்த்தாஸௌ ஜகதோஸ்ய ஜகச்ச ஸ:. க்ருஷ்ண ஏவஹி லோகாநாம் உத்பத்திரபிசாப்யய:, க்ருஷ்ணஸ்ய ஹி க்ருதே பூதமிதம் விச்வம் சராசரம். * இத்யாதிகளில்படியே ஸர்வகார்யைககாரணமாய் ஸத்யத்வ ஜ்ஞாநத்வாதி ஸ்வரூபநிரூபகதர்மங்களையுடையனுமாய் ஜ்ஞாநசக்த்யாதிகல்யாண குண மஹோததியாய் சுத்தாசுத்த விபூதித்வயத்துக்குமேகசேஷியாய் * ஒருயிரேயோவுலகங்கட்கெல்லாம் என்னும்படி ஸர்வாந்தராத்மாவாய் பரவ்யூஹாதி பஞ்சப்ரகாரதிவ்யமங்கள விக்ரஹ யுக்தனுய் ஸர்வாவஸ்தையிலும் ஸலக்ஷ்மீகனுய் ஸர்வலோகசரண்யனுய் சரணுகதவத்ஸலனுய் ஸர்வப்ரகார நிரதிசய போக்யனை நாராயணன்.

ப்ராப்தாவான ப்ரத்யகாத்மாவாவது * புமாந் ந தேவோ ந நரோ ந பசுர்நச பாதப:, சரீராக்ருதிபேதாஸ்து பூபைதே கர்மயோநய:. நாயம் தேவோ நமர்த்யோ வா நதிர்யக் ஸ்தாவரோபிவா, ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா சேஷோ ஹி பரமாத்மந: * இத்யாதிகளில் படியே—தேஹேந்த்ரியாதி விலக்ஷணனுய் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனுய் ஸ்வயம் ப்ரகாசனுய் ஸ்வஸ்மை பாஸமாநனுய் அணுவாய் ஜ்ஞாநாநந்தகுணகனுய் பரசேஷதைகரஸனுய் பராதீன ஸ்வரூபஸ்திதிப்ரவ்ருத்திகனுய் பரிபூர்ண பகவதநுபவயோக்யனுய் ஸ்வரூபாநுகுணஸ்வச்சந்த கைங்கர்யார்த்தியான ஜீவன்.

ப்ராப்த்யுபாயமாவது—இஜ்ஜீவன் ஸம்ஸாரஸாகரத்தைக்கடந்து அக்கரைப் படுகைக்கு உபாயமாய் ஸாதனமாக ஸ்வபுத்தியாலே கோலும்படி சாஸ்த்ரோக்தமான வர்த்தம்; இது ஸித்தமென்றும் ஸாத்யமென்றும் இரண்டுபடியாய் இருக்கும். ஸித்தோபாயமாவது—நித்ய

ஸித்தங்களான ஸ்வரூபகுணங்களையுடையனுய், ஸர்வஜ்ஞனுகையாலே பரஹிதவேதியாய், ஸர்வசக்தியாகையாலே ஸர்வாநிஷ்ட நிவாரணக்ஷமனுய், ஸர்வபூத நிஸர்க்கஸுஹ்ருத்தாகையாலே பராநிஷ்டநிவாரணுதிகளில் * ஸர்வதாபிமுகனுய் ஸர்வஜ்ஞோபி ஹி விச்வேசஸ்ஸதா காருணிகோபி ஸந், ஸம்ஸாரதந்த்ரவாஹித்வாத் ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே * இத்யாதிகளில் படியே அவஸரப்ரதீக்ஷனுய், வ்யாஜவிசேஷவசீகரணீயனுய் ஸங்கல்பித விசேஷத்தில் ஸஹகாரி நிரபேக்ஷனுய் ஸ்வார்த்தப்ரவ்ருத்தனுய் மோக்ஷப்ரதானத்துக்கு அவ்யவஹித ஸங்கல்பாச்ரயனுன ச்ரிய:பதி.

ஸாத்யோபாயமாவது—புருஷனுக்கு கர்த்தவ்யமாக சோதிதமான புருஷார்த்தஸாதநம். மோக்ஷார்த்தமான ஸாத்யோபாயம்—பக்தியென்றும் ப்ரபத்தியென்றும் இரண்டுபடியாயிருக்கும். பக்திரூபமான ஸாத்யோபாயம் கர்மயோக, ஜ்ஞாநயோக, ஸம்ஸ்க்ருதாந்த:கரணஸாத்யமாய், அஷ்டாங்கயோக ஸம்ஜ்ஞிதமாய் வர்ணுதிநியதாதிகாரமாய் வர்ணுச்ரமதர்மேதிகர்த்தவ்யதாகமாய், (க்ருச்ச்ரஸாத்யமாய்) தைலதாராவதவிச்சிந்ந ஸ்ம்ருதிஸந்ததிரூபமாய், அஹரஹரப்யாஸாதேயாதிசயமாய், ஆப்ரயாண மநுவர்த்தநீயமாய், ப்ராரப்தேதர புண்யபாப நிவர்த்தகமாய், ஸ்வயத்நஸாத்யாந்திமப்ரத்யயவிசேஷமாயிருக்கும். ப்ரபத்திரூபமான ஸாத்யோபாயம் மஹாவிச்வாஸாதி ஸம்ஸ்க்ருதாந்த:கரண ஸாத்யமாய் ஷடங்கயோக ஸம்ஜ்ஞிதமாய் அநந்யோபாய ஸர்வாதிகாரமாய் ஆநுகூல்ய ஸங்கல்பாதிமாத்ர பரிகரமாய் ஸுகரமாய் ப்ரார்த்தனுந்விதஸக்ருத் பரந்யாஸரூபமாய் அநாதேயாதிசயமாய், ஆதேஹபாதம் ஸ்வரூபாவ்ருத்த்யாதிகர்த்தவ்ய சேஷரஹிதமாய் ப்ராப்த கர்ம நிவர்த்தநக்ஷமமாய் ஸ்வப்ரயத்ந ஸாபேக்ஷாந்திமப்ரத்யயானபேக்ஷமாயிருக்கும்.

ஸாத்யோபாயத்தில் அநுபாயத்வாதிவ்யபதேசம்பரஸங்கல்பஸாபேக்ஷத்வாதி நிபந்தனம். இங்குபலமாவது—ஸ்வாதிகாராநுகுண வசீகரண விசேஷத்தாலே உத்தரபூர்வாகாச்லேஷவிநாசங்கள் பிறந்து ஸ்தூலசரீரநிவ்ருத்தியுண்டாய் ஊர்த்வகதிவிசேஷத்தாலே உத்க்ராந்தனுய், அர்ச்சிராதிமார்க்கத்தாலே ஆதிவாஹிகராலே அதிலங்கிதத்ரிகுண மண்டலனுய், அவதூதஸூக்ஷ்மசரீரனுய் அப்ராக்ருததேசவிசேஷப்ரவிஷ்டனுய் ஆவிர்பூதஸ்வருபனுய் அபஹதபாப்மத்வாதி குணுஷ்டகவிசிஷ்டனுனவனுடைய தேசகாலஸ்வரூபபரிச்சேதரஹிதகைங்கர்ய பர்யந்தமான பரிபூர்ணபகவதநுபவாநந்தம்.

ப்ராப்திவிரோதியாவ்து—பீஜாங்குரந்யாயத்தாலே அநாதியாக ப்ரவ்ருத்தமான அக்ருத்யகரணக்ருத்யாகரண ப்ரவாஹத்தாலே உத்பந்நமாய் ப்ராயச்சித்தம் பண்ணுதார்க்கு அநதிலங்கநீயபலமாய் ஆகமைகஸமதிகம்யமாய் அநுத்ப்ரேக்ஷணீயவிபாகஸமயமாய் ஆப்ரஹ்மஸ்தம்பம் அபிவ்யாப்தமாய் அத்யந்தவிஷமப்ரவாஹமாய் அதிகோரநரகாத்யநர்த்தபரம்பராஹேதுவாய் சக்ரவத் பரிவர்த்தமானமாய், ஆமோக்ஷம்அநுவர்த்தமான பகவந்நிக்ரஹஸந்தானமும் அதின்கார்யகரணவர்க்கமும். இங்குஸம்பந்தமாவது—ப்ராப்தாவானஜீவாத்மாவுக்கு ப்ராப்யனுன பரமாத்மாவோடுண்டானதுவக்கு. இது ஆதேயத்வம் விதேயத்வம் அப்ருதக்ஸித்தத்வம் சேஷத்வம் சரீரத்வம் வ்யாப்யத்வம் ரக்ஷ்யத்வம் கிங்கரத்வம் போக்யத்வம் போக்த்ருத்வம் என்றிப்படி ஸாமாந்யவிசேஷாதிரூபமாய்க் கொண்டு ப்ரமாணங்களாலே விவிதமாக விபக்தமாயிருக்கும். இப்படிமோக்ஷசாஸ்த்ர ஸித்தமான ப்ராப்யத்தையும் ப்ராப்தாவையும் ப்ராப்த்யுபாயத்தையும் ப்ராப்தியையும் ப்ராப்திப்ரதிபந்தகத்தையும் ஸம்பந்தத்தையும் சாஸ்த்ரத்ருஷ்டியாலே ஸம்யக்காகக்கண்டவர்களை உணர்ந்தவரென்கிறது. உணர்ந்தவர் ஒன்றேபுகலென்று காட்டவென்று அந்வயம். * தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா, உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்வதர்சிந:, யே ஸந்துஷ்டாச்ச்ருதோபேதாஸ் ஸத்யார்ஜவதயாபரா:, ஜிதேந்த்ரியா ஜிதக்ரோதாஸ்தாநுபாஸ்வ சப்ருச்சச * இத்யாதிகளில்படியே ஸம்யகுபபந்நராணுர்க்கு ஸர்வாபேக்ஷிதார்த்தங்களையும் உபதேசிக்கவல்ல அநந்யப்ரயோஜனரான ஜ்ஞாநிகள் புகலொன்றில்லாத நமக்கு * ஸர்வயோக்யமநாயாஸமப்ரமாதமநூபமம் ப்ரபந்

நார்த்திஹரம் விஷ்ணும் சரணம் கந்துமர்ஹஸி * இத்யாதிகளில் படியே நிரபாய ஸாத்யோபாய விசேஷத்தாலே வசீகரணீயமான ஸித்தோபாயத்தை வெளியிட வென்றபடி. இத்தாலே நானும் என்னை ரக்ஷித்துக் கொள்ளமாட்டேன்; வேறு எனக்கு ரக்ஷகரில்லை, மேலே என்னுடைய வ்யாபாரவிசேஷத்தாலே அபேக்ஷையற தேவரீரே என்னை ரக்ஷித்தருளவேணுமென்கிற பரந்யாஸரூபவசீகரண விசேஷாநுஷ்டானமும் பலிதம்.

அங்ஙனன்றிக்கே ஒன்றே புகலென்றுணர்ந்தவர் என்று ஆசார்யர்களை விசேஷிக்கிறதாகவுமாம். அப்போது (காட்ட) என்றது * தவ பரோஹமகாரிஷி தார்மிகை: * இத்யாதிகளில் படியே ஸர்வசேஷி திருவடிகளிலே * ஆத்மாத்மீயம் ச யத்கிஞ்சித் துர்ப்பரம் துஸ்த்யஜம் மம, தத் ஸர்வம் தவ விந்யஸ்தம் சுபயோ: பாதபத்மயோ: * என்று ஆத்மீயரான நம்மை அநந்ய ரக்ஷ்யத்வேந ஸமர்ப்பிக்க வென்றபடி. (திருவருளால்) என்றது * ஸ தம் நிபதிதம் பூமௌ சரண்யச்சரணாகதம், வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத் * க்ருபயா கேவலமாத்மஸாத் குரு * இத்யாதிகளில்படியே ப்ரத்யுபகாராதி நிரபேக்ஷபரமக்ருபையாலே என்றபடி. * யாமாலம்ப்ய ஸுகேநேமம் துஸ்தரம் ஹி குணோததிம், நிஸ்தரந்த்யசிரேணைவ வ்யக்தம் த்யாந பராயணா: * என்கிறந்யாயத்தாலே அவிலம்பிதாநாயாஸமாய் பலஸித்தியுண்டாம்படி ஆச்ரித ரக்ஷணத்திலே ஆத்மவல்லபனை அபிமுகனாக்குகிற அகில ஜகந்மாதாவினுடைய அநபாயக்ருபையாலே என்னவுமாம்.

(அன்றேயடைக்கலம் கொண்ட) என்றது * அநேநைவ து மந்த்ரேண ஸ்வாத்மாநம் மயி நிக்ஷிபேத், மயி நிக்ஷிப்தகர்த்தவ்ய: க்ருதக்ருத்யோ பவிஷ்யதி* என்றும் * துராசாரோபி ஸர்வாசீ க்ருதக்நோ நாஸ்திக: புரா, ஸமாச்ரயேதாதிதேவம் ச்ரத்தயா சரணம்யதி, நிர்த்தோஷம் வித்தி தம் ஜந்தும் ப்ரபாவாத் பரமாத்மந: * என்றும் * த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் சரணம் கத: * என்றும் * ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட தத்தமஸ்யாபயம் மயா * என்றும் சொல்லுகிறபடியே பரஸமர்ப்பண ஸமநந்தரம் நமக்கு ஸ்வரக்ஷணார்த்தகர்த்தவ்ய சேஷமில்லாதபடி பரஸ்வீகாரம் பண்ணினவரென்றபடி. (நம்மத்திகிரித்திருமால்) என்றது * வேகவத்யுத்தரே தீரேபுண்ய கோட்யாம் ஹரிஸ்ஸ்வயம், வரதஸ்ஸர்வபூதாநாம் அத்யாபி பரித்ருச்யதே * நிகரில் புகழாய் உலகம் மூன்றுடையாய் என்னையாள்வானே* இத்யாதிகளில் படியே ஆச்ரிதஸம்ரக்ஷணோபயுக்தஸௌசீல்ய வாத்ஸல்யஸ்வாமித்வ விசிஷ்டனாய் என்றபடி. (இன்றேயிசையில் இணையடி சேர்ப்பர்) என்றது நண்ணினவர்களுக்கு விண்ணுலகம் தர விரைந்து ரக்ஷாபேக்ஷாப்ரதீக்ஷனாய், மண்ணுலகில்வந்து பலப்ரதாநோந்முகனாய் நிற்கிற பெருமாள் * க்வாஹமத்யந்ததுர்ப்புத்தி: க்வசாத்மஹிதவீக்ஷணம், யத்திதம் மம தேவேச ததாஜ்ஞாபய மாதவ ; த்வாம் ப்ரபந்நோஸ்மி தாஸஸ்தே நாந்யா க்வாபி கதிர்மம, அத்யைவ கிங்கரீக்ருத்ய நிதேஹி த்வத்பதாம்புஜே * இத்யாதிகளில் படியே பரமபுருஷார்த்தைக மநஸ்கராமளவில் அப்போதே * கொடுவுலகு காட்டாதே கொழும் சோதியுயரத்துக் கூட்டரிய திருவடிக் கண் கூட்டியருள்வரென்றபடி.

(இனிப்பிறவோம்) என்றது * கண்டு கேட்டு * இத்யாதிகளில்படியே பராவர புருஷார்த்த விவேகத்தாலே ஐச்வர்ய கைவல்யங்களை யொழித்த நாம் ஏதேனுமொரு பகவத்க்ஷேத்ரவாஸ கைங்கர்யாதி ஸங்கத்தாலே * இங்கே திரிந்தேற்கிழுக் குற்றென் * என்று த்வரையற்றிருக்கு மளவிலும் * சரணமாகும் தன தாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான் * த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந. * கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும் * இத்யாதிகளில்படியே இனியெனக்கு ஒரு சரீரபரிக்ரஹ முண்டாகாதபடி ப்ராரப்த கர்ம விசேஷத்தையும் ஒரு விரகாலே கழித்து ரக்ஷித்தருள்வரென்றபடி. (நன்றேவருவதெல்லாம்) என்றது — இத்தேஹம் விடுமளவும் * போகை: புண்யக்ஷயம் ததா * என்கிறபடியே அநுகூலங்கள் வருமவை ப்ராரப்த புண்யரூப நிகள நிவ்ருத்தியாகையாலும் ப்ரதிகூலங்கள் வருமவை * ஹரிர்துக்காநி பக்தேப்யோ ஹிதபுத்யா கரோதி ஹி, சஸ்த்ரக்ஷாராக்நிகர்மாணி ஸ்வபுத்ராய யதா பிதா * யஸ்யாநுக்ரஹமிச்சாமி தஸ்ய வித்தம் ஹராம்யஹம் * இத்யாதிகளில்படியே ப்ராரப்த துஷ்க்ருதத்தில் சிகை தீர்த்தபடியாலும் * ரத்நபர்வத மாருஹ்ய யதா ரத்நம் நரோ முநே, ஸத்வாநுருபமாதத்தே ததா க்ருஷ்ணந்மநோ

ரதாங், ஸங்கல்பாதேவ ...கவாம்ஸ்தத்வதோ பாவிதாத்மநாம், வ்ரதாந்தமகிலம் காலம் ஸேசயத்யம்ருதேநது * இத்யாதிகளில் படியே கைங்கர்ய மநோரதத்திற்கு பங்கம் வாராமையாலும் யாவச்சரீரபாதம் நமக்கு வருமவையெல்லாம் ப்ரியஹித விசேஷங்களென்று ப்ரீதராகிறபடி. * ப்ரியமிதரததாபி வா யத்யதா விதரஸி வரதப்ரபோ த்வம் ஹி மே, ததநுபவநமேவ யுக்தம் து மே த்வயி நிஹிதபரோஸ்மி ஸோஹம் யத: * என்றூர்களிறே.

(நமக்குப் பரமொன்றிலதே) என்றது – ஸர்வஜ்ஞனுமாய ஸர்வசக்திகனுமாய் பரம காருணிகனுமாய் பரமசேஷியான பெருமாள் பரஸ்வீகாரம் பண்ணி தேஹயாத்ரையை நம்முடைய கர்மாநுகுணமாக நடத்துகையாலும், ஆத்மயாத்ரையை தம்முடைய ப்ரதாநரூபக்ருபாநுகுணமாக நிர்வஹிக்கையாலும் * ஜநார்தநம் ப்ரணிபதிதோ ந ஸீததி * * நவாஸுதேவ பக்தாநாம் அசுபம் வித்யதே க்வசித் * * ந க்ரோதோ நச மாத்ஸர்யம் ந லோபோ நாசுபா மதி:, பவந்தி க்ருதபுண்யாநாம் பக்தாநாம் புருஷோத்தமே * இத்யாதிகளில்படியே—புத்திபூர்வகமாக அபாயங்களில் இழியவொட்டாமையாலும், ப்ரவ்ருத்தங்களாகில் ஏதேனுமொரு கண்ணழிவு செய்துவிடுகையாலும் பராவரதத்வ விவேகத்தாலே பரதந்த்ரகர்த்ருத்வ ப்ரதிபத்தியையுடையோமாய் ஸகிஞ்சநாகிஞ்சநாதிகாரி விவேகத்தாலே ந்யஸ்த பருமான நமக்கு ஆத்மரக்ஷார்த்தமாக இனி ஒரு கர்த்தவ்யசேஷமில்லையென்றபடி. "இனிப்பிறவோம்" என்றும் 'நமக்கு' என்றும்—பஹுவசநப்ரயோகத்தாலே * பசுர்மநுஷ்ய: பக்ஷீ வா யேச வைஷ்ணவ ஸம்ச்ரயா:, தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத்விஷ்ணோ: பரமம் பதம் * இத்யாதிகளில்படியே அநுபந்திரக்ஷணமிங்கே ஸூசிதமாகிறது.

1. ஒரு ஜீவனுக்கொரு ஜீவன் தஞ்சமல்லன் என்றது—* ஸ்வயம் ம்ருத்பிண்டபூதஸ்ய பரதந்த்ரஸ்ய தேஹிந:, ஸ்வரக்ஷணேப்யசக்தஸ்ய கோ ஹேது: பரரக்ஷணே, ப்ராஹ்மாணம் சிதிகண்டம் ச யாச்சாந்யா தேவதாஸ்ஸ்ம்ருதா: ப்ரதிபுத்தா ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் பலம் * அநந்யஜ்ஞாநவிரஹாதசுத்தா தேவதா கதா: ப்ரஹ்மேசாநாதய ஸ்ஸர்வே ஸ்வஸ்வாதந்த்ர்யேண கர்ஹிதா:. அந்யே தீ புருஷவ்யாக்ர சேதஸோ யே வ்யபாச்ரிதா:, அசுத்தாஸ்தே ஸமஸ்தாஸ்ஸ்யு: தேவாத்யா: கர்மயோநய:, ஆப்ரஹ்மஸ்தம்பபர்யந்தா ஜகதந்தர்வ்யவஸ்திதா:, ப்ராணிந: கர்மஜநிதஸம்ஸார வசவர்த்திந:, யதஸ்ததோ நதே த்யாநே த்யாநிநாமுபகாரகா:, அவித்யாந்தர்கதாஸ்ஸர்வே தேஹி ஸம்ஸாரகோசரா:, பச்சாதுத்பூதபோதாச்ச த்யாநேநைவோபகாரகா:, நைஸர்க்கிகோ நவை போதஸ்தேஷாமப்யந்யதோ யத:, பசவ: பாசிதா: பூர்வம் பரமேண ஸ்வலீலயா, தேநைவ மோசநீயாஸ்தே நாந்யைர்மோசயிதும் க்ஷமா: * இத்யாதிகளில்படியே பரதந்த்ர சேதநர்களில் ஆரேனுமொருவன் தனக்கும் பிறர்க்கும் நிரபேக்ஷ ரக்ஷகனாக மாட்டான்—என்றபடி.

2. ஸ்ரீமானான நாராயணனொருவனுமே ஸர்வ ஜீவர்களுக்கும் தஞ்சம் என்றது—*ஸ்ரீமந் நாராயணஸ்வாமிந்நநந்யசரணஸ்தவ, சரணேள சரணம் யாதஸ்தவைவாஸ்ம்யஹமச்யுத. * மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே * தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே யத: ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா புராணீ * தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேந பாரத தத்ப்ரஸாதாத் பராம் சாந்திம் ஸ்தானம் ப்ராப்ஸ்யஸி சாச்வதம் * ஸம்ஸாரார்ணவ மக்நாநாம் விஷயாக்ராந்தசேதஸாம், விஷ்ணுபோதம் விநா நாந்யத் கிஞ்சிதஸ்தி பராயணம் * ஸம்ஸாரஸாகரம் கோரம் அநந்தக்லேசபாஜநம், த்வாமேவ சரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண: * ஸர்வலோகசரண்யாய ராகவாய மஹாத்மநே, நிவேதயத மாம் க்ஷிப்ரம் * இத்யாதிகளின்படியே பத்நீஸம்பந்தோபப்ரும்ஹித குணவிசேஷ விசிஷ்டனான நாராயணனொருவனுமே அகிஞ்சநராயும் ஸகிஞ்சநராயுமுள்ள சர்வஜீவர்களுக்கும் ஸ்வபுத்த்யதீன ஸஹகார்யதிரிக்தாபேக்ஷாரஹிதமாக அநிஷ்டநிவ்ருத்தியையும் இஷ்டப்ராப்தியையும் பண்ணுவனென்றபடி. இவனைப் பற்றினவர்களை ஒருவரும் பாதிக்கமாட்டாத படியையும் ஸ்வபாவதஸ்ஸர்வஸமனாய், * ந மே த்வேஷ்யோஸ்தி * என்கிற இவனுக்கு த்வேஷ்யராம்படி ஸாபராதரானாரை ஒருவரும் ரக்ஷிக்கமாட்டாதபடியையும் * கஜம் வா வீக்ஷ்ய ஸிம்ஹம் வா * ப்ரஹ்மா ஸ்வயம்பூ: * என்ற ச்லோகத்தில் தாத்பர்யத்திலும் ப்ரஹ்லாத ஸுமுக காக ராவணாதிவ்ருத்தாந்தங்களிலும் கண்டு கொள்வது.

3. இஜ்ஜீவன் அநாதிகாலமநுபவிக்கப் பெறாத ச்ரிய:பதியைப் பெறுகைக்கு ஹேதுவான உபாயத்தை ரஹஸ்யத்ரய முகத்தாலே உபதேசித்து அவ்வழியாலே ஆசார்யன் இவனுக்குத்தஞ்சமாகிறான், என்றது— * தாஸபூதாஸ்ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: * இத்யாதிகளில்படியே ஸூரிகளோடொக்க ஸ்வரூபயோக்யதை உண்டாயிருக்க ஸ்வாபராதத்தாலே ஸ்வத: ப்ராப்தமான பகவதநுபவத்தையிழந்த ஸம்ஸாரி சேதநன், இப்பேறு பெறுகைக்கு அவிநாபாவத்தாலே விச்வஸநீயமான உபாயவிசேஷத்தை அத்யாத்மசாஸ்த்ர ஸாரமான மூல மந்த்ராதிகளாலே உபதேசித்து * ஆசார்ய: ப்லாவிதாஜ்ஞஸ்ய ஜ்ஞாநம்ப்லவ இஹோச்யதே * ஸாக்ஷாந் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ர பாணிநா * இத்யாதிகளில்படியே ஆசார்யனிவனுக்கு பரம்பரயா மோக்ஷஸாதந மாகிறானென்றபடி. * பாபிஷ்ட: க்ஷத்ரபந்துச் ச புண்டரீகச் ச புண்யக்ருத் ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாதாசார்யவாந் பவேத் * என்றதற்கு மிதுவே தாத்பர்யம்.

4. ஸர்வஸ்வாமிநியாய் ஸர்வேச்வரனுக்கு சேஷமாய் ஸஹதர்ம சாரிணியான பெரிய பிராட்டியார் இத்தலையில் வாத்ஸல்யாதிசயத்தாலும் அத்தலையில் வால்லப்யாதிசயத்தாலும் புருஷகாரமாய்க்கொண்டு இஜ்ஜீவர்களுக்குத் தஞ்சமாகிறாள் என்றது. * ஸர்வேஷாமேவ லோகாநாம் ஈச்வரீ மம வல்லபா, அஸ்யா மம ச சேஷம் ஹி விபூதி ருபயாத்மிகா * தேவதிர்யங் மநுஷ்யேஷு புந்நாமா பகவாந் ஹரி:, ஸ்த்ரீநாம்நீ லக்ஷ்மீர்மைத்ரேய நாநயோர்வித்யதே பரம், நித்யைவைஷா ஜகந்மாதா விஷ்ணோச்ச்ரீரநபாயிநீ. யஜ்ஞவித்யா மஹாவித்யா குஹ்யவித்யா ச சோபநே, ஆத்மவித்யா ச தேவி த்வம் விமுக்திபலதாயிநீ * இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்ம சரீ தவ * ஸர்வைச்வர்யகுணோபேதா நித்யம் தத்தர்மதர்மிணீ, கருணாஸ்ராநதமுகீ கமலாக்ஷீ சசிப்ரபா, கல்யாணவாஹிநீ கல்யா கலிகல்மஷநாசிநீ, [1] ஸர்வார்த்தி விச்சேதகரீ [2] ஸர்வாசாபரிபூரிகா, ஆர்யா யசோதா வஸுதா தர்மகாமார்த்தமோக்ஷதா, அப்ரமேயா க்ரியா ஸூக்ஷ்மா பரநிர்வாணதாயிநீ * வாச: பரம் ப்ரார்த்தயிதா ப்ரபத்யே நியதம் ச்ரியம் * ப்ராயச்சித்தப்ரஸங்கே து ஸர்வபாபஸமுத்பவே, மாமேகாம் தேவதேவஸ்ய மஹிஷீம் சரணம் வ்ரஜேத் * ஸர்வகாமப்ரதாம் ரம்யாம் ஸம்ஸாரார்ணவதாரிணீம், க்ஷிப்ரப்ரஸாதிநீம் லக்ஷ்மீம் சரண்யாமநுசிந்தயேத். * ப்ரணிபாத ப்ரஸந்நா ஹி மைதிலீ ஜநகாத்மஜா, அலமேஷா பரித்ராதும் ராக்ஷஸ்யோ மஹதோ பயாத், அலமேஷா பரித்ராதும் ராகவாத் ராக்ஷஸீகணம்,* இத்யாதிகளில் சொன்ன ஸர்வசேஷி வ்யதிரிக்தஸர்வசேஷித்வம் நிக்ரஹாஸமாநாதிகரண ஸர்வாநுக்ரஹவத்வமித்யாதி ஸ்வபாவ விசேஷங்களையுடையவளான பிராட்டி, ஸாபராதரானவர்களெல்லாருக்கும் சாஸிதாவான ஸர்வேச்வரன் அபிமதம் கொள்ளமாட்டாதே தயங்காதபடி அவனுடைய பித்ருத்வப்ரயுக்தமான ஊஷ்மலீபாவத்தை * உசிதைருபாயைர்விஸ்மார்ய * என்னும் படியாக்கி, இவர்களை அவன் திருவடிகளிலே சேர்த்து * தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல், என்னடியார் அது செய்யார் * என்னும்படி பண்ணிக்கொண்டு * பவேயம் சரணம் ஹி வ: * என்றருளிச் செய்தபடியே இவர்களுக்கு ரக்ஷாஹேது வாகிறாளென்றபடி.

5. இவளை புருஷகாரமாக்க வேண்டுவது, ஈச்வரன் தண்டதராகையாலே என்றது— * அப்ரமேயோ நியோஜ்யச்ச யத்ர காமகமோ வசீ*ஸ்வாதந்த்ர்யமைச்வரமபர்யநுயோஜ்யமாஹு:* இத்யாதிகளில்படியே நிரங்குச ஸ்வதந்த்ரனான ஸர்வேச்வரன், * தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்யவ்யவஸ்திதௌ * என்று—க்ஷேத்ரஜ்ஞருக்கு க்ருத்யாக்ருத்யவ்யவஸ்தாபகமான சாஸ்த்ரத்தை அநாதியாக ப்ரவர்த்திப்பிக்க ப்ரவாஹாநாதிகர்ம ஸம்யுக்தராய் ஆஜ்ஞாதிலங்கனம் பண்ணினவர்களை இவன் * க்ஷிபாம்யஜஸ்ரம்சுபாந் * என்கிறபடியே நிக்ரஹித்துப்போருமவனாகை ப்ரமாணஸித்தமாகையாலே ஸ்வாபராத பூயஸ்த்வையாலே பீதரானவர்களுக்கு அர்த்தஸ்வபாவாதிகளாலே அநதிலங்கநீய வாக்யையான விஷ்ணுபத்நியை புருஷகாரமாக்க வேண்டுகிறதென்றபடி.

---

[1] ஸர்வார்த்தி நாசிநீ ஹ்ருஷ்டா ஸமுத்ரபரிசோஷணீ—பாடாந்தரம்.
[2] ஸர்வேச்சாபரிபூரிகா—பாடாந்தரம்.

6. இத்தண்டகாரணம் அநாதியான ஆஜ்ஞாதிலங்கனம் என்றது, * ஸமோஹம் ஸர்வ பூதேஷு * என்று ஸர்வஸமனான ஸர்வேச்வரன் தனக்கு வைஷம்ய நைர்க்ருண்யாதிகள் வாராதபடி வ்யவஸ்தித நிக்ரஹம் பண்ணுகைக்கு விசேஷகாரணம்; *நிமித்தமாத்ரமேவாஸௌ ஸ்ருஜ்யாநாம் ஸர்க்ககர்மணி, ப்ரதாநகாரணீபூதா யதோ வை ஸ்ருஜ்யசகத்ய:, நிமித்தமாத்ரம் முக்த்வைவ நாந்யத் கிஞ்சிதபேக்ஷதே, நீயதே தபதாம் ச்ரேஷ்ட ஸ்வசக்த்யா வஸ்து வஸ்துதாம் * கர்மபிர்பாவிதா : பூர்வை : குசலா: குசலை: ப்ரஜா : * என்றும *ஹந்யதே தாத க: கேந யதஸ் ஸ்வக்ருதபுக் புமாந்* என்றும் *சுபே த்வஸௌ துஷ்யதி துஷ்க்ருதே து ந துஷ்ய தேஸௌ பரமச்சரீரீ * என்றும் * நானே நானா வித நரகம்புகும் பாவம் செய்தேனென்றும் ப்ரமாண ஸித்தமாய் ப்ரவாஹாநாதியான விருத்தாநுஷ்டான மென்றபடி.

7. இப்படி அபராதாநுரூபமான தண்டதரனைப்போருகிற சரண்யனுடைய வசீகரணங்களில் ப்ரதானம் ஸர்வாகிஞ்சநாதிகாரமான ஆத்ம ரக்ஷாபரஸமர்ப்பணம் என்றது- * அநித்யமஸுகம் லோகமிமம் ப்ராப்ய பஜஸ்வ மாம் * என்றும், * ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ * என்றும், * பிதரம் மாதரம் தாராந் புத்ராந் பந்தூந் ஸகீந் குரூந், ரத்நாநி தநதாந்யாநி க்ஷேத்ராணி ச க்ருஹாணி ச, ஸர்வதர்மாம்ச்ச ஸந்த்யஜ்ய ஸர்வ காமாம்ச்ச ஸாக்ஷராந், லோகவிக்ராந்தசரணௌ சரணம் தேவ்ரஜம் விபோ * என்றும் * வ்ருதைவ பவதோ யாதா பூயஸீ ஜந்மஸந்ததி:, தஸ்யாமந்யதரம் ஜந்ம ஸஞ்சிந்த்ய சரணம் வ்ரஜ * என்றும் * அஹமஸ்ம்யபராதாநாமாலயோகிஞ்சநோகதி:, த்வமேவோபாயபூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி:, சரணாகதிரித்யுக்தா ஸா தேவேஸ்மிந் ப்ரயுஜ்யதாம், தஸ்யாநுபந்தா: பாப்மாநஸ்ஸர்வே நச்யந்தி தத்க்ஷணாத் * என்றும் * பக்த்யா பரமயா வாபி ப்ரபத்த்யா வா மஹாமதே, ப்ராப்யோஹம் நாந்யதா ப்ராப்யோ மம கைங்கர்யலிப்ஸுபி: * என்றும், * சரணம் த்வாம் ப்ரபந்நா யே த்யாநயோகவிவர்ஜிதா:, தேபி ம்ருத்யுமதிக்ரம்ய யாந்தி தத் வைஷ்ணவம் பதம் * என்றும் முமுக்ஷுவுக்கு சரண்ய ப்ரஸாதநங்களாகச் சொல்லப்பட்ட உபாயங்களில் வைத்துக்கொண்டு * நிக்ஷேபாபரபர்யாயோ ந்யாஸ: பஞ்சாங்கஸம்யுத:, ஸந்ந்யாஸஸ்த்யாக இத்யுக்தச்சரணாகதிரித்யபி * என்றும் * ஆத்மாத்மீயபரந்யாஸோ ஹ்யாத்மநிக்ஷேப உச்யதே * என்றும் சொல்லப்பட்ட ஸ்வரக்ஷாபரஸமர்ப்பணம்.

* இதம் சரணமஜ்ஞாநாம் இதமேவ விஜாநதாம், இதம் திதீர்ஷதாம் பாரமிதமாநந்த்யமிச்சதாம், தாவதார்த்திஸ்ததா வாஞ்சா தாவந்மோஹஸ்ததா ஸுகம், யாவந் ந யாதி சரணம் த்வாமசேஷாகநாசநம் * ப்ரபத்தே : க்வசிதப்யேவம் பராபேக்ஷா ந வித்யதே, ஸா ஹி ஸர்வத்ர ஸர்வேஷாம் ஸர்வகாமபலப்ரதா, உபாயபக்தி : ப்ராரப்தவ்யதிரிக்தாகநாசிநீ, ஸாத்யபக்திஸ்து ஸா ஹந்த்ரீ ப்ராரப்தஸ்யாபி பூயஸீ, ஸத்கர்மநிரதாஸ்ஸித்தாஸ் ஸாங்க்ய யோகவிதஸ்ததா, நார்ஹந்தி சரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி * இத்யாதிகளில் சொல்லுகிறபடியே வர்ண விசேஷாதிரஹிதமாய், அத்யந்தாகிஞ்சநருக்கும் அதிகரிக்கையாலும், உபாயாந்தர பர்யந்த ஸகலஸாதநமாகையாலும் ஆர்த்தியில் தாரதம்யத்துக்கு அநுகுணமாக ப்ராரப்த கர்மத்தையும் கழிக்கவற்றாகையாலும் ஸுகரமாகையாலும் துஷ்கரபரிகர நிரபேக்ஷமாய் ஸக்ருத்கர்த்தவ்யமாகையாலும் ஸர்வருக்கும் ஸ்வாபிமதாவிலம்பிதபலஸித்திக்கு இதுவே ப்ரதானமென்றபடி. இதில் சொன்ன ப்ரபத்திரூபமான ஸ்வரக்ஷாபர ஸமர்ப்பணமாவது- ஸ்வரக்ஷணார்த்த ஸ்வப்ரவ்ருத்த்யபிமாந நிவ்ருத்தியோடும் ப்ரார்த்தனையோடும் கூடின சரண்யைக ஸாத்ய ஸ்வரக்ஷணத்வாத்யவஸாய விசேஷம்.

8. இது ஸபரிகரமாக ஸக்ருத்கர்த்தவ்யம்—என்றது *ஸக்ருத் க்ருதச்சாஸ்த்ரார்த்த:* என்கிற ஸாமாந்ய ப்ராப்தியாலும் * ஆவ்ருத்திரஸக்ருதுபதேசாத் * என்கிற விசேஷஹேது வில்லாமையாலும் * ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதிச யாசதே, அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம, ஸக்ருதேவ ஹி சாஸ்த்ரார்த்த: க்ருதோயம் தாரயேந் நரம் * நநு ப்ரபந்நஸ் ஸக்ருதேவ நாத தவாஹமஸ்மீதி ச யாசமாந : * ஸக்ருத்ப்ரார்த்தநமாத்ரேணாபேக்ஷிதம் தாஸ்யதி * இத்யாதி ப்ரமாண ஸம்ப்ரதாயங்களாலும், ப்ரபத்திமந்த்ரங்களில் வர்த்தமாநவ்யபதேசம் அநுஷ்டான காலாபிப்ராய மாகையாலும், த்ரௌபதீ விபீஷண கஜேந்த்ர

ஸுமுக காக கபோதாதி வ்ருத்தாந்த விசேஷங்களாலும் ஆநுகூல்ய ஸங்கல்பாத்யங்க பஞ்சக ஸம்யுக்தமான பரஸமர்ப்பணத்துக்கு ஸக்ருதநுஷ்டானமே சாஸ்த்ரீய மென்றபடி.

9. இச்சமர்ப்பணத்தைத் தானநுஷ்டிக்கவுமாம் தனக்காக ஆசார்யாதிகளநுஷ்டிக்கவுமாம் என்றது—* சாஸ்த்ரபலம் ப்ரயோக்தரி யென்று வ்யவஸ்தை யுண்டாயிருக்கச் செய்தே, புத்ராதிகளைப்பற்றவும் பித்ராதிகள் சிலஸுக்ருதங்களை அநுஷ்டிக்கை சாஸ்த்ரீயமாகையாலும் *ப்ரதிசது பகவாநசேஷபும்ஸாம் ஹரிரபஜந்மஜராதிகாம் ஸம்ருத்திம்* *மயாத்ய பக்த்யா பரமேச்வரேசே ஸ்ம்ருதே ஜகத்தாதரி வாஸுதேவே* என்கிற பராசர சௌநகவாக்யங்களாலும் மற்றும்பல மஹர்ஷிகளுடைய வ்ருத்தாந்த ப்ரகாரத்தாலும் ப்ரஹ்லாத விபீஷண தசரத த்ரௌபதீ ப்ரப்ருதிகள் ஸ்வஸம்பந்திகளிலே சிலரைப்பற்ற ப்ரபத்தி பண்ணக்காண்கையாலும், லோகத்திலு மிவ்வநுஷ்டான முண்டாகையாலும் * வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்திவள் நோயிது தீர்த்து * என்றாழ்வாரருளிச்செய்த ந்யாயத்தாலும் *வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள்தேவரை வல்ல பரிசுவருவிப்பரேலதுகாண்டுமே* என்று நாச்சியார் அருளிச்செய்கையாலும் இப்படி பூர்வாசார்யர் அநுஷ்டான ஸம்ப்ரதாயங்களாலும் இப்ப்ரபத்தியைத் தானநுஷ்டித்தால் பலஸித்தியுண்டாமாப்போலே தனக்காக ஆசார்யாதிகளநுஷ்டித்தாலும் பலஸித்திக்குக் குறையில்லை என்றபடி. * த்வய்யாசார்யைர் விநிஹிதபராஸ்தாவகா ரங்கநாத* அந்தோநந்தக்ரஹணவசகா: * என்கிற ந்யாஸ திலகத்தில் ச்லோகங்களையு மிங்கேயநுஸந்திப்பது.

10. இதுக்குக் கோலின பலத்தைப்பற்ற புந: ப்ரபத்திமுதலான கர்த்தவ்ய சேஷமில்லை என்றது—* ஸக்ருதேவ ப்ரபந்நஸ்ய க்ருத்யம் நைவாஸ்தி கிஞ்சந * இத்யாதிகளில் படியே * செய்தவேள்வியனை இவனுக்கு ஸ்வாபிமத பலவிசேஷத்தைப்பற்ற ஸாங்கமாகப் பண்ணின ப்ரபத்திக்கு ஸ்வரூபாவ்ருத்திரூபமாகவாதல் அங்கமாகவாதல் ஒரு கர்த்தவ்ய சேஷமில்லாமையாலே ஸ்வாதிகாராநுகுணமாக ஸ்வாமிஸந்தோஷாதிசயமாய்க்கொண்டு ஸ்வயம் ப்ரயோஜநமான கைங்கர்ய விசேஷங்களுக்கு பக்தி தத்வஜ்ஞாநாதிகளைப் பற்றவாதல் பகவத் பாகவத ஸம்ருத்த்யாதிகளைப்பற்றவாதல் விளம்பாக்ஷமதையாலே யாதல் * அபாயஸம்ப்லவே ஸத்ய : ப்ராயச்சித்தம் ஸமாசரேத், ப்ராயச்சித்திரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத் * என்கிற நைமித்திகவிசேஷமாகவாதல் புந:ப்ரபத்திபண்ணுமதுக்கும் பூர்வ ப்ரபத்தியினுடைய நைரபேக்ஷயத்தோடு விரோதமில்லை—என்றபடி.

11. இப்படி க்ருதக்ருத்யனை ப்ரபந்நனுக்கு வர்ணாச்ரமாதி தர்மங்கள் ஸ்வதநத்ராஜ்ஞாஸித்தங்களான கைங்கர்ய விசேஷங்கள் என்றது—மற்றொரு பல விசேஷத்தைப்பற்ற வன்றிக்கே அகரணத்தில் ஆஜ்ஞாதிலங்கநதோஷம் வரும்படிகளாய், * செய்யேல் தீவினை யென்றருள்செய்யும் * என்று ஸ்வதந்த்ர பகவதாஜ்ஞாநுரூப சாஸ்த்ர விஹிதங்களான வர்ணாச்ரமாதி தர்மங்கள் தத்வஹித நிஷ்கர்ஷமுடையனாய், * தேவர்ஷி பூதாத்மந்ருணாம் பித்ருணாம் ந கிங்கரோ நாயம்ருணீ ச ராஜந், ஸர்வாத்மநா யச்சரணம் சரண்யம் நாராயணம் லோககுரும் ப்ரபந்ந : * இத்யாதிகளில்படியே அந்ய பஜநாதி தோஷரஹிதனை யிவனுக்கு சக்தி வஞ்சநம் பண்ணாதே அவர்ஜநீயங்களான ஸ்வாமி யுகந்த கைங்கர்ய மென்றபடி. பகவத் கைங்கர்யரதியான ப்ரபந்நனைப் பற்றவே* * உபாயாபாயஸம்த்யாகீ மத்யமாம் வ்ருத்திமாச்ரித :, மாமேவ சரணம் ப்ராப்ய மாமேவாந்தே ஸமச்நுதே * என்றும் * அவிப்லவாய தர்மாணாம் பாலநாய குலஸ்யச, ஸங்க்ரஹாயச லோகாநாம் மர்யாதாஸ்தாபநாயச, ப்ரியாய மம விஷ்ணோச்ச தேவதேவஸ்ய சார்ங்கிண :, மத்ஸீ வைதிகாசாரம் மநஸாபி ந லங்கயேத் * என்றும் சொல்லுகிற ப்ரமாண வர்க்கத்தையும், ஸ்ரீ பாஷ்யகாராதிகளுமருளிச்செய்த நித்யங்களையும் இங்கேயநுஸந்திப்பது.

12. இவனுக்கு ஆஜ்ஞாநுஜ்ஞா ஸித்தங்களான கைங்கர்யங்களெல்லாம் ஸ்வயம் ப்ரயோஜநங்கள் என்றது—ஆஹாரசுத்தி ஆசாரநியமம் அபராதபரிஹாரம் முதலான முன்பு சொன்னஆஜ்ஞாஸித்தங்களான வர்ணாச்ரமாதி தர்மங்களும், * பண்டைநாளாலே நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளும்கொண்டு நின்கோயில் சீய்த்து * இத்யாதிகளில்படியே

இச்சையுள்ளபோது செய்யவுமாய் அல்லாதபோது தவிரவுமாம்படி யேற்றமாக நிற்கிற அந்த ராத்மகுணாநுஸந்தாந ஸ்துதி ஸங்கீர்த்தன ஸம்மார்ஜநோபலேபந மாலாகரண தீபாரோபணாதி கைங்கர்யங்களெல்லாம் ஸர்வவிதபந்துவான ஸர்வஸ்வாமியினுடைய ஸம்ப்ரீதி ஹேதுவாகையாலே அநுரக்தபார்யாதிகளுடைய சுச்ரூஷணாதிகள் போலவும் முக்தருடைய வ்யாபாரங்கள் போலவும் * ப்ரஹர்ஷயிஷ்யாமி * என்னும் ப்ரயோஜநமொழிய மற்றொரு ப்ரயோஜந விசேஷத்தைக் கணிசிக்கவேண்டாதபடி, * துர்க்கதாவபி ஜாதாயாம் * காமயே வைஷ்ணத்வம் து * ஸர்வேஷு தேசகாலேஷு * இத்யாதிகளில்படியே இவைதன்னையே உத்தேசித்து ப்ரவர்த்திக்கும்படி ஸ்வரூபேண ஸ்வாதுக்களா யிருக்குமென்றபடி.

13. கரணாகரண ரூபங்களான அபசாரங்கள் புகுந்தாலும் ப்ரபந்நனுக்கு நரகாதிகளில்லை என்றது—அங்கமாகவாதல் ஸ்வதந்த்ரமாகவாதல் பகவத்ப்ரபத்தியை கைம்முதலாகப்பற்றின பரமைகாந்திக்கு ப்ரபல ப்ராரப்த துஷ்க்ருதவிசேஷத்தாலே புத்திபூர்வகமாக அக்ருத்யகரண க்ருத்யாகரண ரூபமான ஆஜ்ஞாதிலங்கநம் பிறந்ததாகில் * த்ருஷ்டோ தர்ம வ்யதிக்ரம: ஸாஹஸம் ச பூர்வேஷாம், தேஷாம் தேஜோவிசேஷேண ப்ரத்யவாயோ ந வித்யதே * என்று விஷயமன்றிக்கே நம்மளவில் * ததந்வீக்ஷ்ய ப்ரயுஞ்ஜாநஸ்ஸீதத்யவர: * என்னும்படி நிற்கையாலும், தர்மாதிக்ரமம் பண்ணின மஹாத்மாக்களுக்கும் ஸுக்ருத விநாசாதிப்ரத்யவாயம் சொல்லுகையாலும் அவ்வக்ருத்யகரணங்கள் ப்ரத்யவாயஹேதுக்களாய் நின்றால், * ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தம் வததி யம: கில தஸ்ய கர்ணமூலே, பரிஹர மதுஸூதநப்ரபந்நாந் ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் * தேவம் சார்ங்கதரம் விஷ்ணும் யே ப்ரபந்நா: பராயணம், ந தேஷாம் யமஸாலோக்யம் நச தே நரகௌகஸ:, யே ந்ருசம்ஸா துராத்மாந: பாபாசாரரதாஸ்ததா, தேபி யாந்தி பரம் தாம நரா நாராயணாச்ரயா: * இத்யாதிகளில்படியே நரகாதி மஹாக்லேசம் வாராதே யதாஸம்பவம் அநுதாப சிக்ஷாபக்லேசங்களாலே அபராதநிஸ்தாரமுண்டா மென்றபடி. * கிங்கரா தண்டபாசௌ வா ந யமோ நச யாதநா:, ஸமர்த்தாஸ்தஸ்ய யஸ்யாத்மா கேசவாலம்பநஸ்ஸதா * நமன்கூறு செய்து கொண்டிறந்த குற்ற மெண்ணவல்லனே * நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கு யாதொன்றுமில்லை * இத்யாதிகளையுமிங்கே யநுஸந்திப்பது.

14. ராஜகுமாரனுக்கும் அவதாநம் பண்ணி நடக்கவேண்டுமாப்போலே லகுப்ரத்யவாயமும் வாராமைக்காக அபசாரங்கள் தூரபரிஹரணீயங்கள் என்றது—* பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய த்வமஸ்ய பூஜ்யச்ச குருர்கரீயாந் * இத்யாதிகளில் சொல்லப்பட்ட ஸ்வபாவங்களையுடைய பகவாந், இவனைப் புத்ராதிகளைப்போலே பக்ஷபாதியாய் ரக்ஷிக்கும்படி நிற்கிற பாகவதனுக்கு யமவிஷய கமநமில்லையென்றும், அபசாரங்கள் புகுந்தால் அவைநீங்குகைக்கு சில உபக்லேசங்களளவும் பலமாய் விடுமென்றும் சொல்லுகிற சாஸ்த்ரார்த்தங்களின் படியே, புத்தி பூர்வாபராதம் பிறந்தால், அநுதாபம் பிறந்து புந: ப்ரபத்தி பண்ணாத போது, சிக்ஷாரூபப்ரத்யவாய விசேஷங்கள் வரும்படியாயிருக்கையாலே இப்படி ஈச்வரநிக்ரஹங்களுக்கு இலக்காகாமைக்காக * சத்வாரி யஸ்ய த்வாராணி ஸுகுப்தாநி மநீஷிண:, உபஸ்தமுதரம் பாணி: வாக் சதுர்த்தீ ஸ வை புமாந் * இதுகளில் சொன்ன அவதாந விசேஷமுடையாற்கு அநாகதாவேக்ஷணம் பண்ணினவிவன் * நயவேன் பிறர்பொருளை நள்ளேன் கீழாரோடு * செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம் * இத்யாதிகளில்படி யேற்கவே அபராதங்கள் புகுராதபடி வர்த்திக்க ப்ராப்தமென்றபடி. * விஹிதே ப்ரதிஷித்தே ச யதாமதி யதாபலம், த்வய்யாஹிதபரச்சீமந் வர்த்தே ராஜகுமாரவத் * என்கிற வசனத்துக்கு அவச்யகர்த்தவ்யங்களில் ப்ரவ்ருத்திரூபமாகவும், பரிஹரணீயங்களில் நிவ்ருத்திரூபமாகவும் பண்ணவேண்டும் வ்ருத்தியில் எனக்குள்ள ஜ்ஞாநபலங்களுக்கு அநுரூபமாக உபாய புத்தியையும் அதிலங்கநத்தில் பரமபல ப்ரதிபந்தக புத்தியைவிட்டு ப்ரவர்த்தியாநென்கையிலே தாத்பர்யம்.

15. ப்ரபத்திக்கு கோலின பலத்துக்கு ஒன்றாலும் ப்ரதிபந்தமில்லை என்றது—* மித்ர பாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந, தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேததகர்ஹிதம் * * கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மே பக்த: ப்ரணச்யதி * * ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமே

கம் சரணம் வ்ரஜ, அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:, மாமேகமேவ சரணமாத்மாநம் ஸர்வதேஹிநாம், யாஹி ஸர்வாத்மபாவேந யாஸ்யஸி ஹ்யகுதோபயம் * என்கிறபடியேசரண்யாபிப்ராயவிசேஷத்தாலும் * தேஷாம் து தபஸாம் ந்யாஸமதிரிக்தம் தபச்ச்ருதம் * என்கிற ப்ரபாவாதிசயத்தாலும் * நேஹாபிக்ரம நாசோஸ்தி ப்ரத்யவாயோ ந வித்யதே, ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத் * என்கிற நிவ்ருத்திதர்மாந்தரத்தில் சொன்ன நிஷ்கர்ஷம் நிஷ்காமனுடைய ப்ரவ்ருத்தியில் கைமுதிகந்யாய ஸித்தமாகையாலும் * யாசநாந்நச்யதி த்ருவம் * உபாயாபாயஸம்யோகே நிஷ்டயா ஹீயதேநயா * என்றது *ஏஷா ஸா வைதிகீ நிஷ்டா ஹ்யுபாயாபாயமத்யமா* என்கிறபடியே உபாயாபாயத்யாக விசிஷ்டமத்யமவ்ருத்தியினுடைய விசேஷணவைகல்யமாத்ரபரமாகையாலும், * ராக்ஷஸாநாமவிஸ்ரம்பாதாஞ்ஜநேயஸ்ய பந்தநே, யதா விகளிதா ஸத்யஸ்த்வமோகாப்யஸ்த்ரபந்தநா, ததா பும்ஸாமவிஸ்ரம்பாத் ப்ரபத்தி: ப்ரச்யுதா பவேத், தஸ்மாத் விஸ்ரம்பயுக்தாநாம் முக்திம் தாஸ்யதி ஸாசிராத் * என்றது, ப்ரபத்யநுஷ்டானகாலத்தில் விச்வாஸரூபாங்க வைகல்ய (பரிஹார) பரமாகையாலும், * யஜ்ஞோந்ருதேந க்ஷரதி தாநம் க்ஷரதி கீர்த்தனாத், ஆயுர்விப்ராவமாநேந தப: க்ஷரதி விஸ்மயாத் * இத்யாதிகளிற்போலே மற்றும் ப்ரபத்திக்கு விசேஷித்து ப்ரதிபந்தகாதிகளைச் சொல்லுவதொரு விசேஷவசனமில்லாமையாலும் லோகவேதங்களில் ஓரிடத்திலும் ஸமர்த்தகாருணிக விஷயசரணாகதிக்கு பலஹாநி காணாமையாலும் அபவாத பீதரான ஸ்ரீபரதாழ்வான் *சேஷ்யே புரஸ்தாச்சாலாயா: * சிரஸா யாசதஸ்தஸ்ய வசநம் ந க்ருதம் மயா * இத்யாதிமாத்ரத்தைக்கொண்டு இப்ப்ரபத்திபண்ணிறென்று சொல்லுமதுக்கு யதாபிப்ராயம் யதாகாலமபிமதஸித்தியுண்டாகையாலும், * தாவதார்த்திஸ்ததா வாஞ்சா தாவந்மோஹஸ்ததா ஸுகம், யாவந்ந யாதி சரணம் த்வாமசேஷாகநாசநம் * என்று பகவத்ப்ரபந்நனுக்கு அபிமதபலமப்போதே ஸித்திக்கும்படி நிற்கையாலும், ஸர்வசக்தியாய் பரமகாருணிகனான ஸர்வேச்வரனைப்பற்றி ப்ரத்திபண்ணுகிறவன் யாதொருகாலத்திலே யாதொருபலம் வரவேணுமென்றுகோலினான்—அந்தகாலத்திலே அந்தபலமவனுக்கு வருகை நியதம்; நடுப்புகுந்த நிஷித்த காம்யங்களுமதுக்கு ப்ரதிபந்தகங்களன்றிக்கே அதிகாராநுகுணப்ராயச்சித்தாதிகளாலே நடுவேதீர்ந்துவிடுமென்றபடி.

16. புத்தி பூர்வாபசாரங்கள் புகுந்தாலும் ப்ராயச்சித்த விசேஷமதிகாரி விசேஷ நியதம் என்றது—* சரீரம் பலமாயுச்ச வய: காலம் ச கர்ம ச, ஸமீக்ஷ்ய தர்மவித் புத்யா ப்ராயச்சித்தாநி நிர்திசேத் * அபிசேத் பாதகம் கிஞ்சித் யோகீ குர்யாத் ப்ரமாதத:, யோகமேவ ஹி குர்வீத நாந்யம் யத்நம் ஸமாசரேத், உபபாதகயுக்தோபி மஹாபாதகவாநபி, யாமிந்யா: பாதமேகம் து ப்ரஹ்மத்யாநம் ஸமாசரேத் * * அத பாதகபீதஸ்த்வம் ஸர்வபாவேந பாரத, விமுக்தாந்யஸமாரம்போ நாராயணபரோ பவ * மேருமந்தரமாத்ரோபி ராசி: பாபஸ்ய கர்மண:, கேசவம் வைத்யமாஸாத்ய துர்வ்யாதிரிவ நச்யதி, நாம்நஸ்தே யாவதீ சக்தி: பாபநிர்ஹரணே ஹரே, ச்வபசோபி நர: கர்த்தும் க்ஷமஸ்தாவந் ந கில்பிஷம் * அவசேநாபி யந்நாம்நி கீர்த்திதே ஸர்வபாதகை:, புமாந் விமுச்யதே ஸத்யஸ்ஸிஹ்மத்ரஸ்தைர் ம்ருகைரிவ, அயம் ஹி க்ருதநிர்வேசோ ஜந்மகோட்யம்ஹஸாமபி, யத் வ்யாஜஹார விவசோ நாம ஸ்வஸ்த்யயநம் ஹரே:. * ப்ராயச்சித்தாந்யசேஷாணி தப:கர்மாத்மகாநிவை, யாநி தேஷாமசேஷாணாம் க்ருஷ்ணாநுஸ்மரணம் பரம் * * க்ருதே பாபேநுதாபோ வை யஸ்ய பும்ஸ: ப்ரஜாயதே, ப்ராயச்சித்தம் து தஸ்யைகம் ஹரிஸம்ஸ்மரணம் பரம் * அதிபாபப்ரஸக்தோபி த்யாயந் நிமிஷமச்யுதம், பூயஸ்தபஸ்வீ பவதி பங்க்திபாவநபாவந:, நாராயணம் ஜபேந்நித்யம் ப்ரணம்ய புருஷோத்தமம், ஸ்வபந் நாராயணம் தேவம் கச்சந் நாராயணம் ததா, புஞ்ஜந் நாராயணம் விப்ரஸ்திஷ்டந் ஜாக்ரத் ஸநாதனம், உந்மிஷந் நிமிஷந் வாபி நமோநாராயணேதி வை, போஜ்யம் பேயம் ச லேஹ்யம் ச நமோநாராயணேதி ய:, அபிமந்த்ர்ய ஸ்ப்ருசந் புங்க்தே ஸ யாதி பரமாம் கதிம் * * ஸர்வபாபவிநிர்முக்த: ப்ராப்நோதி பரமாம் கதிம் * இத்யாதிகளில் படியே ஏகநிமித்தம் தனக்கே வித்வதவித்வத்வர்ணாச்ரமவயோவஸ்தாதி வைஷம்யத்தாலே ப்ராயச்சித்தம் மாறி நாநாப்ரகாரமாய்ப் போருகிறபடியே ப்ரபந்நனைப்பற்ற, * அபாயஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத், ப்ராயச்சித்திரியம் ஸாத்ர யத் புநச்சரணம் வ்ரஜேத். *

என்றபடிக்கு விசேஷ வசன முண்டாகையாலும், * யதி கிஞ்சிததிக்ராந்தம் விச்வாஸாத் ப்ரணயேந, வா. ப்ரேஷ்யஸ்ய க்ஷமிதவ்யம் மே ந கச்சிந்நாபராத்யதி * இத்யாதிகளில் சொன்ன ந்யாயத்தாலும, இப்படிக்கு ஸத்ஸம்ப்ரதாயாநுஷ்டான முண்டாகையாலும், பரமாத்ம நிஷ்டனுக்கு அக்ருத்யகரண க்ருத்யாகரணங்களால் பாபம் பிறவா தென்கிற வாக்யம் ஸ்துதிபரம். உத்தராகாச்லேஷ வசனமும் ப்ராமாதிக விஷயமாக பாஷ்யாதிகளிலே ஸ்தாபிக்கையாலும், * அநந்யஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிச்வாஸபூர்வகம், ததேகோபாயதா யாச்ஞா ப்ரபத்திச்சரணாகதிঃ *இத்யாதி ப்ரபத்திலக்ஷண வாக்யாநுகுணமாக புத்தி பூர்வாபசாரங்கள் புகுந்ததாகிலும், அவற்றுக்கு ப்ரதிபதோக்த ப்ராயச்சித்த யோக்யதை இல்லாதபோதும் ப்ரபந்நனுக்கும்* யத் யேந காமகாமேந ந ஸாத்யம் ஸாதநாந்தரைঃ, முமுக்ஷுணு யத் ஸாங்க்யேந யோகேந நச பக்திதঃ, ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே யதிঃ, தேநதேநாப்யதே தத்தந்ந்யாஸேநைவ மஹாமுநே, பரமாத்மா ச தேநைவ ஸாத்யதே புருஷோத்தமঃ * என்றும் * ஸா ஹி ஸர்வத்ர ஸர்வேஷாம் ஸர்வகாமபலப்ரதா * என்றும் ப்ரதிபாதிதமான ப்ரபாவத்தை யுடைத்தான ப்ரபத்திதன்னையே மீண்டும் ப்ரயோகிக்குமதுவே ஸ்வாதிகாராநுகுண ப்ராயச்சித்தமாகக்கடவ தென்றபடி.

17. இப்படி ப்ராயச்சித்தத்திலே மூட்டுகிறதும் கடின ப்ரக்ருதிகளுக்குக் கசைகாட்டுவாரைப்போலே அவன்பண்ணுகிற சிக்ஷைகளுமெல்லாம் சரண்ய ப்ரஸாதபலம் என்றது— *யம் ஹி ரக்ஷிதுமிச்சந்தி புத்யா ஸம்யோஜயந்தி தம்* என்கிறஸாமாந்யந்யாயத்தாலும் *ரக்ஷதே பகவாந் விஷ்ணுர்பக்தாநாத்மசரீரவத் * என்கிற விசேஷ வசனத்தாலும் ஆச்ரித விஷயத்தில் ஈச்வரன் செய்யுமவை யெல்லாம் ப்ரஸாதபலமாக வேண்டுகையாலே ஹிதைஷிகளான பித்ராதிகளைப்போலே அநுதாபாதிகளை வளர்ப்பித்து சாஸ்த்ர முகத்தாலே ப்ராயச்சித்த விசேஷத்தை யறிவித்து ப்ராயச்சித்தத்திலே மூட்டுகிறதுவும், விநீதரல்லாத புத்ராதிகளைக் கசாதிகளாலே பயம் பிறப்பிக்குமாப்போலே உபக்லேசங்களை விளைத்து உபரதியை உண்டாக்குமதுவும், ஸர்வபூத நிஸர்க்க ஸுஹ்ருத்தான ஸர்வலோக சரண்யனுடைய இரக்கமடியாக வருகிறதென்று க்ருதஜ்ஞராக ப்ராப்தமெபடி.

18. இங்கிருந்த காலம் தர்மாநுபந்தியான போகத்திலும் போகபுத்தியாலே ப்ராவண்யம் பிறந்ததாகில் இது தன்னதிகாராநுரூபமான கைங்கர்யாம்ருத ரஸத்துக்குத் தண்ணீர்த்துரும்பு என்றது—* ராகாத்யபேதம் ஹ்ருதயம் வாகதுஷ்டாந்ருதாதிநா, ஹிம்ஸாதிரஹிதঃ காயঃ கேசவாராதநம் த்ரயம் * *அஸக்திரநபிஷ்வங்கঃ புத்ரதாரக்ருஹாதிஷு* இத்யாதிகளில்படியே, ஆத்மகுணயுக்தனாயிருந்தா னொருவனாகிலும், க்ருஹஸ்தாவஸ்தையிலே தர்மாவிருத்த போகங்கள் சாஸ்த்ரபலத்தால் வரவேண்டிய தாதலால், முமுக்ஷுவான விவனுக்கு * சரீரம் வ்ரணவத் பச்யேத் அந்நம் து வ்ரணலேபநம், வ்ரணஸேசநவத் பாநம் வஸ்த்ரம் து வ்ரணபட்டவத் * இத்யாதிகளிற்படியே, வைராக்ய ஜ்ஞாந பக்த்யாதிகளுக்கு அநுகூலமான ஔஷதாதி க்ரமத்தாலே புத்திபண்ண ப்ராப்தமாயிருக்க, அநாதி துர்வாஸநா பரிபாக விசேஷத்தாலே ப்ரயோஜநாந்தரபரனுடைய விலக்கடி, இவனுடைய புத்தியிலே வருமதாகில், இத்தால் வருவதொரு ப்ரதாநபல ப்ரதிபந்தக மில்லையேயாகிலும், இப்போதிங்கிருந்து அநுபவிக்கிற கைங்கர்ய ரஸத்துக்கு ஸங்கோசாதி ஹேதுவாகையாலே, *யந்முஹூர்த்தம் க்ஷணம் வாபி வாஸுதேவோ நசிந்த்யதே, ஸா ஹாநிஸ்தந்மஹச்சித்ரம் ஸா ப்ராந்திஸ்ஸா ச விக்ரியா* * ஆவிதிகைக்கவைவர் குமைக்கும் சிற்றின்பம், பாவியேனைப் பலநீகாட்டிப் படுப்பாயோ* என்றும் பீதனைக ப்ராப்த மென்றபடி— * ப்ருதிவீம் ரத்நஸம்பூர்ணாம் யঃ க்ருஷ்ணாய ப்ரயச்சதி, தஸ்யாப்யந்யமநஸ்கஸ்ய ஸுலபோ ந ஜநார்த்தநঃ * பராங்முகாநாம் கோவிந்தே விஷயாக்ராந்தசேதஸாம், தேஷாம் தத் பரமம் ப்ரஹ்ம தூராத் தூரதரே ஸ்திதம் * இத்யாதிகளில் வர்ஜநீயபோகங்களன்றிக்கே மோக்ஷருசியை விலக்கும்படியான ப்ரயோஜநாந்தரங்களில் ப்ராவண்யத்தையுடையார்க்கு ஸர்வேச்வரன் துர்லப னென்கிறது. * அதோபாயப்ரஸக்தோபி புக்த்வா போகாநநாமயாந், அந்தே விரக்திமாஸாத்ய விசதே வைஷ்ணவம் பதம் * என்றது, மோக்ஷ ருசியும் ஸ்வர்க்காதிருசியும் நடப்பார்க்கு விளம்பம் வருமென்கிறது. * அப்ராப்திதঃ பரிஹரந் ஸ்வபரைஸ்ஸ்வாக்ஷாம் * என்கிற நிக்ஷேபரக்ஷையில் ச்லோகத்தையு மிங்கே யநுஸந்திப்பது.

19. இப்படி நிஷித்தபோக ப்ராவண்யம் கைங்கர்யாம்ருத ரஸத்துக்கு விருத்த மாகையாலே த்ருஷ்டி விஷம்போலே தூரபரிஹரணீயம் என்றது-ஸத்வநிஷ்டனுய், ஸ்வாமிக்கு அநபிமதத்தில் விமுகனுக ப்ராப்தனுயிருக்க. ஸர்வருக்கும் ஸ்வப்நாத்யவஸ்தைகளிலேநிஷித்த ப்ரவ்ருத்திகள் வருமாப்போலவும், அவஹிதரான ருஷிகளுக்கும்கூட ஓரளவுகளிலே தேவாதி களினுலே மோஹிதரா யகப்படுமாப்போலவும், முமுக்ஷுவுக்கு நிஷித்தபோகப்ராவண்யம் வரு மாகில், * அபாயாத் விரதச்சச்வந்மாம் சைவ சரணம் கத:, தநூக்ருத்யாகிலம் பாபம் மாம் ப்ராப்நோதி நரச்சநை: * இத்யாதிகளிற்படியே, இங்கு ப்ராயச்சித்தம் தண்டவிசேஷங்கள் வருமதுக்குமேலே அஸத்கல்பனுன தனக்கு உஜ்ஜீவனமுமாய்ப் போகமு மாகையாலே, அம்ருதகல்பமான கைங்கர்யாநுபவத்துக்கு அநதிகாராதிகளேப் பண்ணுகையாலே * விஷஸ்ய விஷயாணும் ச தூரமத்யந்தமந்தரம், உபபுக்தம் விஷம் ஹந்தி விஷயாஸ்ஸ்மரணுதபி* இத்யாதி களே யநுஸந்தித்து ஸந்நிதிபரித்யாகம் பண்ணவொட்டாத பாபத்தி லகப்படாதபடி நிபுண நிரூபணம்பண்ணி, ஸர்ப்பாதிக ளில்லாத தேசங்களிலே வர்த்திக்குமாபோலே நிஷித்தபோக ஸம்பாவனே இல்லாத தேசங்களிலே வர்த்திக்கவும் * பாபம் ப்ரஜ்ஞாம் நாசயதி க்ரியமாணம் புந:புந:, நஷ்டப்ரஜ்ஞ: பாபமேவ புநராரபதே நர:* இத்யாதிகளில் சொன்ன பாபாரம்பக பாபத்துக்கும் ப்ராயச்சித்தமாக ஏற்கவே ப்ரபத்திபண்ணவும் ப்ராப்த மென்றபடி. இப்படி வர்த்திக்குமவன் * அஹேரிவ கணுத் பீதஸ்ஸம்மாநாத் கரலாதிவ, குணபாதிவ ச ஸ்த்ரீப்யஸ் தம் தேவா ப்ராஹ்மணம் விது:* இத்யாதிகளில்படியே தேவர்களுக்கும் பஹுமாந விஷயமாம். * பரரந்த்ரேஷு ஜாத்யந்தா: பரதாரேஷ்வபும்ஸகா:, பரீவாதேஷு யே மூகாஸ்தேதீவ தயிதா மம, தந்மயத்வேந கோவிந்தே யே நரா ந்யஸ்தசேதஸ:, விஷயத்யாகிநஸ்தேஷாம் விஜ்ஞேயம் ச ததந்திகே * க்ஷணேபி தே யத்விரஹோதிதுஸ்ஸஹ:* என்றபடி ஸர்வேச்வரனுக்கு நிரதி சய ப்ரீதி ஹேதுவாம்.

20. கைங்கர்யமாவது ஸ்வாமி யுகந்த ஏவல்தொழில் செய்கை யாகையாலே இது யதாசாஸ்த்ரம் பண்ணினு லுகப்பாம் என்றது—நித்ய முக்தரும் பகவத் ப்ரீதி ஹேதுக்களேக் கொண்டு நிரபேக்ஷ ஸர்வவிஷய ஜ்ஞானத்தாலே ஸாக்ஷாத்கரித்துக் கைங்கர்யம் பண்ணுமாப் போலே யன்றிக்கே பத்ததசையில் கரணஸாபேக்ஷதை யுண்டாகையாலும், ப்ரத்யக்ஷாதி களுக்கு நிலமல்லாத விஷயத்தில் * பித்ருதேவமநுஷ்யாணும் வேதச்சக்ஷுஸ்ஸநாதந:* * மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி * இத்யாதிகளில்படியே சாஸ்த்ரமொழியக் கண்ணும் கைவிளக்கு மில்லாமையாலும், *யச்சாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய வர்த்ததே காமகாரத:* ந ஸ ஸித்தி மவாப்நோதி ந ஸுகம் ந பராம் கதிம், அசாஸ்த்ர மாஸுரம் க்ருத்ஸ்நம் * என்றருளிச்செய் தது இங்குத்தை ஸ்வயம் ப்ரயோஜந கைங்கர்யத்திலும் ஸாமாந்யந்யாய மாகையாலும், *அறிவிலேனுக் கருளாய்* அறியாத பிள்ளேகளோம் * என்று நிற்க ப்ராப்தமான வவஸ்தை யில் ஸ்வாபிமதமாத்ரத்தாலே ஒன்றைக் கைங்கர்யமென்று செய்தால் இது ஸ்வாமிக் கபிமத மென்கிற நியம மில்லாமையாலும், * லோகே ப்ரியதமாந்யாத்மநச்சேஷ்டாநி சாஸ்த்ராவிருத் தாநி * என்கிற நித்யத்திலே ஸ்ரீபாஷ்யகார ரருளிச்செய்கையாலும், * ஸ்வயம் து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம் வத * என்கிற கட்டளேயிலே (கிம் கரோமி) என்று தாஸன் நிற்க ஸ்வாமி சொல்லச் செய்யுமதுவும் கைங்கர்யமாக வேண்டுகையாலும், செய்த வேள்வியனுன ப்ரபந்நனுக்கும் யாவச்சரீரபாதம் யதாதிகாரம் யதாசாஸ்த்ரம் நடந்தா லிதுவும் *ப்ரஹர்ஷயிஷ் யாமி * என்கிற ப்ரதான பலபர்யந்தமா மென்றபடி.

21. பகவத் கைங்கர்யமும் பாகவத கைங்கர்யமும் சேரவநுஷ்டிக்க வரிதானபோது, பரம புருஷார்த்த காஷ்டையான பாகவத கைங்கர்யமே உபாதேயதமம் என்றது—ப்ரண வத்தில் சிக்ஷித ஸ்வரூபனுகையாலே சதுர்த்தியில் அபிப்ரேதமான பகவத் கைங்கர்யம் ஸ்வரூப ப்ராப்தமாய் நின்றது—நமஸ்ஸிலே ஸுசிக்ஷித ஸ்வரூபனுகையாலே பாகவத கைங்கர்யமும் இவனுக்கு ப்ராப்தமாயிருந்தது; இப்படியானு விரண்டும் சேரவநுஷ்டிக்க வரும்போது சேரவனுஷ்டிக்கவும், இரண்டத்தொன்றை விடவேண்டும்படியான ஆபத் தசையிலே,* தஸ்மாத் விஷ்ணுப்ரஸாதாய வைஷ்ணவாந் பரிதோஷயேத், ப்ரஸாதஸுமுகோ

விஷ்ணுஸ் தேஜஸைவ ஸ்யாந்ந ஸம்சய:, மம மத்பக்த பக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத், தஸ்மாந் மத்பக்த பக்தாச்ச பூஜநீயா விசேஷத:, ஆராதநாநாம் ஸர்வேஷாம் விஷ்ணோராராதனம் பரம், தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீயாராதனம் பரம், அநாத்ருத ஸுதம் கேஹீ புருஷம் நாபி நந்ததி, ததாநர்ச்சித தத்பக்தம் பகவாந் நாபிநந்ததி, ஸ்வாராதனம் விஹாயாபி ஸ்வபக்தாநர்ச்ச யந்தியே, தேப்ய: ப்ரபந்நோ பகவான் ஸித்திமிஷ்டாம் பரயச்சதி. இத்யாதி ப்ரமாண விசேஷங் களாலும், * எத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச் சாத்தியிருப்பார் தவம் * என்கிற ந்யாயம் ஸ்வயம் ப்ரயோஜந கைங்கர்யத்திலும் ஸமான மாகையாலும் பாகவத கைங்கர்யம் தன்னிலே பகவத் கைங்கர்யத்தைக் கண்டு க்ருதார்த்தனாயிருக்க ப்ராப்த மென்றபடி.

22. இவையிரண்டிலும் ப்ரதானம் ஆசார்யகைங்கர்யம் என்றது—பகவான் பக்கலில் போலே ஆசார்யன் பக்கலிலும் அநுவர்த்திப்ப னென்று அதிதேசித்தவ னன்றிக்கே *குரோர் குருதரம் நாஸ்தி குரோரந்யம் ந பாவயேத் குரோர்வார்த்தாம் கதாம் சைவ குரோர்நாம ஸதா ஜபேத், குருரேவ பரம் ப்ரஹ்ம குருரேவ பராகதி:, குருரேவ பராவித்யா குருரேவ பரந்தநம், குருரேவ பர:காமோ குருரேவ பராயண: * இத்யாதிகளிலே ஆசார்ய கைங்கர்ய ப்ராதான்யம் ப்ரமித மாகையாலும், பகவத் பாகவத கைங்கர்யங்களும் ஆசார்யாநுஜ்ஞையால் நடக்க வேண்டுகையாலே ஆசார்ய கைங்கர்யத்தை நிரூபித்துப் பார்த்தால் இது பகவதாஜ்ஞாஸித்த மாகையாலே பகவத் கைங்கர்யமும் ஆசார்யனுடைய பாகவதத்வ ஸாமாந்யத்தாலே இது தானே பாகவத கைங்கர்யமுமாய் நிற்கையாலே * சக்ஷுர்கம்யம் குரும் த்யக்த்வா சாஸ்த்ர கம்யம் து யஸ்ஸ்மரேத், ஹஸ்தஸ்தமுதகம் த்யக்த்வா கநஸ்தமபிவாஞ்சதி, ஸுலபம் து குரும் த்யக்த்வா துர்லபம் ய உபாஸதே, லப்தம் த்யக்த்வா தநம் மூட: குப்தமந்வேஷதே க்ஷிதௌ இத்யாதிகளில்படியே ஆசார்ய கைங்கர்யத்தைவிட்டு பகவத் கைங்கர்யாதிகளிலே யிழியக் கடவனல்லன் ; கண்ணிநுண் சிறுத்தாம்பின்படியே, ஆசார்ய கைங்கர்ய ப்ரதானராய் நின்று * திரிதந்தாகிலும் தேவபிரானுடைக் கரிய கோலதிருவுருக் காண்பன் நான், பெரியவண் குருகூர் நகர்நம்பிக் காளுரியனா யடியேன் பெற்றநன்மையே * இத்யாதிகளில்படியே ஆசார் யாபிமதமென்று யதாகாலம் பகவத் பாகவத கைங்கர்யங்களை யநுபவிக்க ப்ராப்தமென்றபடி.

23. இக்கைங்கர்யபரனுக்குப் பரமைகாந்திகளுகந்தவிடமே உசிதஸ்தானம் என்றது கர்மசீலரா யிருப்பார்க்கு வாஸஸ்தாநமாக சாஸ்த்ரங்கள் வகுத்த புண்யதேசங்கள் கலிகாலாதி தோஷங்களாலே ம்லேச்சாதி பரிக்ருஹீதங்களாய், * நாதர்மஜநபூயிஷ்டம் * இத்யாதிகளில்படியே பரித்யாஜ்யங்க ளாகையாலும், புண்யதேசங்களுக்குச் சொல்லும் லக்ஷணங்களுக்கு அவ்யாப்த் யதிவ்யாப்திக ளுண்டாகையாலே, இவை ப்ராயிகங்களாகை யாலும், *ஆத்மநஸ்துஷ்டிரேவ ச*. இத்யாதிகளைப் பார்த்துத் தன்னபிமதமாத்ரத்தாலே, ஒரு தேசத்தை யறுதியிட்டுக்கொள்ளப் பார்த்தால் அது தப்பவும் கூடுகையாலும் *ஏக: கார்யம் ந நிர்ணயேத் * என்று இது சாஸ்த்ர நிஷித்தமாகையாலும், ராஜஸ தாமஸ புருஷபுத்தியோடே கூடிக்கொள்ளப்பார்த்தால் * யயா தர்மமதர்மம் ச கார்யம் சாகார்யமேவ ச, அயதாவத் ப்ரஜாநாதி புத்திஸ்ஸா பார்த்த ராஜஸீ* இத்யாதிகளில்படியே, அவர்களுடைய கலக்கத்தையிட்டு தனக்குள்ள தெளிவையும் கலக்கும்படியாய் நிற்கையாலும், ஸம்யக்ஜ்ஞானஹேதுவான ஸத்வகுணோந்மேஷத்தாலே அநந்யார்ஹ சேஷத்வ ஜ்ஞானவான்களும் அநந்யோபாயருமாய் அநந்ய ப்ரயோஜநருமான ப்ரதிபுத்தாதிகாரிகள் தங்களுக்கு ஸ்வரூப ப்ராப்த ஸ்வாமி கைங் கர்யத்துக்கு நிலமிதுவென்று விஸம்வாதமாய் நிர்ணயித்து ஆதரத்தோடனே வர்த்திக்கும் க்ஷேத்ரம் ஆர்யாவர்த்தாதிக என்றிக்கே யொழிந்தாலும், மற்றவறறள் அவ்வடையாளங்கள் கண்டதில்லையேயாகிலும், * நிக்ருஹீதந்த்ரியக்ராமோ யத்ரயத்ர வஸேந் நர:, தத்ரதத்ர குருக்ஷேத்ரம் நைமிஷம்ச புஷ்கரம் ததா, துளஸீகாநநம் யத்ர யத்ர பத்மவநாநிச, வஸந்தி வைஷ்ணவா யத்ர தத்ர ஸந்நிஹிதோ ஹரி: யத்ர பாகவதாஸ்ஸ்நானம் குர்வந்தி விமலாசயா:, தத்தீர்த்தமதி, தம் வித்தி ஸர்வ பாபப்ரணாசநம், நிமிஷம் நிமிஷார்த்தம் வா யத்ர திஷ்டந்தி வைஷ்ணவா:. தத்தேசம் மங்களம் புண்யம் தத் தீர்த்தம் தத் தபோவநம், யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹா

பாகோ மஹீயதே, ந தத்ர ஸம்சரிஷ்யந்தி வ்யாதி துர்பிக்ஷதஸ்கரா:* இத்யாதிகளில்படியே ஸர்வாதிகமான புண்யக்ஷேத்ர மாகையாலே ஸ்வயம் ப்ரயோஜந த்ரிவித கைங்கர்யபானுக்கு அசேஷ சேஷவ்ருத்திகளுக்கும் இதுவே விக்ந நிவாரணாதி ஹேதுவான உசிதஸ்தாநமென்றபடி. இவர்களுக்கு பரமைகாந்தித்வமாவது, பாகத்வ பரஹித பரம புருஷார்த்தங்களில் ப்ரமாணாநுகுணமான அநந்யத்வாத்யவஸாய விசேஷம்: இதுவே பாகவத வைஷ்ணவ சப்தங்களுக்கும் ப்ரதாநவிஷயம்.

24. இப்படி துல்யசீலரைக் கிடையாதபோது விபரீத ஸம்ஸர்க்க மேகாந்தவாஸ பரிஹார்யம் என்றது—* துர்ஜந: பரிஹர்த்தவ்யோ வித்யயாலங்க்ருதோபி ஸந், மணிநா பூஷிதஸ்ஸர்ப்ப: கிமஸௌ ந பயங்கர: * த்யஜ துர்ஜந ஸம்ஸர்க்கம் பஜ ஸாது ஸமாகமம், குரு புண்ய மஹோராத்ரம் ஸ்மர நித்யமநித்யதாம் * * நாஸத்பி: கிஞ்சிதாசரேத் * வரம் ஹுதவஹ ஜ்வாலா பஞ்ஜராந்தர்வ்யவஸ்திதி:, ந சௌரிசிந்தாவிமுகஜந ஸம்வாஸவைசஸம் * அத்ய ப்ரப்ருதி ஹேலோகா யூயம் யூயம் வயம் வயம், அர்த்தகாமபரா யூயம் நாராயண, பரா வயம், நாஸ்தி ஸங்கதிரஸ்மாகம் யுஷ்மாகம் ச பரஸ்பரம், வயம் து கிங்கரா விஷ்ணோர்யூய மிந்த்ரியகிங்கரா:* இத்யாதிகளைப் பார்த்து * பாம்போடொரு கூரையிலே பயின்றாற்போலிருக்கிற துர்ஜந ஸம்ஸர்க்கத்தினுடைய தாரபரிஹாரணார்த்தமாக * ஸத்ஸந்நிகர்ஷே பரிவர்த்திதவ்யம் வித்யாதிகாச்சாபி நிஷேவணீயா:, ஸவர்ணதாம் கச்சதி ஸந்நிகர்ஷாந்நீல: ககோ மேருமிவாச்ரயந்வை * *ஸத்பிரேவ ஸஹாஸீத ஸத்பி: குர்வீத ஸங்கமம், ஸத்பிர்விவாதம் மைத்ரம் ச நாஸத்பி: கிஞ்சிதாசரேத் * இத்யாதிகளில்படியே ஸாத்விக ஸஹவாஸம் கர்த்தவ்யமானால், இது தேச விப்லவாதிகளாலே கிடையாதிருக்குமாகில், * ஏகாந்தசீலஸ்ய த்ருடவ்ரதஸ்ய பஞ்சேந்த்ரிய ப்ரீதி நிவர்த்தகஸ்ய, அத்யாத்மயோகே த்ருதமாநஸஸ்ய மோக்ஷோ த்ருவோ நித்ய மஹிம்ஸகஸ்ய. இத்யாதிகளில் தாத்பர்யத்தை யறிந்து * யாவரும் துணையில்லையென்று யதாசக்தி * பணவா ளரவணைப் பற்பலகாலமும் பள்ளிகொள் மணவாளர் நம்மை வைத்த பரிசிது * என்று பரஸங்கல்ப பாரவச்யத்தை யநுஸந்தித்து * தாமரைக் கண்ணனோ தனியேன் தனியாளனோ, தாமரைக் கையானே யுன்னை யென்றுகொல் சேர்வதுவே * என்று உயிர்த்துணைவனான எம்பெருமானோடே யிருக்கிறதை எண்ணிக்கொண்டிருக்க ப்ராப்தமென்றபடி.

25. இவனுக்குக் கதிசிந்தநாதிகள் சித்தஸந்தோஷ ஹேதுவான காலயாபநம் என்றது—ப்ரபத்திக்குக் கதிசிந்தநாதிகள் பரிகரவிசேஷ மாகவேணு மென்றொரு விசேஷ மின்றிக்கேயிருக்க, வித்யாந்தர ஸாமாந்யத்தாலே உத்தர பூர்வாகாச்லேஷ விநாசங்கள், உத்க்ரமண விசேஷம், ஹாநோபாதாந ப்ரகாரமர்ச்சிராதி மார்க்கம் அபவர்க்கதசாவிசேஷம் என்றிவற்றினுடைய சிந்தநம் ப்ரபத்திக் கங்கமாகக் கொள்ளவேணுமோவென்று ஊஹித்துப் பார்த்தால் கண்டோக்தமான அங்கபஞ்சகத்தையும் தத்வவித்துக்கு முமுக்ஷுத்வ ப்ராப்தமான ஸ்வதந்த்ரகர்த்ருத்வாதி புத்தி விசேஷத்யாகத்தையும் ஒழித்தவற்றில் * ப்ரபத்தே: க்வசிதப்யேவம் பராபேக்ஷா ந வித்யதே * என்றதுக்கு ஸங்கோசக மில்லாமையாலும் * மாகவைகுந்தம் காண்பதற் கென்மனம், ஏகமெண்ணு மிராப்பக லின்றியே * இத்யாதிகளில் உபாயோபகாரிக ளன்றென்று உபேக்ஷிக்கப்பார்த்தாலும் விலக்கவொண்ணாதபடி மனஸ்ஸுக்கு ஸ்வத: ப்ராப்த விஷயத்தில் பிறந்த ப்ராவண்யாதிசயத்தைச் சொல்லுகிறதாகையாலும், இப்படியிருக்கிற கதிசிந்தனாதிகள் * த்வயமர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா யாவச்சரீர பாதமத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ * * ஆராதயந் ஹரிம் பக்த்யா கமயிஷ்யாமி வாஸராந் * * சீர் கலந்த சொல்நினைந்து போக்காரேல் சூழ்வினையி னாழ்துயரை என்னினைந்து போக்குவரிப்போது* இத்யாதிகளில்படியே விரஹிணீ வ்ருத்தாந்த ந்யாயத்தாலே சித்த ஸந்தோஷ ஹேதுக்களுமாய் உசிதமான போதுபோக்குமா யிருக்குமென்றபடி. *ஸமீபம் ராஜஸிம்ஹஸ்ய ராமஸ்ய விதிதாத்மந:, ஸங்கல்ப ஹயஸம்யுக்தைர் யாந்தீமிவ மநோரதை:, நைஷா பச்யதி ராக்ஷஸ்யோ நேமாந் புஷ்பபலத்ருமாந், ஏகஸ்தஹ்ருதயா நூநம் ராமமேவாநுபச்யதி * இத்யாதிகளை இங்கே யநுஸந்திப்பது

26. சாதகவ்ருத்தியான விவனுக்கு அந்திமப்ரத்யயம் ஸ்வயத்ன ஸாத்யமன்று என்றது அந்திமப்ரத்யய விசேஷாநுகுணமாக பல விசேஷஸித்தியென்று அஷ்டமாத்யாயத்தில் அருளிச்செய்த ப்ரகாரத்தை நினைத்து நமக்கு ப்ராப்ய விஷயத்தில் அந்திமப்ரத்யயத்தை நாமே ஸாதிக்கவேணுமென்று நினைத்திருக்கவேண்டாம். * ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே சரீரே ஸதி யோ நரঃ, தாதுஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விச்வரூபம் ச மாமஜம்; ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்டபாஷாணஸந்நிபம், அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம் * ஜ்ஞாநஸமகாலமுக்த்வா கைவல்யம் யாதி கதசோகঃ, தீர்த்தே ச்வபசக்ருஹே வா நஷ்டஸ்ம்ருதிரபி பரித்யஜந் தேஹம் * * சரீரபாதஸமயே து கேவலம் மதீயயைவ தயயா அதிப்ரபுத்தோ மாமேவாவலோகயந் அப்ரச்யுத பூர்வஸம்ஸ்காரமநோரதঃ * * எய்ப்பென்னைவந்து நலியும்போது அங்கேதும் நானுன்னை நினைக்கமாட்டேன் அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன் * இத்யாதிகளில்படியே பகவத்க்ருபையாலே அதுவும் தானே வந்ததாகில் காண்கிறோமென்று பரமபலத்தில்போலே அந்திமப்ரத்யயத்திலும் நிர்பரனாய் * யம் யோகிநঃ ப்ராண வியோககாலே யத்நேந சித்தே விநிவேசயந்தி * என்கிற ச்லோகத்தை விட்டு சாதகவ்ருத்தியாய் க்ருஷ்ண மேகத்தினுடைய க்ருபாரஸத்தைப் பார்த்திருக்க உசிதமென்றபடி.

* ஸத்வஸ்தாந் நிப்ருதோ பஜஸ்வ ஸமயாசாராந் வ்யவஸ்தாபய * என்கிற ச்லோகத்தின் தாத்பர்யத்தையு மிங்கே யநுஸந்திப்பது.

27. இப்படி க்ஷணக்ருத்யமான ஆத்ம ஸமர்ப்பண யாகத்துக்கு பகவத் ஸங்கல்ப ஸாத்யமான தேஹாவஸாநம் அவப்ருதம் என்றது—ந்யாஸவித்யையில் விதிக்கப்பட்ட ஆத்ம ஸமர்ப்பணயாகம் ஸாங்கமாக ஸக்ருத் கர்த்தவ்யமென்று ப்ரமாண ஸித்தமாகையாலும் * ஏவம் சரணமப்யேத்ய பகவந்தம் ஸுதர்சநம், அநுஷ்டிதக்ரதுசதோ பவத்யேவ ந ஸம்சயঃ* இத்யாதிகளில்படியே உத்தராநுவாகம் பூர்வோக்த ப்ரபத்திபலத்தைப் பற்ற கர்த்தவ்ய சேஷமில்லை யென்று தோற்றுகைக்காக ஸர்வகர்த்தவ்யங்களு மிவனுக்குத் தானே ஸம்பந்நங்களென்று ப்ரசம்ஸிக்கிறதாகையாலும், இவனுக்கு மரணத்தை அவப்ருதமென்று சொன்னதுக்கு-இந்த யாகத்துக்கு வேறொரு அவப்ருதமில்லை; * சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும்பிரான் * என்கிறபடியே தேஹபாதாநந்தரம் திவ்யலோக ப்ராப்தி யுண்டாமென்கிறத்திலே தாத்பர்யம். அல்லது இவனுக்கு ஸ்வய மநுஷ்டேயமன்றிக்கே பகவத் ஸங்கல்பமாத்ரத்தாலே ஒருகாலத்திலே *க்ருத க்ருத்யாঃ ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரியமிவாதிதிம் * என்று கண்டிருக்கக் கடவ மரணத்தை இவனுக்கொரு கர்த்தவ்யமாக விதிப்பித்தல் தானே வருகிற மரணத்திலே அவப்ருத த்ருஷ்டிபண்ண விதிப்பித்தல் செய்கிறதன்றென்றபடி.

28 ஸதாசார்ய பரிக்ரஹத்துக்கு முன்புள்ளவநாதிகாலமெல்லாம் ஒரு காளராத்ரி என்றது—*அசேதநா பரார்த்தாச நித்யா ஸதத விக்ரியா, த்ரிகுணா கர்மிணாம் க்ஷேத்ரம் ப்ரக்ருதே ரூபமுச்யதே; தாருண்யக்நிர்யதா தைலம் திலே தத்வத் புமாநபி, ப்ரதாநேவஸ்திதே வ்யாபீ சேதநாத்மாத்மவேதநঃ* *தேஹயோகாத்வா ஸோபி ததந்தரப்ரதிபத்தௌ ரம்ஹதி ஸம்பரிஷ்வக்தঃ ப்ரச்ந நிரூபணாப்யாம்* இத்யாதிகளில்படியே * அநாதிகாலமாமோக்ஷாத் கர்மமூல த்ரிகுண த்ரவ்யரூபதிரஸ்கரிணீஸம்வ்ருதனாய் பீஜாங்குரந்யாயத்தாலே சங்கிலித்துவக்காய்ப் போருகிற அபசாரப்ரவாஹத்திலே இருள்தருமாஞாலத்துள்ளே இருந்து எட்டுமிரண்டுமான இக்கட்டளையறியாதே ஸ்வயம் ப்ரகாசனான தன்னுடைய வாகாரங்களையும் காணமாட்டாதே * எஞ்ஞான்றுமெங்கு மொழிவறநிறைந்து நின்று நித்யாஸங்கமான நிரபாயமஹாநிதியையும் காணப்பெறாதே ப்ரகாச ப்ரவ்ருத்தி சூந்யதையாலே காளராத்ரி கல்பமான அநாதிகாலமெல்லாம் அநாதி மாயையாலே ஸுப்தனாய்க்கிடக்கிறவாத்மாவுக்கு இவ்வவஸ்தைகளில் பகல் காண்கைக்காக ஆசார்யபரிக்ரஹம் அருணோதயம்போலே தோன்றுகிறதாகையாலே *குசப்தஸ்த்வந்தகாரஸ் ஸ்யாத் ருசப்தஸ் தந்நிரோதகঃ, அந்தகாரநிரோதித்வாத் குருரித்யபிதீயதே* *ஆசிநோதி ஹி சாஸ்த்ரார்த்தாந் ஆசாரே ஸ்தாபயத்யபி, ஸ்வயமாசரதே யஸ்மாத் தஸ்மாதாசார்ய உச்யதே* இத்யாதிகளிற்படியே இவ்விருளை நீக்கவல்ல ஞானச்சுடர்விளக்கைத் தந்து நல்வழி

காட்டின பரமோபகாரகன் திறத்தில், *ப்ரஹ்மவித்யாப்ரதாநஸ்ய தேவைரபி ந சக்யதே, ப்ரதிப்ரதாநமதவா தத்யாச்சக்தித ஆதராத்* என்கிறபடி நித்யருணியாய் * என்னைத் தீமனங்கெடுத்தாய் உனக்கென்செய்கேன் * என்று நினைவு குலையாதே * அத்ர பரத்ர சாபி நித்யம் யதீயசரணௌ சரணம் மதீயம் * என்றிருக்க ப்ராப்தமென்றபடி.

29. பின்பு தேஹாவஸாநத்தளவும் நல்விடிவு என்றது-இப்படி பலமூலமான ஆசார்யபரிக்ரஹம் பிறந்ததாகில் அத்தால் அஸ்திஸ்தூணாதிலக்ஷண சரீரகாராக்ருஹம் விழுமளவும் ப்ராரப்தகர்ம விசேஷங்களாலே அஜ்ஞாநாந்தகாரலேச மிச்ரனாய் நடந்தாலும் ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே ஜ்ஞாநவைராக்ய பக்திகள் பூப்போலே விகஸிக்கிறபடியும் இத்தாலே தனக்கு வருகிற ஆமோதத்தையும் அநுபவித்துக்கொண்டு ப்ரபுத்தனாய் பலசிற்றின்பம் காட்டிப்படுக்கிற படுக்கையில் நின்று மெழுந்திருந்து * நிஸ்ஸம்சயஸ் ஸுகமாஸ்வ * என்கிறபடியே ப்ரதிஷ்டித புத்தியாயிருந்து *அநயாஹம் வசீபூத: காலமேதந் ந புத்தவாந், உச்சமத்யமநீசாந்தாம் தாமஹம் கதமாவஸே, அபேத்யாஹமிதோ கத்வா ஸம்ச்ரயிஷ்யே நிராமயம், அநேந ஸாம்யம் யாஸ்யாமி நாநயாஹமசேதஸா, க்ஷமம் மம ஸமாநேந நைகத்வமநயா ஸஹ.* இத்யாதிகளில்படியே மேல்வருகிற ஸர்வாநிஷ்டநிவ்ருத்தியையும் நிரதிசயமஹாநந்தேஷ்ட ப்ராப்தியையும் பார்த்து *இறையுள்ளிலொடுங்கி யிருக்கப்ராப்த மென்றபடி.

30. மேல்முழுக்க ஸ்வச்சந்தகைங்கர்ய மஹோத்ஸவதிவஸம் என்றது—முமுக்ஷுவாய் க்ருதக்ருத்யனான வாத்மாவை ஒரு ஆகரத்தில் நின்றும் பெற்ற மஹாரத்னத்தின் மண்பற்றைக் கழிக்குமாப்போலே ஸ்தூலஸூக்ஷ்ம ப்ரக்ருதி ஸம்பந்தத்தைக் கழித்து ஸர்வதோமுகமான ப்ரகாசத்தையுண்டாக்கி ஸ்ரீகௌஸ்துபத்தைப்போலே ஹ்ருத்யனாகுவதாக வடியிலே மீளாவடைக்கலம் கொண்டருளின ச்ரிய:பதி திருவடிகளிலே அவன்தன்னைப்போலே தேசகாலாதி பரிச்சேதமின்றிக்கே இருப்பதாய் * ஸாயுஜ்யம் ப்ரதிபந்நா யே தீவ்ரபக்தாஸ் தபஸ்விந:, கிங்கரா மம தே நித்யம் பவந்தி நிருபத்ரவா: * * பவந்தமேவாநுசரந் * இத்யாதி ப்ரமாண ஸம்ப்ரதாய ஸித்தங்களான கைங்கர்யமஹோத்ஸவத்திற்கு * மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே * *மாமுபேத்ய புநர்ஜந்ம து:க்காலயமசாச்வதம், நாப்நுவந்தி மஹாத்மாநஸ் ஸம்ஸித்திம் பரமாம் கதா: * இத்யாதிகளில்படியே அபரஸந்தியில்லாதபடி ஒருக்கால் விடிந்த திவஸமாய் யதாவஸ்திதாத்மஸ்வரூபாவிர்பாவத்துக்கு மூலமாய் உதயாஸ்தமயங்களும் உபராகமுமின்றிக்கே அநபாய ப்ரபாந்விதனான அபரிச்சிந்நாதித்ய னென்றநுஸந்தித்தவனுடைய நித்யோதயமே தனக்கு நித்யாப்யுதயமாக நிரூபித்துக்கொண்டிருக்க ப்ராப்தமென்றபடி. "ஈச்வரனுக்கு ஆத்ம ப்ராப்தியுண்டு; ஆத்மாவுக்கு ஈச்வரப்ராப்தியில்லை." என்றும், பேறுமிழவு மிரண்டுமவனதென்னு மிதின் ப்ரகாரத்தில் சொல்லும் வார்த்தைகளுக்கெல்லாம் பரசேஷதைகரஸனான தனக்கு அபவர்க்கதசையில் வருமதிசயமும் ஸர்வ சேஷிக்கு புஷ்பாங்கராக பரிமளாதிவத் போக்ய மென்று அநுஸந்திக்க ப்ராப்தமென்று தாத்பர்யம்.

31. இது ஸாத்விக ஹ்ருதயங்கமையான ரஹஸ்ய ரத்னாவளீ என்றது—முதற்கவி தொடங்கி முப்பது வாக்கியங்களினாலே ப்ரதிபாதித்த வர்த்தங்களை யெல்லாம் மோக்ஷசாஸ்த்ர ஸாரபூத மூலமந்த்ராதிகளில் ஸங்க்ருஹீதங்களான பரதத்வ பரமஹித பரம புருஷார்த்தங்களைப்பற்றின ஸம்யகர்த்தங்களாகையாலே மாதகத்தை காசமென்று உபேக்ஷிக்கும் மந்தமதிகளைப்போலன்றிக்கே இவற்றினுடைய ப்ராசஸ்த்ய போக்யத்வ மஹத்த்வ மங்களத்வ ஸங்க்ரஹத்வாதிகளை யறியவல்ல ஸத்வநிஷ்டருக்கு ரஹஸ்ய ரத்னாவளி எப்போதும் ஹ்ருதயத்திலே பூணுமதென்றபடி. * த்ரைகுண்யவிஷயா வேதா நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுந! நிர்த்வந்த்வோ நித்யஸத்வஸ்தோ நிர்யோகக்ஷேம ஆத்மவாந், யாவாநர்த்த உதபாநே ஸர்வதஸ்ஸம்ப்லுதோதகே, தாவாந் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத:, *பஹுப்யச்ச மஹத்ப்யச்ச சாஸ்த்ரேப்யோ மதிமாந் நர:, ஸர்வதஸ் ஸாரமாதத்யாத் புஷ்பேப்ய இவ ஷட்பத:, * அநந்தபாரம் பஹு வேதிதவ்யமல்பச்ச காலோ பஹவச்ச விக்நா:, யத் ஸாரபூதம் தததுபாததீத ஹம்ஸோ யதா க்ஷீரமிவாம்பு மிச்ரம், *த்ரயோவேதாஷ்ஷடங்காநி ச்சந்தாம்ஸி விவிதாஸ் ஸ்வரா:, ஸர்வமஷ்

டாக்ஷராந்தஸ்தம் யச்சாந்யதபி வாங்மயம். *கிம் தஸ்ய பஹுபிர்மந்த்ரைः கிம் தஸ்ய பஹுபிர்வ்ரதைः, நமோ நாராயணாயேதி மந்த்ரஸ்ஸர்வார்த்த ஸாதகः, தத்வம் ஜிஜ்ஞாஸமாநாநாம் ஹேதுபிஸ்ஸர்வதோமுகைः. தத்வமேகோ மஹாயோகீ ஹரிர்நாராயணः பரः * தத் கர்ம யந் ந பந்தாய ஸா வித்யா யா விமுக்தயே, ஆயாஸாயாபரம் கர்ம வித்யாந்யா சில்பநைபுணம் * ஸம்ஜ்ஞாயதே யேந ததஸ்ததோஷம் சுத்தம் பரம் நிர்மலமேகரூபம், ஸந்த்ருச்யதே வாப்யதிகம்யதே வா தத்ஜ்ஞாநமஜ்ஞாநமதோந்யதுக்தம்* ஸர்வேஷாமேவ தர்மாணாமுத்தமோ வைஷ்ணவோ விதி:, ந விஷ்ண்வாராதநாத் புண்யம் வித்யதே கர்ம வைதிகம் *இதி ஸம்ஸாரதுக்கார்த்ததாபதாபிதசேதஸாம், விமுக்திபாதபச்சாயாம்ருதே குத்ர ஸுகம் ந்ருணும் *ததஸ்ய த்ரிவிதஸ்யாபி துக்கஜாதஸ்ய பண்டிதை:, கர்ப்பஜந்மஜராத்யேஷு ஸ்தாநேஷு ப்ரபவிஷ்யத:, * நிரஸ்தாதிசயாஹ்லாத ஸுகபாவைகலக்ஷணு, பேஷஜம் பக்வத்ப்ராப்திரேகாந்தாத்யந்திகீ மதா * திருமாலையல்லது தெய்வமென்றேத்தேன் *திருநாரணன்தாள்காலம்பெறச்சிந்தித்துய்மினோ* * கோலத் திருமாமகளோடுன்னை * இத்யாதிகளை யிங்கேயநுஸந்திப்பது.

மேல்கவி- இப்படி ப்ரதிஷ்டித புத்தியான ப்ரபந்நனுக்கு ஸ்வயம்ப்ரயோஜநமான உத்தரக்ருத்ய விசேஷத்திலுமுகப்பிக்கும்படியை * முக்த்யை நிர்விஷயம் மந: * இத்யாதிகளின்படியே உபகாரகதமமாய் அந்தரங்கமுமான மநஸ்ஸைப் பற்ற உபதேசிக்கிறுப் போலே ப்ரவ்ருத்தமான வாக்யவிசேஷத்தாலே காட்டுகிறது. இதில் (சிறுபயனிற்படியாததகவோர்) என்றது *கதாகதம் காமகாமா லபந்தே* அந்தவத்து பலம் தேஷாம் தத்பவத்யல்பமேதஸாம் * என்றும்*யே து சிஷ்டாஸ்த்ரயோ பக்தாः பலகாமா ஹி தே மதாः, ஸர்வே ச்யவநதர்மாணः * என்றும் சொல்லுகிற க்ஷுத்ரப்ரயோஜநங்களை ஆசைப்படாதே ப்ராரப்தகர்மவசத்தாலே வந்தவற்றிலும் *அநந்தம் பத மே வித்தம் யஸ்ய மே நாஸ்தி கிஞ்சந, மிதிலாயாம் ப்ரதீப்தாயாம் ந மே கிஞ்சித் ப்ரதஹ்யதே * என்னும்படி துவக்கற்று * ப்ரதிபுத்தஸ்து மோக்ஷபாக் * என்றும் * ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேந் மதுஸூதநः, ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்தசிந்தகः * கண்டுகேட்டுற்று * என்கிற பாட்டிலும் * ஊனேறு செல்வத்திலும் சொல்லுகிறபடியே த்வயத்தில் உத்தரகண்டத்தில் ஊற்றமுடையவர்களென்றபடி. (தகவோரென்றது) * பரீக்ஷ்ய விவிதோபாயைः க்ருபயா நிஸ்ப்ருஹோ வதேத் * இத்யாதிகளிற்படியே ஸுபரீக்ஷிதரான ஸச்சிஷ்யர்களைப் பெற்றால் க்யாதிலாப பூஜாதிப்ரயோஜநாந்தர நிரபேக்ஷமாகச் சொல்லியல்லது தரிக்கமாட்டாதபடியான பரதுக்க நிராகரணேச்சையுடையவர்களென்றபடி. (எம்மைச்சேர்க்க) என்றது *ந தர்மநிஷ்டோஸ்மி* என்கிற ச்லோகத்திலும், * நோற்றநோன்பிலேன் நுண்ணறிவிலேன் * இத்யாதிகளிலும் சொல்லுகிற ஆகிஞ்சந்ய பூர்த்தியுடைய நம்மை கெடுமரக்கலத்தை ஒரு அநுகூலஸதாகதி கரை சேர்க்குமாபோலே *சோகமோஹக்ரஹக்ரஸ்தோ விசரந் பவஸாகரே, இஹாத்ய விதிநா ப்ராப்தஸ்தவ பாதாப்ஜபத்தநம்* என்னும்படி விண்ணோர் பிரானார் மாசில்மலரடிக்கீழ் எம்மைச் சேர்க்கவென்றபடி.

(அடைக்கலம்கொண்ட திருமால்) என்றது—இப்படி தானும் பிறரும் தனக்குத் தஞ்சமாகாதபடி நிற்கிற நம்மை அநந்யரக்ஷ்யத்வேந ஸமர்ப்பிக்க அலங்கரீய புருஷகாரகுண விசேஷங்களாலே ப்ரேரிதனாய்க்கொண்டு பரஸ்வீகாரம் பண்ணின ச்ரியःபதியென்றபடி. (தானே மறுபிறவியறுத்து) என்றது—அடியிலே கரணகளேபர ப்ரதாநாதிபூர்வகமாக இவன் க்ருஷிபண்ணின ஸர்வவித பந்துவான தானே தேஹாந்தர பரிக்ரஹ ஹேதுவான புண்ய பாபஸஞ்சித பாபவர்க்கத்தை யெல்லாம் கழித்தென்றபடி. (அழியாவானில் வைக்கும்) என்றது—* திவ்யம் ஸ்தாநமஜரம் சாப்ரமேயம் புத்திஜ்ஞேயஞ் சாகமைர் கம்யமாத்யம் * ஏதே வை நிரயாஸ்தாத ஸ்தாநஸ்ய பரமாத்மநः * இத்யாதிகளில் சொன்ன கலங்காப் பெருநகரத்திலே நித்யஸூரிகளோடு நிர்விசேஷமாக மேலுள்ள காலமெல்லாம் * புணைக்கொடுக்கிலும் போகவொட்டாதே வைக்குமென்றபடி. (மனமே நீ மகிழாதே யிருப்பதென்கொல்) நிச்சேஷாநிஷ்டநிவ்ருத்தியையும் நிரதிசய புருஷார்த்தமும் பெறுகைக்கு நிஸ்ஸமாப்யதிகனான ஸத்ய ஸங்கல்பன், * மோக்ஷயிஷ்யாமி மா சுசः என்று நினைப்பிட்டருளின பின்பு ஹர்ஷஸ்தானத்திலே சோகிக்கைக்கு ஒருபடியாலும் ப்ராப்தியில்லை யென்றபடி.

(உறுவதுனக்குரைக்கேனிங்கிருந்தகாலம்) என்றது *அஸ்திஸ்தூணம் ஸ்நாயுபத்தம் மாம்ஸசோணிதலேபநம், சர்மாவருத்தம் துர்கந்தி பாத்ரம் மூத்ரபுரீஷயோঃ * ஜராசோகஸமாவிஷ்ரோகாயதநமாதுரம், ரஜஸ்வலமநித்யம் ச பூதாவாஸமிமம் த்யஜேத், *இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்டம் திப்ரஸபம் மநঃ* அஸம்சயம் மஹாபாஹோ மநோ துர்நிக்ரஹம் சலம்* ஊனிடைச் சுவர் வைத்தென்புதூண் நாட்டி உரோம மேய்ந்தொன்பதுவாசல் தானுடைக்குரம்பை * * பொல்லாவாக்கையின் புணர்வினையறுக்கலறு * * வன்பரங்களெடுத்து ஐவர் திசை திசை வலித்தெற்றுகின்றனர் * *நின்றவாநில்லா நெஞ்சினையுடையேன்* இத்யாதிகளில் சொன்ன துர்நிவார துஸ்த்யஜதோஷபஹுள தேஹேந்த்ரியங்களோடேகூட * அதிமாநம் ஸதாஹாஸம் வாக்ப்ரலாபம் விகத்தநம், ஆத்மநா சாத்மமநநம் ஆத்மநிந்தாப்ரசம்ஸநே * இத்யாதிகளில் சொன்ன ராஜஸதாமஸவிகாரங்களுக்கு விளைநிலமான கொடுவுலகத்திலே ஒருமருளாலே யிருக்கவேண்டிய காலத்தளவும் என்ன பிழைவருகிறதென்றுமிப்போது நிரபாயப்ரதாந கைங்கர்யத்தை உளாந்துநிற்கிறோமென்றும் பரிதபிக்கப்பார்த்தாயாகில் ஸாத்யோபாய விசேஷ வசீக்ருதமான ஸித்தோபாய விசேஷத்தாலே ஸாத்யப்ராப்தி விசேஷ லக்ஷணபூத(மான) ஸித்தப்ராப்ய விசேஷப்ராப்தியில் ஸம்சயமற்ற உனக்கு மிகவும் பரிதாபம் சமிக்கும்படி நின்ற நிலைக்கு உற்றது சொல்லுகிறோமென்றபடி.

(ஒரு பிழையும் புகுராத வுணர்த்திவேண்டி) என்றது—பகவதபசாராதிகள் எல்லாத்துக்கும் நிதாநம் தத்வஜ்ஞாநாதி வைகல்யமாகையாலே * தத்பாதபக்திஜ்ஞாநாப்யாம் பலமந்யத் கதாசந ! ந யாசேத் புருஷோ விஷ்ணும் யாசநாந் நச்யதி த்ருவம் * இத்யாதிகளில்படியே அநந்ய ப்ரயோஜநரைக்கொண்டு தத்வஜ்ஞாநாதி வ்ருத்தியை அபேக்ஷித்தென்றபடி. (பெறுவதெல்லா மிங்கே நாம் பெற்றுவாழ) என்றது, பரமபதத்திலே சென்று சேஷ சேஷாசநாதி ஸமானமாகவே பெறக்கடவ சேஷ வ்ருத்திகளை யெல்லாம் இந்தளத்திலே தாமரைப் பூப்போலவும் மரு பூமியிலே மஹா தடாகத்தைப் போலவும் * ஈச்வரோஹ மஹம் போகீ * இத்யாதிகளில்படியே எதிரம்பு தொடுத்து நிற்கும் தேசத்திலே ஆத்மதாஸ்யத்தை யுணர்ந்து அகிஞ்சநராய் அநந்யப்ரயோஜநராய் ந்யஸ்தபரராய் நிர்ப்பரரான நாம் நிரபாயமாகப் பெற்று ஸந்துஷ்டராக வென்றபடி. (பேரடிமையா லேதென்றிகழேல்) என்றது, ஸர்வசக்தியான பரம காருணிகன் பக்கலிலே பரந்யாஸம் பண்ணினோமே யாகில் பண்ணப்போகிற கைங்கர்யம் மோக்ஷோபாய மன்றாகில் இதென்ன ப்ரயாஸமென்று ஸ்வரூபாநு குண வ்ருத்தியான கைங்கர்யத்தை யுபேக்ஷியாதே கொள்ளென்றபடி. (நீயே) என்றது, மேலும் மோக்ஷோபாய மல்லாத கைங்கர்யத்தை யன்றோ நீ பரம புருஷார்த்தமாகக் கோலினது; ஆனலிங்கு மதுஸமானமன்றோ என்றுணர்ந்துகொள்ளென்றபடி.

மேலார்யையில் * வித்யாசோரோ குருத்ரோஹீ வேதேச்வர விதூஷகঃ, த ஏதே பஹு பாப்மாநஸ் ஸத்யோ தண்ட்யா இதி ச்ருதিঃ * இத்யாதிளில் சொன்ன விபரீதர்கையிலகப்படாதபடி ரக்ஷிக்கவிதிக்கிறது. (ரக்ஷிந்து) என்றது—இதினுடைய சீர்மை யறிந்து * யோ கோபய த்ய யோக்யாநாம் யோக்யாநாம் ஸம்ப்ரயச்சதி * இம்மர்த்தம் ஸ மாந்யோமே ஸ்வஸ்தி வோஸ்து வ்ரஜா ம்யஹம் *வித்யயைவ ஸமம் காமம் மர்த்தவ்யம் ப்ரஹ்மவாதிநா, ஆபத்யபி ஹி கோராயாம் ந த்வேநா மிரிணே வபேத்* இத்யாதிகளின்படியே சிந்தாமல் கொள்ளுமென்றபடி. (அநந்ய ரக்ஷ்யாம்) என்றது *நாப்ருஷ்டঃ கஸ்யசித் ப்ரூயாத் நசாந்யாயேந ப்ருச்சதঃ, ப்ருஷ்டோபி ந வதேதர்த்தம் குஹ்யம் ஸித்தாந்தமேவ ச * என்று சொல்லுகிற நியமங்களை நிரூபித்து, அபாத்ரவ்யயம் பண்ண ருசியில்லாத அநந்யப்ரயோஜநராலே ரக்ஷிக்கப்படுமென்றபடி. அங்ஙனன்றிக்கே * ஊஷரே நிவபேத் பீஜம் ஷண்டே கந்யாம் ப்ரயோஜயேத், ஸ்ருஜேத் வா வாநரே மாலாம் நாபாத்ரே சாஸ்த்ரமுத்ஸ்ருஜேத்* என்கிறபடியே அபாத்ரத்திலே ஸமர்ப்பித்தால் * மாணிக்கங்கொண்டு குரங்கெறிவொத்து இது ரக்ஷையுண்டாகாதென்றபடி.(லகீயஸீமபி கரீயஸீம்) என்றது—சிறிய ரத்னவளி பரிமாணாதிகளாலே சிறியதாய் ப்ரபாதிகளாலே பெரியதாயிருக்கு மாபோலே, அல்பக்ரந்தமாகவிருந்ததேயாகிலும் அசேஷ ஸாரார்த்த ஸங்க்ரஹமாகையாலே இது கௌரவாதிசயத்தை யுடைத்தானதென்றபடி.

(ஸந்தஃ) என்றது, * ஸாராஸார விவேகஜ்ஞா கரீயாம்ஸோ விமத்ஸராஃ, ப்ரமாணதந் த்ராஸ்ஸந்தீதிக்ருதோ வேதார்த்த ஸங்க்ரஹஃ * என்று ஸ்ரீபாஷ்யகார ரருளிச்செய்த குண விசேஷங்களுடையவரென்றபடி.

(லக்ஷ்மீஸஹாய ஹ்ருத்யாம்) என்றது, * திருமகள்சேர்மார்பனுக்கு கோலமாமணி யாரமும் முத்துத்தாமமும்போல் இதுவும் ஹ்ருதயத்திற்கு ஏற்கும் திருவாபரண மென்றபடி. (ரஹஸ்யரத்நாவளீம்) என்றது—ரத்னவளிபோலே ப்ரகாசாதி பஹுளமாய் சேர்த்தியுண்டாம் படி கோப்புண்டதென்றபடி. (ரம்யாம்) என்றது ஸ்வபாவஸௌபாக்யத்தாலும் ப்ரமாணச் சேர்த்தியாலும் (தன்னில்தான்சேர்த்தியாலும்) ஆபாலபண்டித மநவரதஸேவ்யமாயிருக்கு மதென்றபடி. இப்படியாதொரு முமுக்ஷுவினுடைய ப்ரதம மத்ய மோத்தம தசைகளை ப்ரகாசிப்பிக்கிற ரஹஸ்யரத்னவளிக்கு ஸூத்ரஸ்தானீயமான முதற்கவியிலே ஆசார்யமுகத் தாலே ஸமர்ப்பிதபரனுய் ஸர்வேச்வரனாலே ஸ்வீக்ருத பரனானவனுடைய நிர்ப்பரத்வாநு ஸந்தானம் காட்டப்படுகிறது.

ஒரு ஜீவனுக்கு ஒரு ஜீவன் தஞ்சமல்லனென்று தொடங்கி இருபத்தினலு வாக்யங் கள், இவ்விரண்டுவாக்கியங்களாலே சரண்ய விசேஷ நிர்தாரணமும் கடக விசேஷ க்ருத்யமும் கடகாபேக்ஷா நிதானமும் சரண்ய விசேஷ வசீகரண விசேஷமும் அதினுடைய ஸௌகர்யாதி விசேஷமும க்ருத க்ருத்யனுடைய உத்தரக்ருத்ய விசேஷமும் அபராத பரிஹார ப்ரயோஜந விசேஷமும் ப்ரபத்திப்ரபாவ விசேஷமும் ப்ரபந்நனுக்கு ப்ரதிகூலாநுகூலாநுபயங்கள்வந்தால் பண்ணக்கடவ (ப்ரதிபத்தி) ப்ராயச்சித்த விசேஷமும் சாஸ்த்ராதிலங்கந ப்ரஸக்தி பரிஹார மும் உசிதங்களான கைங்கர்யங்களில் சரண்யாபிமதி தாரதம்யமும் கைங்கர்ய ஸ்தான விசேஷமும் சொல்லுகிறது. மேல் மூன்று வாக்யங்களாலே அங்கவிசேஷ சங்கா பரிஹாரம் பண்ணுகிறது. அனந்தரம் மூன்று வாக்யங்களாலே ஸம்ஸார மோக்ஷாந்தராள ஸ்தித னுக்கு ஸந்தோஷாதிசயார்த்தமாக முமுக்ஷுக்களல்லாதவர்களை முக்தி மார்க்கத்திலே மூட்டு கைக்காகவும் கால த்ரய வைஷம்ய ப்ரதர்சநம் பண்ணுகிறது. நிகமந வாக்யத்தாலே சேர்த் தனுபவிக்கலாம்படி சிறியதான ப்ரபந்தத்தினுடைய சீர்மையைச் சொல்லுகிறது. மேல் கவி யாலே ஆசார்ய வைபவத்தையும் சரண்ய குணங்களையும் பார்த்து மோக்ஷலாபத்தில் நிஸ்ஸம் சயனானவனுடைய முக்த கைங்கர்ய துல்யமான உத்தர க்ருத்யத்திலுகப்புச் சொல்லுகிறது. மேலி லார்யையாலே ப்ரபந்த வைலக்ஷண்யத்தை யறிந்து பாத்ரா பாத்ர விவேகம் பண்ணி ப்ரவர்த்திப்பிக்கச் சொல்லுகிறது. [டேசஃ கவிஃ,

ரமாஸகபரிஷ்க்ரியாமிதி ரஹஸ்யரத்னவலீம் ஸ்வயம் விவ்ருதவாந் யதாப்ரமிதி வேங்க கதத்வருசிகர்ப்புர வ்யஸந கத்தநப்ரக்ரியா நிரர்களவிநிர்களத்க்ரஹிளகோஷ பீதார்த்திதஃ.

ஸம்க்ஷிப்தம் விஸ்த்ருதம் வா ஸரள ஸமுசிதம் ஸாவதாந ப்ரியம் வா
ப்ராதாந்யேந ப்ரணீதம் பரபணிதி பரிஷ்கார வ்ருத்த்யா ஸ்திதம் வா,
சிக்ஷாஸௌகர்ய துஷ்டி ப்ரசித குருஜநாநுக்ரஹேத்தம் ஸுதீபிஃ
ச்ரத்தேயம் நாதஜுஷ்டச்ருதி யுவதி சிரோபூஷணம் பாஷணம் நஃ.

அம்ருதரஞ்சனி—20, 21, 22.

சாக்கியர் சைனர்கள் சார்வாகர் சாங்கியர் சைவர் மற்றும்
தாக்கியர் நூல்கள் சிதையத்தனி மறையின் கருத்தை
வாக்கிய முப்பதினல் வகை செய்து வியாகரித்தோம்
தேக்கிமனத் துள்ளிதனைத் திணியிருள் நீங்குமினே.
தள்ளத்துணியினும் தாய்போ லிரங்கும் தனித்தகவால்
உள்ளத்துறைகின்ற உத்தமன் தன்மை யுணர்ந் துரைத்தோம்
முள்ளொத்த வாதியர் முன்னே வரினெங்கள் முக்கியர்பால்
வெள்ளத் திடையில் நரிபோல் விழிக்கின்ற வீணர்களே.

செய்யேல் மறமென்று தேசிகன் தாதையவனுரைத்த
மெய்யேயருள் பொருள்சூடியவெண்மதி காதலியாம்
பொய்யே பகைப்புலன் ஐயிரண்டொன்று பொருங்கருவி
கையேறு சக்கரக்காவலன் காவலடைந்தவர்க்கே.

இதி கவிதார்க்கிகஸிம்ஹ ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரவேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஸ்ரீமத் ரஹஸ்ய ரத்நாவலீ ஹ்ருதயம் ஸமாப்தம்.

---

ஸ்ரீமதே வேதாந்த மஹாகுரவேநம:.

## பதினைந்தாவது ரஹஸ்யமான ஸ்ரீமத் தத்வத்ரய சுளகம்.

அம்ருதரஞ்சனீ—பா—23.

அந்தமிலாதி தேவனழிசெய்தடைந்தவலை வேலையோதமடையச்
செந்தமிழ்நூல்வகுத்த சிறுமாமனிச்சர் சிறுகைச்கிருங்கையதுபோல்
சந்தமெலாமுரைப்ப இவையென்றுதங்களிதயத்தடக்கியடியோம்
பந்தமெலாமறுக்கவருள் தந்துகந்து பரவும் பொருள்களிவையே.

ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளையே உபாயமாகவும் உபேயமாகவும் பற்று மவனுக்கு முற்பட ப்ரக்ருத்யாத்ம ப்ரமாதிகள் கழியும்படி தத்வத்ரயத்தை விவேகிக்க வேண்டும். தத்வத்ரயமென்றது—அசேதநத்ரவ்யத்தையும் ஜீவனையும் ஈச்வரனையும். அசேதநமாவது ஜ்ஞாத்ருத்வ மில்லாதவஸ்து. இதுக்கு வ்யாபாரமுண்டேயாகிலும் ஜ்ஞாத்ருத்வ மில்லாமையாலே ஸ்வபுத்தி பூர்வப்ரவ்ருத்தி லக்ஷணமான கர்த்ருத்வமும் போக்த்ருத்வமு மில்லை. அசேதநத்ரவ்யந்தான் த்ரிகுணமென்றும் காலமென்றும் சுத்த ஸத்வமென்றும் மூன்றுவகையாயிருக்கும். தர்மபூதஜ்ஞானத்துக்கு மிவற்றுக்குப்போலே அசேதநத்வ முண்டேயாகிலும் இதுசேதநநிரூபணத்திலே விசேஷணமாய்க்கொண்டு நிரூபிதமாய் விடுகை யாலும் இவைமூன்றினுடைய நிரூபணத்துக்கு ப்ரயோஜநாதிசய முண்டாகையாலும் இவற்றைப் பிரித்து நிரூபித்தார்கள். த்ரிகுண நிரூபணம் பஞ்சவிம்சக விவேகாதிகளுக் குறுப் பாம். காலநிரூபணம் ஐச்வர்யாதிகளுடைய அநித்யதாத்யவஸாயத்துக்கும் காலத்தால் கலங்காத விஷயத்தை யாசைப்படுகைக்கும் காலோசிதகர்த்தவ்ய விசேஷத்தைக் காலம் பெறச்சிந்திக்கைக்கு முறுப்பாம். சுத்தஸத்வநிரூபணம் ப்ராப்யப்ராபகனை யீச்வரனுடைய விசிஷ்டாகாரவேதநத்திலே விநியுக்தமாம்.

த்ரிகுணமாவது-ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்களாகிற குணத்ரயங்களுக்கு ஆச்ரயமா யிருப்பதொரு த்ரவ்யம். இது கர்மவ்சயருக்கு பகவத் ஸ்வரூபதிரோதாநாதிகளைப் பண் ணும். ஸத்வமாவது ப்ரகாச ஸுகாதி ஹேதுவான குணவிசேஷம். இது சிலருக்கு அத் யந்தாதிசயிதமாய் மோக்ஷோபயுக்தமாம். ரஜஸ்ஸாவது ராகதுக்காதி ஹேதுவான குண விசேஷம். தமஸ்ஸாவது ப்ரமாதாலஸ்ய நித்ராதி ஹேதுவான குணவிசேஷம். நியதகால மான ஸ்வதந்த்ர ஸங்கல்ப விசேஷத்தாலே இவை மூன்றும் ஸமங்களானபோது மஹாப்ரள யம். ஒரு சரீரத்தில் வாதபித்த கபங்கள்போலே உத்பவாபிபவத்தாலே இவை விஷமங்க ளானபோது மஹதாதி விகாரங்களுண்டாம். இவற்றில் வைஷம்ய மநந்த ப்ரகாரம். ஸமமான குணத்ரயத்துக்காச்ரயமான த்ரவ்யம் மூலப்ரக்ருதி. இங்கு * த்ரிகுணம் தஜ் ஜகத்யோநி * *அசேதநா பரார்த்தா ச* *சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த* இத்யாதிகளை யநுஸந்திப்பது. இது தன்னிலே அதிஸூக்ஷ்மமான பரிணாம விசேஷங்களாலே தமஸ்ஸு முதலான பிரிவுகள் ஓதப்படுகிறது. இத்த்ரவ்யம விஷமபரிணாமமானபோது வ்யக்த மென்றும் ஸமபரிணாம மானபோது அவ்யக்தமென்றும் பேர்பெற்றிருக்கும். வ்யக்தம் மஹாந் முதலான ப்ருதிவீபர் யந்தமாய் இருபத்து மூன்று தத்வமாயிருக்கும் த்ரிகுணத்தில் இப்படி பரிணமியாத ப்ரதேச

மும் பரிணமித்த ப்ரதேசமும் கடலிலலேயாத ப்ரதேசமும் அலேந்த ப்ரதேசமும்போலே யிருக்கும். மஹதாதி விகாரமில்லாத ப்ரதேசத்திலும் ப்ரளயதசையில்போலே ஸ்ருஷ்டி தசையிலும் அதிஸூக்ஷ்மமான ஸத்ருசவிகார ஸந்தாநம் நடக்கும். இப்படி பிறக்கும் விஷம விகாரங்களில் ப்ரதம விகாரம் மஹாந். இதுதான் ஆத்மாவுக்கு மநஸ்ஸு அத்ய வஸாயத்தை யுண்டாக்கும்போது துணேயாகையாலே புத்திலக்ஷண மென்றும் சொல்லப் படும். இம்மஹாந் குணவைஷம்யத்தாலே ஸாத்விகமென்றும் ராஜஸமென்றும் தாமஸ மென்றும் மூன்றுவகையாயிருக்கும். இதில் நின்றும் பிறந்த விகாரவிசேஷம் அஹங்காரம். இது அநாத்மாவான தேஹத்திலே மநஸ்ஸு ஆத்மாவுக்கு அஹம்புத்தியைப் பண்ணும் போது துணேயாகையாலே அஹங்காரமென்று பேர்பெற்றது. இவ்வஹங்காரமும் தனக்குக் காரணமான மஹாந்போலே அவ்வடைவே மூன்றுபடியாயிருக்கும். அதில் ஸாத்விகாஹங் காரம் வைகாரிகமென்றும் ராஜஸாஹங்காரம் தைஜஸமென்றும் தாமஸாஹங்காரம் பூதாதி யென்றும் பேர்பெற்றிருக்கும்.

இவற்றில் இந்த்ரியாதியாயும் பூதாதியாயுமுள்ள அஹங்காரங்களுக்கு ராஜஸாஹங் காரம் ப்ரவர்த்தகமாய்க்கொண்டு ஸஹகாரியாம். ஸாத்விகாஹங்காரத்தில்நின்றும் பிறந்த த்ரவ்ய மிந்த்ரியம். இது ஆந்தரமென்றும் பாஹ்யமென்று மிரண்டுபடி. ஆந்தரமாவது மநஸ்ஸு. இது ஸம்ஸாரிகளுடைய ஸங்கல்ப ஸ்ம்ருத்யாதிகளுக்கும் தானே காரணமாய் பாஹ்யேந்த்ரியங்களுக்குத் துணேயுமாயிருக்கும். இதுதானே சிலவிடங்களிலே அத்யவஸா யாபிமான சிந்தைகளாகிற புருஷபுத்தி விசேஷங்களுக்குக் காரணமான தசையில் புத்த்யஹங் கார சித்த சப்தங்களாலும் சொல்லப்படும். இது சப்தாதி விஷய ஸங்கியானபோது பந்த காரணம்; பாஹ்யவிஷயங்களேவிட்டு வகுத்த விஷயத்திலே ப்ரவணமானல் மோக்ஷகாரணம்.

பாஹ்யேந்த்ரியங்கள் பத்து. இவற்றில் வாக்பாணி பாத பாயூபஸ்தங்களாகிற கர் மேந்த்ரியங்களேந்தும் வசநாதாநாதி கார்யங்களுக்குறுப்பாம். ச்ரோத்ர த்வக் சக்ஷுர் ஜிஹ்வாக்ராணங்களாகிற ஜ்ஞானேந்த்ரியங்களேந்தும் சப்தாதி விஷயங்களேக் காட்டும். இவற் றில் த்வகிந்த்ரியமும் சக்ஷுரிந்த்ரியமும் யதார்ஹம் சிலத்ரவ்யங்களேயும் க்ரஹிக்கும். ச்ரோத் ராதிகளேந்துக்குமடைவே ஆகாசாதிபூதங்களேந்தும் ஆப்யாயகங்கள். இப்படியே மநః ப்ராணவாக்குக்களுக்குமடைவே ப்ருதிவ்யப் தேஜஸ்ஸுக்கள் ஆப்யாயகங்கள். தாமஸாஹங் காரத்தில்நின்று மடைவே சப்தாதிதந்மாத்ரைகளே யிடையிட்டுக்கொண்டு பஞ்சபூதங்கள் பிறக்கும். தந்மாத்ரைகளாவன—க்ஷீரத்துக்கும் ததிக்கும் நடுவில் பரிணமம்போலே வருகிற ஸூக்ஷ்ம பூதவிசேஷங்கள். த்ரிகுணவைஷம்யத்தாலே தந்மாத்ரைகளே அவிசேஷங்களென் றும் பூதங்களே விசேஷங்களென்றும் சொல்லும். ஆகாசாதிபூதங்களேந்துக்கும் சப்தாதி குணங்களேந்தும் உத்தரோத்தரமதிகங்கள். இங்கே * பூநிலாயவைந்துமாய் * என்கிற பாட்டை யநுஸந்திப்பது. தந்மாத்ரைகளும் குணங்களும் வேறேயாயிருக்கச் சிலவிடங் களிலே குணங்களின் பேராலே தந்மாத்ரைகளே யுபசரிக்கும்.

இத்தத்வங்கள் பிறக்குமிடத்தில் த்ரவ்யாந்தரங்கள் வருவதில்லே. தாளபலாசதாடங் கந்யாயத்தாலே அவஸ்தாந்தராபத்தியே யுள்ளது. பூர்வாவஸ்தாவிஜாதீயாவஸ்தைகள் வந்த விடங்களிலே தத்வாந்தர மென்றெண்ணுகிறது—ப்ருதிவீத்வாதிகளே விடாதே வருகிற அவ ஸ்தாந்தரங்களில் தத்வாந்தர கணனேயில்லே. ப்ருதிவீபர்யந்தங்களான தத்வங்களே ஸமஷ்டி யென்றும் இவற்றில் ஏகதேசங்களேக் கூட்டி ஸ்ருஷ்டிக்கு மவற்றை வ்யஷ்டி யென்றும் சொல்லக்கடவது. அண்டங்களும் ஆவரணங்களும் அண்டத்துக்குள்ளான சதுர்தச புவ னுதி வைசித்ர்யங்களும் பஞ்சீகரணுதி ப்ரகாரங்களும் இருக்கும்படி புராணங்களிலே பரக்கக் கண்டுகொள்வது. * இத்யேதத் புவனம் கதம் * என்கிறச்லோகத்தை இங்கேயநுஸந்திப் பது. *பொங்கைம்புலனும்* இத்யாதிகளில் சொன்ன தத்வங்களிருபத்திநலில் ப்ராக்ருதி மஹதஹங்காரங்களும் பூதங்களும் சரீரத்திற்கு உபாதானத்ரவ்யங்கள். இந்த்ரியங்கள் பதி னென்றும் தனித்தனியே அஸங்க்யாதங்களாய் ப்ரதிபுருஷம் பிந்நங்களாய் ஆபரணத்தில் ரத் னங்கள்போலே சரீரத்தையாச்ரயித்திருக்கிறன. சரீரமாவது சேதநனேக்குறித்து ஆதேயத்வ

விதேயத்வ சேஷத்வ நியமத்தாலே அப்ருதக் ஸித்தமான த்ரவ்யவிசேஷம். இத்த்ரிகுண விகாரவர்க்கங்களுக் கெல்லாம் ஸ்ருஷ்டிப்ரளயாதி கால நியமம் சாஸ்ஸ்ரங்களிலே கண்டு கொள்வது.

காலமாவது குணத்ரய ரஹிதமாய் * எதிர்நிகழ் கழிவு இத்யாதி வ்யவஹாரங்களுக்கு விசேஷ ஹேதுவாய் நித்யவிபுவாயிருப்பதொரு த்ரவ்யம். க்ஷணம் முதலாக பரார்த்த பர்யந்த மாக *காலசக்ரம் ஜகச்சக்ரம்* இத்யாதிகளில்படியே சக்ரம்போலே பரிவர்த்திக்கிறவை யெல்லாம் இதின் பாகங்கள். * ரூபாந்தரம் தத் த்விஜ காலஸம்ஜ்ஞம் * இத்யாதிகளாலே இக்காலத்திற்கு த்ரிகுணாதிகளிற் காட்டில் வேறுபாடு சொல்லப்படுகிறது. இதின் படியை யறிந்தால் * பழுதே பலபகலும் போயின* என்னுதபடி ஸ்வரூப ப்ராப்த வ்ருத்தியிலே த்வரிக்க வடுக்கும். அப்போது * காலஸ்ய ச ஹி ம்ருத்யோச்ச * என்கிறபடியே ஸர்வ நிர்வாஹகனான பகவான் *கலௌ க்ருதயுகம் தஸ்ய* என்கிறபடியே *கலியுகமொன்றுமின்றிக்கே தன்னடியார்க்கருள் செய்யும் லீலா விபூதியிலுள்ள விகாரங்களிலெல்லாம் இக்கால விசேஷ நியமத்தோடே கூடியிருக்கும். சுத்த ஸத்வமான பரம பதத்திலுள்ளவை * காலம் ஸ பசதே தத்ர ந காலஸ் தத்ர வை ப்ரபு: * இத்யாதிகளிற்படியே கேவல மீச்வரேச்சை யடியாக நடக்கும்.

சுத்த ஸத்வமாவது—ரஜஸ்தமஸ்ஸுக்களுக் காச்ரயமன்றிக்கே ப்ராக்ருத ஸத்வ விலக்ஷணமான ஸத்வகுணத்துக்காச்ரயமா யிருப்பதொரு த்ரவ்யம். இத்தை * ஸ்வஸத்தா பாஸகம் ஸத்வம் குணஸத்வாத் விலக்ஷணம் * என்று சொல்லிற்று. சிலர் இதை த்ரிகுண காலங்கள் போல் ஜடமென்றும் சிலர் ஸ்வயம்ப்ரகாசமென்றும் சொல்லுவர்கள். ஆத்மாவுக்கும் தர்ம பூதஜ்ஞானத்துக்கும் ஸ்வயம்ப்ரகாசத்வமாத்ரம் ஸமானமாயிருக்க ப்ரத்யக்த்வ விஷயித்வாதி வைஷம்யங்கள் ப்ரமாண பலத்தாலே இசைய வேண்டினாப்போல சுத்த ஸத்வமும் ஸ்வயம் ப்ரகாசமானாலும் இவை யிரண்டிலுங்காட்டில் இதுக்கு துல்யயோக க்ஷேமப்ரமாண ஸித்தமான வைஷம்ய மெல்லாம் கொள்ளலாம்.

இதின்படியைக் கண்டால் சதுர்முகாதி பதங்களுமெல்லாம் நிரயமாய்த் தோன்றும்படி அத்யந்தபோக்யமாயிருக்கையாலே இத்தை பரமபதமென்றும், அநுகூல ஸ்வபாவதையாலே ஆநந்தமயமென்றும், ஷாட்குண்யப்ரகாசோபயோகாதிகளாலே ஷாட்குண்யமயமென்றும், பஞ்சோபநிஷந்மந்த்ர ப்ரதிபாத்யமாகையாலே பஞ்சோபநிஷந்மய மென்றும் அப்ராக்ருத பஞ்சபூதாத்மகமாகையாலே பஞ்சசக்தி மயமென்றும் சொல்லுகிறது.

நித்யங்களான பூதங்களும் விக்ரஹபூஷணாயுத விமானமண்டப கோபுராதிகளும் ப்ரசுரங்களானபடியாலே இத்தை நித்யவிபூதியென்கிறது. ஈச்வரனுக்கும் நித்யருக்கும் நித்ய தேஹமும் இதினவதாரங்களு முண்டாயிருக்கும். முக்தருக்கு இச்சையுள்ளபோது விக்ரஹாதி பரிக்ரஹமும் மாதாபித்ராதி ஸ்ருஷ்டிகளுமுண்டாம். இவையெல்லாம் வஸந்தோத்ஸவத்தில் வேஷபரிக்ஹாதிகள்போலே சேஷியுகந்த கைங்கர்ய விசேஷங்கள். இந்நித்ய விபூதியில் * மணியுருவில் பூதமைந்தாய் * என்கிற ஆகாசாதிபாகத்தை நித்யமான சப்தாதி குண வைஷம்யத்தாலே கண்டுகொள்வது. த்ரிகுணம் ஸம்ஸாரி ஜீவர்களுக்கு பந்தஸ்தானமாய் கீழெங்கு மநந்தமாயிருக்குமாப்போலே சுத்தஸத்வமும் இவர்களுக்கு முக்திஸ்தானமாய் மேலெங்கு மநந்தமாயிருக்கும். .... ... ... ... *

அம்ருதரஞ்சனி, பா, 24.

முக்குணமாயையின் மூவெட்டின் கீழ்வரு மூவகையும்
இக்குணமின்றி யிலங்கிய காலச் சுழியினமும்
நற்குணமொன்றுடை நாகமும் நாரணனுருடம்பாய்
சிற்குண மற்றவை யென்றுரைத்தா ரெங்கள் தேசிகரே.

இதி ஸ்ரீமத்தத்வத்ரய சுளகே அநாத்மநிரூபணாதிகார: ப்ரதம:.

அத ஜீவநிருபணாதிகாரோ த்விதீய꞉.

**அம்ருதரஞ்சனி, பா. 25.**

எனதென்பதும் யானென்பது மன்றித்
தனதென்று தன்னையுங்காணாது—உனதென்று
மாதவத்தால் மாதவற்கே வன்பரமய் மாய்பதனில்
கைதவத்தான் கைவளரான்காண்.

ஜீவனாவான் அணுத்வபாரதந்த்ர்யாதி விசிஷ்டனான சேதநன். இவனுக்கு கர்த்ருத்வ போக்த்ருத்வாதிகளாலே த்ரிவிதாசேதநங்களில் காட்டிலும் ஆதேயத்வ விதேயத்வ சேஷத்வாதிகளாலே ஈச்வரனைக்காட்டிலும் வேறுபாடுண்டாகிறது. அசித்துக்கு மஹதாதி ரூபேண ஸ்வரூப பரிணாமமும் க்ஷேத்ரஜ்ஞருக்கு தர்மபூதஜ்ஞானத்திலே ஸங்கோச விகாஸாதிகளும், ஈச்வரனுக்கும் நித்யருக்கும் முக்தருக்கும் தர்மபூதஜ்ஞானத்திலே ஸங்கல்பாத்யவஸ்தா விசேஷங்களும் அவ்வோப்ரமாணங்களாலே வ்யவஸ்திதங்களாயிருக்கும். அசித்தின் வ்யாபாரமெல்லாம் நித்யமாக பரபுத்த்யதீநம். ஈச்வரனுடைய வ்யாபாரமெல்லாம் நித்யமாக ஸ்வபுத்த்யதீனம். ஜீவனுடைய வ்யாபாரங்களிலே சில பரபுத்தி மாத்ராதீனங்கள். சில ஸ்வபுத்த்யதீனங்கள். த்ரிவிதாசேதநத்ரவ்யமும் சரீரமாயேயிருக்கும். ஈச்வரன் சரீரியாயேயிருக்கும். ஜீவன் சரீரமாய் சரீரியுமாயிருக்கும். இவன்படியை * **தேஹேந்த்ரியமந꞉ ப்ராணதீப்யோந்யோ அநந்யஸாதந꞉, நித்யோ வ்யாபீ ப்ரதிக்ஷேத்ரமாத்மா பிந்ந꞉ ஸ்வதஸ்ஸுகீ** * என்று ஆத்மஸித்தியிலே ஆளவந்தார் அருளிச் செய்தார்.

தேஹம் * மண்ணாய் நீரெரிகால் மஞ்சுலாவுமாகாசமுமாம் புண்ணாராக்கை * என்கிறபடியே அஞ்சுபூதங்களுடைய திரளாய் உபசயாபசயங்களையுடைத்தாய் பாணிபாதாதிகளாலும் பலவகையாயிருக்கையால் பூதங்களுக்கும் அவயவங்களுக்கும் தனித்தனியேயும் ஸமுதாயத்திலும் சைதன்யம் கொள்ளில் அனேக சேதநோபலம்பனகாரண கார்யோத்பத்த்யாதி விரோதம் வருகையாலே சரீரத்தில் காட்டிலும் ஆத்மாவுக்குப் பிரிவு காணலாம். ***பிண்ட꞉ ப்ருதக் யத꞉ பும்ஸ꞉* புமாந் ந தேவோ நநர꞉* நாயம் தேவோ ந மர்த்த்யோ வா, *அச்சேத்யோயம், *அவ்யக்தோயம், *அவயவிதயேதங்குர்வாணை꞉*** இத்யாதிகளையிங்கே அநுஸந்திப்பது. கர்மேந்த்ரியங்களொன்றின் வ்யாபாரத்தை ஒன்று செய்யமாட்டாதிருக்க, இவை யெல்லாவற்றையும் வ்யாபரிக்கிற கர்த்தா ஒருவனாகத் தோன்றுகையாலே ஆத்மாவுக்கு வாகாதிகளைக் காட்டில் வேறுபாடறியலாம். ஜ்ஞானேந்த்ரியங்கள் தனித்தனியே விஷயங்களைக் காட்டாநிற்க, இவை யெல்லாத்தாலும் எல்லாவிஷயத்தையும் ஒருவனே ப்ரதிஸந்தானம் பண்ணுகையால் இவனுக்கு ச்ரோத்ராதிகளைக் காட்டில் பிரிவு தோற்றும். ஜ்ஞாதாவான ஆத்மாவுக்கு ஸ்ம்ருத்யாதி காரணமாயல்லது மநஸ்ஸித்தியில்லாமையால் மநஸ்ஸிலுங் காட்டில் இவனுக்கு வேறுபாடு சொல்லலாம். (காணலாம்.) தேஹாதிகளில் சொன்ன யுக்திதன்னாலே இவனுக்கு ப்ராணவாயுவில் காட்டிலும் பிரிவுஸித்தம். விஷயங்களை ப்ரகாசிப்பிக்கிற ஜ்ஞானம் ஸ்வயம்ப்ரகாசமான நித்யத்ரவ்யமேயாகிலும் ஜ்ஞாதாவுக்கு தர்மபூதமாய்க்கொண்டே ப்ரத்யக்ஷாதிகளாலே தோற்றுகையாலே அதிலுங்காட்டில் நானென்று தோற்றுகிற ஸ்வஸ்மைபாஸமானனான ஜீவன் வேறுபட்டவன். க்ஷேத்ரஜ்ஞருடைய தர்மபூதஜ்ஞானத்துக்கு ப்ரத்யக்ஷாதி ப்ரமாண பேதத்தாலும் ப்ரத்யக்ஷந்தன்னில் இந்திரிய பேதத்தாலும் இச்சாத்வேஷ ஸங்கல்ப ப்ரயத்ந ஸுகதுக்கஸம்சயாதி பேதத்தாலும் பஹுவித விகாரங்களுண்டாயிருக்கும்.

ஆத்மஸ்வரூபத்தில் இவையொன்றும் தட்டாதே அஹமென்று ஸத்யமாகத்தானே தன்னையே தனக்கே காட்டுகிற ஏகரூபப்ரகாசமேயா யிருக்கும். ஜடங்களான தேஹாதிகளெல்லாம் பரத꞉ பரஸ்மை பாஸமானங்களா யிருக்கும். தர்மபூதஜ்ஞானம் பரத꞉ ஸ்வதச்ச பரஸ்மை பாஸமானமா யிருக்கும். ஆத்மா ஸ்வத꞉ பரதச்ச ஸ்வஸ்மை பாஸமானனுமாய் பரத꞉

பரஸ்மை பாஸமானனுமா யிருக்கும். இப்படியொரு பாதகமுமில்லாத வென்னுடம்பென்கிற வ்யதிரேக ப்ரத்யயத்தாலும் நித்யநிர்தோஷ சாஸ்த்ரத்தாலும் ஆத்மா தேஹாதி விலக்ஷணன் என்றறிந்து கொள்வது.

(அநந்யஸாதநः) என்றது—தர்மபூதஜ்ஞானம் போலே ஸ்வயம்ப்ரகாசனென்றபடி. இத்தால் ஜ்ஞான ஸ்வரூபனென்கிற வாக்யங்களுக்கும் விரோதம் பரிஹ்ருதமாயிற்று. தர்மபூதஜ்ஞானம் விஷயக்ரஹணகாலத்திலே தன்னாச்ரயத்திற்கு ஸ்வயம் ப்ரகாசமாம். ஆத்மா நித்யமாகத்தனக்குத்தான் ஸ்வயம்ப்ரகாசமாயிருக்கும். (நித்யः) என்றது * மாறிமாறிப்பல பிறப்பும் பிறந்தாலும் தர்மபூதஜ்ஞானத்துக்கு ஸங்கோசவிகாஸாதிகள் வந்தாலும் ஸ்வரூபத்தில் நாமாந்தரம் வரும்படியான அவஸ்தாந்தரங்களொருக்காலும் வாராதென்றபடி. இவ்வாத்மா பூர்வாநுபூத ப்ரதிஸந்தாநம் பண்ணுகையாலே ஸ்திரனென்னுமிடம் ப்ரத்யக்ஷஸித்தம். பிறந்தவனுக்கு ப்ரதமம் ஸ்தன்யாபிலாஷாதிகள் பிறக்கையாலே சரீராந்தரபரிக்ரஹமுண்டென்று அநுமானஸித்தம். நைமித்திகப்ராக்ருதாத்யந்திக ப்ரளயாதிகளிலும் அழியானென்னுமிடம் ஆகமஸித்தம். அணுவானவிவனை வ்யாபீ என்றது. * தாருண்யக்நிः * என்கிற ச்லோகத்தின்படியே அதிஸூக்ஷ்மதையாலே ஸர்வாசேதநங்களிலும் ப்ரவேசிக்க வல்லனென்றபடி. முக்ததசையிலும் பத்ததசைதன்னிலும் ஸங்கல்பத்தாலும் தர்மத்தாலும் யோகப்ரபாவத்தாலும் அனேகசரீரபரிக்ரஹம் பண்ணும்போது ஜீவனை ஈச்வரனைக் காட்டில் பிரிக்கிற ச்ருதியின்படியே இவன் ஸ்வரூபமணுவாயிருக்க * ப்ரதீபவதாவேசः * இத்யாதி ஸூத்ரோக்தமான தர்மபூதஜ்ஞானவ்யாப்தியே யுள்ளது. (ப்ரதிக்ஷேத்ரமாத்மா பிந்நः) என்றது ஜ்ஞானஸுகாதிவ்யவஸ்தை காணலான சரீரந்தோறும் பரஸ்பர ப்ரதிஸந்தானமின்றிக்கே விசித்ரபலபோக்தாக்களான வாத்மாக்கள் வேறுபட்டவர்களென்றபடி. (ஸ்வதஸ்ஸுகீ) என்றது—ஸ்வரூபத்தாலும் தர்மத்தாலும் தனக்கு நித்யாநுகூலனாய் பரிபூர்ண பகவதானந்த (அநுபவ) த்துக்கு ஸூரிகளைப்போலே ஸ்வரூபயோக்யதையாலே யிட்டுப்பிறந்தவனென்றபடி. இவனுக்கு துக்காதிகள் கர்மோபாதிகங்களாய் வருகின்றன.

இஜ்ஜீவர்கள் பத்தரென்றும் பந்தாஹிதரென்று மிரண்டுபடி. பந்தாஹிதர் முக்தரென்றும் நித்யரென்றும் இரண்டுவகை. பத்தராவார் பீஜாங்குரந்யாயத்தாலே விஷமப்ரவாஹமாய்க்கொண்டு அநாதியாய்ப் போருகிற அவித்யாகர்மவாஸநாருசி ப்ரக்ருதி ஸம்பந்தங்களாலே தன்னுருக்கெடுத்து வேற்றுருக் கொண்டு கர்ப்பஜந்மபால்ய யௌவன ஜாக்ரத் ஸ்வப்நஸுஷுப்தி மூர்ச்சாஜராமரண ஸ்வர்க்க நரகஸ்ருஷ்டி ப்ரளயாதி விசித்ராவஸ்தைகளையுடையராய், அநாத்யநந்தப்ரகாரமாய் அதிதுஸ்ஸஹமான தாபத்ரயத்தாலே தப்தராய் ஸ்வதः ப்ராப்த பகவதநுபவாதி வைபவத்தையுமிழந்து போருகிற சேதநர். பாதந்த்ர சேதநராய் காணுயத்த ஜ்ஞானரான பத்தருக்கே சாஸ்த்ர வச்யத்வாதிகளுள்ளது. இவர்களில் ஓரளவிலே ஸர்வபூதஸமானனை ஸர்வேச்வரனுடைய அவஸர ப்ரதீக்ஷையான ஸஹஜக்ருபையாலே பிறிந்து அத்வேஷாபி முக்யாதிகளையுடையராய் ஸதாசார்ய ஸமாச்ரயணம் பண்ணி பகவச்சேஷத்வமாகிற மஹாநிதியை பக்திஸித்தாஞ்சன ரஞ்சிதமான சாஸ்த்ரசக்ஷுஸ்ஸாலே கண்டு ஸ்வாதிகாராநுகுணமான உபாயவிசேஷத்தாலே ஸர்வேச்வரனை ப்ரஸந்நனாக்கி அவன் ஸங்கல்ப விசேஷத்தாலே அத்யந்தநிவ்ருத்த ஸம்ஸாரராய் கடலில்நின்று மெடுத்த ஸ்ரீகௌஸ்துபம்போலே அஸங்குசிதப்ரகாசராய் பரம புருஷஹ்ருதயங்கமராய் நித்யஸூரிகளோடொக்க நிரதிசயபோக்ய நிருபாதிக கைங்கர்யம் பெற்றவர்கள் முக்தர். * யதா ந க்ரியதே ஜ்யோத்ஸ்நா * இத்யாதிகளை இங்கேயநுஸந்திப்பது.

நித்யராவார்—ஒரு காலத்திலும் பகவதபிமத விருத்தாசரணமில்லாமையாலே ஜ்ஞான ஸங்கோச ப்ரஸங்கமற்று ஸதாதர்சனம் பண்ணிக்கொண்டு புராண புருஷனை ஸ்ரீவைகுண்டநாதனை வானிளவரசாகப்பெற்று வழுவிலாவடிமை செய்து வாழ்கிற வடிவுடைவானர்கள். இவர்களில் அனந்தகருட விஷ்வக்ஸேநாதிகளுடைய வதிகாரவிசேஷங்கள் ஈச்வரநித்யேச்சையாலே அநாதியாக வ்யவஸ்திதங்கள். முக்தர்க்கும் நித்யர்க்கும் ஈச்வரனுக்

கும் வ்யாபாராதிகள் வேறுப்பட்டாலும் ஸர்வவிசிஷ்டனான ஒருவன் போக்யனானபடியாலே போகமாத்ரம் ஸமானம்.

கட்டளைக் கலித்துறை. அம்ருதரஞ்சனி, பா-26.

பல்வினைவன்கயிற்றால் பந்தமுற்றுழல்கின்றனரும் *
நல்வினைமூட்டிய நாரணனார் பதம்பெற்றவரும் *
தொல்வினை யொன்றுமில்லாச் சோதிவானவரும் சுருதி *
சொல்வினையோர்ந்தவர் சீவரென்றோதச் சிறந்தனரே.

இதி கவிதார்க்கிகஸிம்ஹ ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர ஸ்ரீமத் வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு தத்வத்ரய சுளகே ஜீவநிரூபணாதிகாரோ த்விதீயஃ.

---

அத பரமாத்ம நிரூபணாதிகாரஃ த்ருதீயஃ

நேரிசை வெண்பா. அம்ருதரஞ்சனி, பா-27.

ஆரணங்களெல்லாமடிசூட மேல்நின்ற சாரணமாயொன்றால் கலங்காதான்—நாரணனே, நம்மேல்வினைகடியும் நல்வழியிற்றான்நின்று தன்மேனி தந்தருளும்தான்.

ஈச்வரனாவான் * ஸ்வாதீன த்ரிவித சேதநா சேதனேத்யாதிகளின்படியே கீழ்ச்சொன்ன சேதநா சேதநங்களெல்லாத்துக்கும் நித்யமாக தாரகனுமாய் நியந்தாவுமாய் நிருபாதிக சேஷியாய் இப்படியால் ஸர்வசரீரியாய் ஸர்வகார்ய காரணபூதனாய் ஸமஸ்தஹேய ரஹிதனாய் ஸ்வதஸ் ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வாதி ஸமஸ்த மங்களகுணாச்ரயனாய் ஸ்வேதரஸமஸ்த வஸ்து விலக்ஷணனாய் ஸர்வசாஸ்த்ரீய கர்மங்களாலும் ஆராத்யனாய் ஸகலபல ப்ரதனாய் ஸர்வாத்மாக்களுக்கும் ஸ்வபாவ ஸுஹ்ருத்தாய் முமுக்ஷுக்களுக்கும் ஆச்ரணீயனாய் முக்தப்ராப்யனாய் இப்படி ஸர்வப்ரகார நிரதிசயபோக்யனாய் * சுடர்மிகு சுருதியுள் உளனான ச்ரியஃபதி புருஷோத்தமன். இவன் ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்ட வேஷத்தாலே ஜகத்துக்கு உபாதான காரணம். ஸ்வஸங்கல்ப விசிஷ்ட வேஷத்தாலே நிமித்தகாரணம். இப்படியே மஹதாதிகளான வுபாதானங்களுக்கும் ஹிரண்ய கர்ப்பாதிகளான நிமித்தங்களுக்கும் அந்தராதமாவாய் நின்று அவற்றின் கார்யங்களுக்கு உபாதானமும் நிமித்தமுமாம். இவன்தானே ஸஹகாரிபூத காலாதிகளுக்கும் அந்தர்யாமியாய் நின்று ஸஹகாரியுமாம். ஆகையாலே த்ரிவித காரணமும் ப்ரஹ்மமென்று வேதாந்தங்களில் நிர்ணயிக்கப்பட்டது விபுத்வே ஸதி சேதநத்வம் அநந்யாதீநத்வம் நிராதாரத்வம் ஜகத்காரணத்வம் மோக்ஷப்ரதத்வம் ஸர்வாதாரத்வம் ஸர்வநியந்த்ருத்வம் ஸர்வசேஷித்வம் ஸர்வசரீரித்வம் ஸர்வசப்தவாச்யத்வம் ஸர்வவேதாந்த வேத்யத்வம் ஸர்வலோகசரண்யத்வம் ஸர்வமுமுக்ஷூபாஸ்யத்வம் ஸர்வபல ப்ரதத்வம் ஸர்வவ்யாப்தஜ்ஞாநாநந்த ஸ்வரூபத்வம் லக்ஷ்மீஸஹாயத்வம் இத்யாதிகளு மிவனுக்கு லக்ஷணங்கள். ஸத்யத்வ ஜ்ஞானத்வானந்தத்வானந்தத்வாமலத்வங்கள் ஸர்வவித்யாநுவ்ருத்தங்களான ஸ்வரூப நிரூபகதர்மங்கள். ஜ்ஞானபலாதிகளும் இவற்றின் விததிகளான ஸௌசீல்யாதிகளும் நிரூபித ஸ்வரூப விசேஷணங்கள். இக்குணங்களினுடைய லக்ஷணங்களும் உபயோகாதிகளும் சாஸ்த்ரங்களிலே யறிந்துகொள்வது. ஸர்வஜகத்ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாராந்தஃப்ரவேச நியமநநிக்ரஹாநுக்ரஹங்கள் இவனுக்கு க்ருத்யங்கள். இவன் ஜ்ஞானசக்த்யாதிகுண விசிஷ்டஸ்வரூபத்தாலே ஸர்வாந்தர்யாமியா யிருக்கும். அஸ்த்ர பூஷணாத்யாயத்தின்படியே ஸர்வதத்வாச்ரய திவ்யமங்கள விக்ரஹவிசிஷ்ட வேஷத்தாலே பரவ்யூஹாதி பஞ்சப்ரகாரனாயிருக்கும். பரரூபமாவது *நித்யம் நித்யாக்ருதிதரம் நித்யஸித்தே ததாகரே* இத்யாதிப்ரமாணங்களிலே ப்ரஸித்தமாய் ஸூரிகளுக்கும் முக்தர்க்கும் ஸேவ்யமாய் * வானுயரின்பம் மன்னி வீற்றிருக்கிற நித்யமான திவ்யமங்களவிக்ரஹம். இதில் சாந்தோதிதாதி விபாகம் கண்டுகொள்வது. வ்யூஹமாவது-பரரூபத்திலே வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்நாநிருத்தரூபேண வரும் வகுப்பு. இவர்கள் நால்வர்க்கும் க்ருதத்ரேதாதியுக பரிவ்ருத்திக்ரமத்தாலே ஸித ரக்த பீத க்ருஷ்ணங்களான வர்ணங்கள் மாறிமாறிவரும். பர

ரூபத்திலும் வ்யூஹவாஸுதேவரூபத்திலும் ஜ்ஞானசக்த்யாதி ஷாட்குண்யப்ரகாசனம் ஒத்த படியாலே த்ரிவ்யூஹபக்ஷமும் நடக்கும். இதில் ஸங்கர்ஷணாதிவ்யூஹங்கள் மூன்றில் ஜ்ஞான பலங்கள் ஐச்வர்ய வீர்யங்கள் சக்திதேஜஸ்ஸுக்களான இவ்விரண்டு குணங்களிலே ப்ரகாசிதங்களாயிருக்கும். இங்கு * குணைஷ்ஷட்பிஸ்த்வேதை: * * ஷாட்குண்யாத் வாஸுதேவ: * * ஜாக்ரத்ஸ்வப்நேத்யாதி ச்லோகங்களை அநுஸந்திப்பது. நாலுவ்யூஹங்களில் நின்றுமடைவே ஒரொன்றிலேயும் மூன்றாகவவதரித்த கேசவாதிகளான பன்னிரண்டு ரூபங்களும் வ்யூஹாந்தரங்கள். இவர்கள் மார்கழிமாசம் முதலாக பன்னிரண்டுமாஸங்களுக்கும் த்வாதசாதித்யர்களுக்கும் நிர்வாஹகராயிருப்பார்கள்.

ஊர்த்வபுண்ட்ராதிகளில் அவர்கள் நிலை விசேஷித்திருக்கும். விபவங்களாவன-வ்யூஹமடியாக வருகிற பத்மநாபர் முதலான முப்பத்தாறு ப்ராதுர்பாவங்கள். இவற்றில் ஸ்ரீவாமனரூபத்தில் த்ரிவிக்ரமரூபம்போலே தோற்றுமாகாராந்தரங்கள் விபவாந்தரங்கள். கபிலாதிஸம்ஜ்ஞகங்கள் ஸாக்ஷாத் பகவதவதாரங்களன்று, ஜீவர்களான ப்ரஸித்த கபிலாதிகளை அநுப்ரவேசித்து அவர்களுக்கு அதிசயங்களை யுண்டாக்குமவை. * க்ருஷ்ணரூபாண்யஸங்க்யாநி * இத்யாதிகளில்படியே ஒரொன்றில் அவதா (அவாந்த) ரபேதங்கள் பஹுப்ரகாரங்கள்.

அந்தர்யாமி ரூபமாவது—யோகிகளுக்குக் காணலாம்படி ஹ்ருதய ப்ரதேசத்துக்குள்ளே ஸந்நிஹிதமா யிருப்பதொரு ஸூக்ஷ்மரூப விசேஷம். அர்ச்சாவதாரமாவது—பரவ்யூஹாதி லக்ஷணங்களோடேகூட ஸ்வயம் வ்யக்தாதி ப்ரக்ரியையாலே தேசகாலாதி விப்ரகர்ஷமற்று மாம்ஸசக்ஷுஸ்ஸுக்களுக்கும் அநுபவிக்கும்படி தோற்றுநிற்கும் நிலை. இங்கே *யதா யுவாநம் ராஜாநம்* ஸர்வாதிசாயிஷாட்குண்யம் *அர்ச்யஸ்ஸர்வஸஹிஷ்ணு:* இத்யாதி ச்லோகங்களையும் அபிமான ஸம்ஸ்கார பரிமாணாநுப்ரவேசாபிமுக்யாதி விசேஷங்களையும் கண்டுகொள்வது. இப் பரவ்யூஹாதி ஸர்வாவஸ்தையிலும் ஸர்வசரண்யனான ஸர்வேச்வரன் * நித்யஸ்ரீ: * சாந்தாநந்த * நித்யாநபாயிநீ * இத்யாதிகளிற்படியே ஸ்வாபிமதாநுரூப ஸஹதர்மசாரிணீ ஸம்ச்லிஷ்டனாயிருக்கும். பராதிஸ்தான விசேஷங்களும் புஜவர்ண பூஷணாயுத தேவீபரிஜந பரிச்சதாதி விசேஷங்களும் கண்டுகொள்வது. இவ்விக்ரஹ விசேஷ விசிஷ்ட (வேஷ)த்தாலே சுபாச்ரயத்வம் ஸர்வாவஸ்தையிலும் அநுவ்ருத்தம். ஹிரண்யகர்ப்ப ருத்ராதிகளுக்கு சிலவவஸ்த்தைகளிலே விசேஷித்து பகவதாவேச முண்டேயாகிலும் இவர்கள் சிலவதிகாரம்பெற்ற கர்மவச்யரானபடியாலே ப்ரதிபுத்தருக்கு ஸேவ்யரன்றென்று மஹாபாரத பௌஷ்கராதி ப்ரஸித்தம். ப்ரதர்தநாதி வித்யைகளிலும் வர்ணாச்ரமாதி நியதங்களான சிலதர்மங்களிலும் இந்த்ராதி சேதநாந்தர விசிஷ்டாநு ஸந்தானம் விதிபலப்ராப்தமானாலும் அந்த சேதநாந்தரங்கள் ப்ராணாத்யசேதநங்களின்படியே கஞ்சுக துல்யங்களாய் நிற்கையாலே சுத்தயாஜிகளுக்குப்போலே விசேஷ்யனான பரமாத்மாவே ஆராத்யனாய் நிற்கையாலே ஐகாந்த்யவிரோதம் வாராது. ஸாக்ஷாத் பகவதவதாரங்களில் ஆஸுரமோஹநார்த்தமாக கர்மவச்யத்வாபிநயமாத்ரமே யுள்ளது. சுத்த ஸ்ருதிவிசேஷமான அவதார ரஹஸ்யத்தினுண்மையை அறிந்தவனுக்குக் கடுக உபாயபூர்த்தியாலே புநர்பவமில்லையாம்.

சுத்தாசுத்த ஸ்ருஷ்டியிலே ஏதேனுமொன்றுக்கு கேவலநித்யமும் கேவலாநித்யமும் காரணமாகாது. ஸ்வரூபநித்யங்களான த்ரவ்யங்களும் அநித்யங்களான வீச்வர ஸங்கல்ப விசேஷாதிகளும்கூட ஸாமக்ரியாம். இவற்றில் அநந்யாதீந ஸ்வாதந்த்ர்யத்தாலே ஈச்வரன் ப்ரதான காரணம். இவன் ஸ்வவ்யதிரிக்தமான சேதந ப்ரவ்ருத்திகளிலும் அசேதந ப்ரவ்ருத்திகளிலும் யதாயோகம் கர்த்தாவுமாய் ப்ரேரகனுமாய் அநுமந்தாவுமாய் ஸஹகாரியுமாய் ஸாக்ஷியுமாய் பலப்ரதனுமாய் பலியுமாய் உதாஸீநனுமாய் நிற்கும் நிலை, * ஏகஸ்த்வமஸி லோகஸ்ய ஸ்ரஷ்டா * இத்யாதிகளில்படியே உசிதவ்யவஸ்தையாலே கண்டுகொள்வது. ஸங்கல்பமாத்ரத்தாலே ஸர்வேச்வரன் பண்ணும் ப்ரேரணம் சரீர பூதங்களான சேதநா சேதநங்களிரண்டிலும் ஒத்திருக்கும். க்ருபாமூலமான உபதேசமும் அத்தாலே

பண்ணும் ப்ரேரணமும் சாஸ்த்ரவச்யரான க்ஷேத்ரஜ்ஞர் பக்கல் அதிகம். இப்படி ஸர்வ ப்ரகார விசிஷ்டனைக் கொண்டு நிரதிசய போக்யனை ச்ரிய:பதியே ப்ரதானதத்வம். இவ னோடு நமக்குண்டான சரீராத்மபாவம் ப்ரதான ஸம்பந்தம். இவனுடைய உபாயோபே யத்வ ரூபமான வர்த்தத்வயம் ப்ரதாநஜ்ஞாதவ்யம். இவையிரண்டுக்குமுள் கருவான நாராயணசப்தம் ப்ரதாந நாமதேயம். இவன் பக்கல் ப்ரார்த்தநாபூர்வக பரந்யாஸம் ப்ரதாந ஹிதம் இவனுக்கு அபிமதத்தை நடத்துகை ப்ரதாந புருஷார்த்தம்.

இத்தத்வஹித புருஷார்த்தங்களில் தெளிவும் (துணிவும்) த்வரையுமுண்டாம்படி சாரீரக மூலமந்த்ரத்வயாதிகளாலே ஸம்யக்காகவுபதேசித்தவன் ப்ரதாநாசார்யன். இவனுப தேசத்தாலே ஸம்யக்ஜ்ஞாநம் பிறந்தால் நிஷித்தநிவ்ருத்தியும் விஷயவிரக்தியும் பதிவ்ர தாநுராக துல்யமான பகவத் ப்ரேமமுமுடையனாய் சோதிதகைங்கர்யத்தில் நிற்குமவன் ப்ரதாந சிஷ்யன். இவனுக்கு மூலகாரணமான தத்வத்ரய விவேகம் பிறந்தபடியை கோக்ஷீர க்ருதத்ருஷ்டாந்தத்தாலே உபநிஷத்துக் காட்டிற்று. இதில் *கறந்தபாலுள் நெய்யேபோல்* என்கிற த்ரவிடோபநிஷத்வாக்யத்திலும் காணலாம். இங்கே சித்து அசித்து என்கிற சரீர வகுப்பையும் அநுஸந்திப்பது. இத்தெளிவோடே பரஸமர்ப்பணாதிகள் பண்ணினால் அநு சயிக்கவேண்டா. இத்தெளிவின்றிக்கே பண்ணினாலும் * இத்தனையடியரானார்க் கிரங்கும் நம்மரங்கனாய பரமகாருணிகன் காலக்கழிவற, * ஞானக்கைதா * என்கிறபடியே இத்தெளி வோடே தலைக்கட்டும்.

அம்ருதரஞ்சனி. பா. 28, 29, 30.

குடன்மிசையொன்றியும் கூடியும் நின்றகொடுந் துயரம்
உடன்மிசைதோன்று முயிருமுயிர்க்குயிராமிறையும்
கடன்மிசைக் கண்டவைதானத்திரளவை போர்த்த பொன்னூல்
மடன்மிசைவார்த்தையதன் பொருளென்ன வருத்தனமே.
தத்துவம் தன்னில் விரித்திடத்தோன்று மிரண்டுதன்னில்
பத்திவிலக்கியபாசண்டர் வீசுறும் பாசமுறூர்
எத்திசையும் தொழுதேத்திய கீர்த்தியரெண்டிசையால்
சுத்தருரைத்த சுளகமருந்திய தூயவரே.
வினைத்திரண்மாற்றிய வேதியர்தந்தநல் வாசகத்தால்
அனைத்துமறிந்தபின் ஆறும் பயனுமெனவடைந்தோம்
மனத்திலிருந்த மருத்தமுதாகியமாதவனார்
நினைத்தன்மனத்திலரிதாகி நின்றன நீள்கழலே.

இதீரிதோ தேசிகதத்தசக்ஷுஷா யதாச்ருதம் வேங்கடநாதஸூரிணா,
அபசக்ஷுபாதைர் நிபுணைஸ் ஸமீக்ஷ்யதாமநாத்மஜீவேச்வர சிந்தநக்ரம:.

தரளதுரவகாஹாத் தத்வதுக்தாம்புராசேர்
யதம்ருத முதஹார்ஷீத் வேங்கடேசோ யதாவத்,
ததிஹ சுளகமாத்ரம் ஸாதுபிஸ்ஸாவதாநை
ரபுநருபநிஷேவ்யம் ஸ்தந்யமாஸ்வாதநீயம்.

இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு ஸ்ரீமத்தத்வத்ரயசுளகே பரமாத்மநிரூபணாதிகாரஸ்த்ருதீய:

தத்வத்ரயசுளகம் ஸமாப்தம்.

ஸ்ரீமதே வேதாந்தகுரவே நம:

# பதினாறுவது ரஹஸ்யமான ரஹஸ்யத்ரய சுளகம்.

## மூலமந்த்ராதிகார: ப்ரதம:

### அம்ருதரஞ்சனி, பா. 31.

ஓதுமுறைநான்கதனி லோங்குமொரு மூன்றினுள்ளே
நீதி நெறிவழுவாநிற்கின்றோம்—போதமரும்
போராயிரமுன் திருவும் பிரியாத நாராயணனருளால் நாம்.

ஸதாசார்யகடாக்ஷ முடையனான சரணாகதனுக்கு ரஹஸ்யத்ரயார்த்தம் நித்யபோக்யம். இவற்றில் திருமந்த்ரம் ஸர்வஸங்க்ரஹம். இது எட்டுத்திருவக்ஷரமாய் மூன்றுபதமாய் ஒருவாக்யமாயிருக்கும். இதில் * மூலமாகிய ஒற்றையெழுத்தான ப்ரதம பதத்தை ச்ருதி ஸ்ம்ருதிகள் சொல்லுகிறபடியே பிரித்துப்பார்க்குமளவில் மூன்று அக்ஷரமாய் அவை தானும் மூன்றுபதமாய் ஒருவாக்யமாயிருக்கும். இதில் ப்ரதமாக்ஷரம் ஸர்வகாரணபூதனாய் ஸர்வரக்ஷகனாய் ஸர்வசேஷியுமான ச்ரிய:பதியைச் சொல்லுகிறது. எங்ஙனேயென்னில், வாச்யங்களுக்கெல்லாம் மூலமானவனே வாசகங்களுக்கெல்லாம் மூலமானவிது காட்டுமென்று புராணம் சொல்லிற்று (அவ ரக்ஷணே) என்கிறதாதுவிலே நிஷ்பந்நமாய் ஸர்வரக்ஷக(னை)னைக் காட்டுகிறது. இதிலேறி லோபித்த சதுர்த்தி ரக்ஷணீயனான ஜீவனுடைய தாதர்த்யத்தைச் சொல்லுகையாலே ஸர்வரக்ஷகனுடைய ஸர்வசேஷித்வமும் ஸித்திக்கிறது. இச்சேஷசேஷிபாவம் * ஒழிக்கவொழியாத வுறவானபடியாலே சரீராத்மபாவம் வரும்படி கண்டு கொள்வது. ஸர்வகாரண பூதனுமாய் ஸர்வரக்ஷகனுமாய் ஸர்வ சேஷியுமான ஸர்வேச்வரனைச் சொல்லுகிற இவ்வக்ஷரத்தில் த்வயத்திற்போலே யதாப்ரமாண முபயுக்த ஸஹதர்மசாரிணீஸம்பந்தமும் விவக்ஷிதம்.

மத்யமாக்ஷரம் அவதாரணார்த்தமாய் அகாரவாச்யனுக்கே யென்று இச்சம்பந்தத்தை நியமித்துக்கொண்டு மற்றுள்ளாரோடு நிருபாதிகமாகத் துவக்கில்லை யென்கிறது. * மற்றுமோர் தைவமுளதென்றிருப்பாரோடுற்றிலேன் * என்கிறபடியே ததீயபர்யந்தமாக தேவதாந்தரவர்ஜநம் ஸித்திக்கும். த்ருதீயாக்ஷரம் *மந ஜ்ஞாநே* இத்யாதிகளிலேயாதல் அஸ்மச்சப்தத்தில் சாந்தஸப்ரக்ரியையாலே லுப்தசேஷமாயாதல் ஏகவ்யஞ்ஜநமாத்ரமான பதமாய் ஜ்ஞாநாநந்தஸ்வரூபமான முன்சொன்ன சேஷத்வாச்ரயமான வாத்மாவைக் காட்டுகிறது. இவ்வக்ஷரத்ரயத்தால் ஸ்வயம்ப்ரகாசனாய் அநுகூலஸ்வபாவனாய் ஜ்ஞாதாவாய் ஸ்வஸ்மை பாஸமாநனாய் சதுர்விம்சதி தத்வவிலக்ஷணனான ஜீவாத்மா (நான்) ஸர்வகாரண பூதனாய் ஸர்வரக்ஷகனாய் ஸர்வசேஷியுமான ச்ரிய:பதிக்கே அநந்யார்ஹ நிருபாதிக சேஷபூதனென்று அநுஸந்தித்தானாயிற்று. இப்படித் தன்னைச் சொல்லவே தன்னுடைமையும் அவனுக்கே சேஷமென்றதாம். * தாஸபூதாஸ்ஸ்வதஸ்ஸர்வே * மமநாத * அகாரார்த்தோ விஷ்ணு:* *கண்ணபுரமொன்றுடையானுக்கு அடியேனொருவர்க்குரியேனோ * இத்யாதிகளை யிங்கே அநுஸந்திப்பது. பதிக்கு சேஷமென்னவே பத்னிக்கும் சேஷமென்றதாம். மத்யமாக்ஷரம் லக்ஷ்மீவாசகமாய் மகாரவாச்யனான ஜீவன் இருவர்க்கும் தாஸபூதனென்கிற யோஜனையில் அவதாரணமார்த்தம்.

மத்யமபதம் ஸூக்ஷ்மயோஜனையிலிரண்டக்ஷரமா யிரண்டுபதமாய் ஒருவாக்யமாகிறது. (ம:) என்றது— எனக்கென்றபடி. இது விரோதிவர்க்கத்தை யெல்லாத்தையும் கணிசிக்கிறது. இத்தால் ஆகிஞ்சந்யாதிகளும் பலிக்கும். (ந) என்று இவ்விரோதியை நிஷேதிக்கிறது. நானெனக்குரியேனல்லேன் வேறொன்றுக்கு முரியேனுமல்லேனென்றதாயிற்று. என்னுடைய க்ரியைகளுமென்னதன்று, நானும் என்னதன்று; பகவானுக்கே நானாகாநின்றேன் என்று நிருக்தியில் சொல்லுகிறபடியே தானும் தன்னுடைமையும் தனக்கும் பிறர்க்கு முரித்தல்லாத பகவதநந்யார்ஹ சேஷத்வம் ப்ரணவ நமஸ்ஸுக்களிலே அநுஸந்திக்கப்பட்

டது. இது தன்னாலே தன்னையும் தன்னுடைமையையும் சேரத் தன்னோடு துவக்கறக்கிறதாகவுமாம். இத்தாலே அஹங்கார மமகாரங்களாகிற ஸம்ஸார மூலங்கள் சேதிக்கப்பட்டன. அசித் விலக்ஷணனான நான் ச்ரிய:பதிக்கே சேஷபூதன், அவரென்னுடைய ஸ்வாமி என்கிற யதாவஸ்திதாஹங்கார மமகாரங்களநுகுணம். * யானே யென்தனதே * இத்யாதிகளில் சொல்லுகிற விபரீதாஹங்கார மமகாரங்கள் தோஷம்; அவைகளாயிற்று இங்கே கழிக்கப்படுகின்றன. கீழே அந்யசேஷத்வம் கழிகையாலே தனக்குத் தானும் வேறொன்றும் நிருபாதிக சேஷமன்றென்று பலிக்கையாலே நமஸ்ஸு ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியைச் சொல்லுகிறதாகவுமாம். அதாவது—லௌகிக தாஸாதிகள்படியன்றிக்கே ஸ்வவ்யாபாரத்தில் நித்யபராஸாபேக்ஷனாகை.

இப்படி ஸ்வதந்த்ரஸ்வாமி யிட்டவழக்கான தனக்கு * அடியார்க்கென்னை யாள்படுத்த விமலன் * என்கிறபடியே * திருவெட்டெழுத்தும் கற்றுநான் உற்றது முன்னடியார்கடிமை * என்கிற பாகவத சேஷத்வமும் இங்கே ஸித்திக்கிறது. இங்கு பாகவதரென்கிறது—கீழ்ச்சொன்ன பரசேஷத்வஜ்ஞாந ரஸிகரை. ஸ்வாமியான தனக்கபிமதமானதொரு வழியாலே ஸ்வதந்த்ரமானவன் தானேப்ரவர்த்திப்பிக்க அம்முகத்தாலே அவனை வசீகரிக்க வேண்டுகையால் அகிஞ்சநனுக்கு அவன் பக்கல் ஸ்வரக்ஷண பரத்தை ஸமர்ப்பிக்கையாகிற வுபாய விசேஷமும் இங்கே பலிக்கும்.

நம:—என்கிற சப்தம்தானே ப்ரயோக விசேஷங்களாலும் பல சாஸ்த்ரங்களாலும் அதிகாராதிகளுடனே கூடின ப்ரபத்திதன்னையே சொல்லுகிறதாகவுமாம். இப்ப்ரபத்திக்கிலக்காய் சரண்யகுண பூர்ணனாய் நின்ற ரக்ஷகனான சேஷியின் படியையும் ப்ரபத்திகர்த்தாவாய் ஆத்மகுணயுக்தனாய் ரக்ஷணீயனான சேஷ பூதன்படியையும், ஆகாராந்தரங்களாலே வெளியிடுகிறது நாராயண சப்தம். இது நாரங்களை அயனமாகவுடையவனென்றாதல், நாரங்களுக்கு அயனமென்றாதல் சொல்லும். (ர:) என்று அழியும் வஸ்துக்களைச் சொல்லி (நர) சப்தத்தாலே அழியாத சேதநரைச் சொல்லி (நார) என்று சேதநருடைய ஸமூஹத்தைச் சொல்லி, இச்ஸமூகந்தான் பலவென்று மிடத்தை பஹுவசனத்தாலே சொல்லுகிறது. (நர) என்று—ஒருபடியாலுமழிவில்லாத நேதாவான ஸர்வேச்வரனைச் சொல்லி, அவனோடே யதாப்ரமாணம் ஸம்பந்தமுடைய ஸர்வத்தையும் நாரசப்தத்தாலே சொல்லுகிறதாகவுமாம். இத்தை அயனமாக வுடையவனாகையாவது—இருப் பிடமாக வாதல் வ்யாப்யமாகவாதல் உடையவனென்றபடி. இத்தால் அவ்வோவஸ்துக்களில் உள்ளும் புறம்புமொழிவற நிறைந்து நிற்கிறநிலை தோற்றுகிறது. சேதநாசேதநத்ரவ்யங்களை நித்யமாக நியமித்துக்கொண்டு வ்யாபித்து நிற்கையாலே சரீராத்மபாவம் பலிக்கும். இவற்றிற்குத் தான் அயநமென்றால் உபாயமாயுமு பேயமாயுமாதாரமாயும் நிற்கிறநிலை தோற்றுகிறது. நீயே உன்னைத்தரவேணு மென்றவர்களுக்கு * எனக்கே தன்னைத்தந்தகற்பகம் * என்கிறபடியே உபாயமுமாய் உபேயமுமாகிறான். சேதநாசேநங்களிரண்டுக்கும் * உடன்மிசையுயிரென நின்று ஆதாரமுமாகிறான்.

இப்படி பரமசேதநனைக் குறித்து அப்ருதக்ஸித்தாதேயங்களான சேதநா சேதநங்களிரண்டுக்கும் சரீரத்வமும் ஸித்திக்கும். காரணத்வோபாயத்வாதிகளைச் சொல்லுகிற இத்திருநாமத்தில் உபய விபூதியோகமும் உபயலிங்கமும் ஸர்வவித பந்துத்வமும் அநுஸந்தேயம். * நாரணன் தம்மன்னை நரகம் புகாள் * * குலந்தரும் செல்வம் தந்திடும் * இத்யாதிகளாலே இதின் பிரபாவம் கண்டுகொள்வது. இதில் சதுர்த்தி தாதர்த்யத்தை முன்னிட்டு அதின் பலமாய் ப்ரார்த்தநீயமான கைங்கர்யத்தைக் கணிசிக்கிறது. இத்திருமந்த்ரத்தில் வாக்யார்த்தத்தைப் பலபடி யநுஸந்திப்பார்கள். அகாரவாச்யனாய் நாராயணனான ச்ரிய:பதிக்கு நான் அநந்யார்ஹ சேஷ பூதன், எனக்குரியனல்லேனென்று திருமந்த்ரம் முழுக்க ஸ்வரூப பரமானால், தன்னுடைய ஸ்வரூபஸ்திதிப்ரவ்ருத்திகள் பரசேஷதைகரஸங்களுமாய் பராதீனங்களுமாய் இருக்கும்படி யதாஸ்தானமநுஸந்தேயம்.

ப்ரணவ நமஸ்ஸுக்கள் ஸ்வரூபபரமாய் மேல் நாராயணன் பொருட்டாவேனென்று பலப்ரார்த்தனையாகவுமாம். இப்ப்ரார்த்தனையில் சேஷத்வபலமான ஸ்வரூபாநுரூப கைங்கர்ய விசிஷ்டனாவேனென்றதாயிற்று. ப்ரணவம் ஸ்வரூப பரமாய் மேலிரண்டு பதங்களாலும் அத்யாஹரித்த க்ரியா பதங்களோடே கூடி அநிஷ்டநிவ்ருத்தியும் இஷ்ட ப்ராப்தியும் அபேக்ஷிக்கிறனவாகவுமாம். அகாரவாச்யனான நாராயணனுக்கு நான் அநந்யார்ஹ சேஷபூதன், அவனையே சரணமாகப் பற்றினேன். அவன் திருவடிகளிலே * ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னிவழுவிலா வடிமை செய்ய வேண்டு நாம்* என்றிப்பதங்கள் அடைவே ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களை ப்ரகாசிப்பிக்கிறன வாகவுமாம். இவ்வடைவே, அநந்யார்ஹ சேஷத்வமும் அநந்யோபாயத்வமும் அநந்ய ப்ரயோஜநத்வமும் பெற்றவதிகாரி பத்ததசையிலே முக்தரோடொக்கும்.

இப்படி ப்ரணவாதிகளிலே சோதித ஸ்வரூபனாய் ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தத்திலுமிதற்கு ஸ்வாதிகாராநுகுணமான உபாயத்திலும் வ்யவஸ்திதனானவனுக்கு * உத்தரபூர்வாகயோரச்லேஷவிநாசௌ * என்கிறபடியே * போயபிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்.

அம்ருதரஞ்சனி, பா. 32, 33.

ஊன் தந்து நிலை நின்ற வுயிரும் தந்தோருயிராகி யுள்ளொளியோடுறைந்த நாதன்
தான் தந்த இன்னுயிரை யெனதென்னாமல் நல்லறிவும் தந்த கலா நலமும் தந்து
தான் தந்த நல்வழியால் தாழ்ந்தவென்னைத் தன்றனக்கே பரமாகத்தானே எண்ணி
வான் தந்து மலரடியும் தந்து வானோர் வாழ்ச்சிதரமன்னருளால் வரித்திட்டானே.
திருமாலடியிணையைத் திண்சரணாக்கொண்டு, திருமாலடியிணையே சேர்வார்—ஒருமால்
அருளாலருளாதவானோர்கள் வாழ்ச்சி, அருளால் நமக்களித்தாராய்ந்து.

இதி கவிதார்க்கிகஸிஹ்மஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு ரஹஸ்யத்ரய சுளகே மூலமந்த்ராதிகார: ப்ரதம:.

த்வயாதிகாரோ த்விதீய:

*திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வயைகநிஷ்டராவீர்* என்கிற பூர்வர்கள் பாசுரத்தின்படியே ப்ரதம ரஹஸ்யத்தில் ஸ்வஸ்வரூப பரரூபாதிகளையறிந்தவனுக்கு பரதத்வமான சரண்யனையும் பரமஹிதமான சரணாகதியையும் பரம புருஷார்த்தமான தத்கைங்கர்யத்தையும் விசதமாக்கிக்கொண்டு ப்ரபத்த்யநுஷ்டான ப்ரகாரத்தை ப்ரதானமாக ப்ரகாசிப்பிக்கிறது த்வயம். பூர்வோத்தரகண்டங்களாலே உபாயோபேயங்களைத் தெளிவிக்கையாலிதுக்கு த்வயமென்று பேராயிற்று.

பூர்வகண்டத்தில் ஸ்ரீசப்தம் ப்ரஜைகள் பக்கல் வாத்ஸல்யாதிசயத்தாலும் பதியின் பக்கல் வால்லப்யாதிசயத்தாலும் புருஷகாரமாய்க்கொண்டு சரண்ய ஸஹதர்மசாரிணியான பிராட்டியைச் சொல்லுகிறது. எல்லாராலும் ஆச்ரயிக்கப்படுமென்றும் ஸர்வேச்வரனையாச்ரயித்திருக்குமென்றும் ஆச்ரிதர் விண்ணப்பஞ்செய்யும் பாசுரங்களைக் கேட்டு ஸர்வேச்வரனைக் கேட்பிக்குமென்றும் இவர்களுடைய தோஷங்களை யெல்லாம் போக்குமென்றும் தன்னருளாலே இவர்களுக்கு ஜ்ஞானாதிகுண பாகத்தை யுண்டாக்குமென்றும் ஸ்ரீ சப்தார்த்தத்தை சாஸ்த்ரம் சொல்லிற்று.

மதுப்பு நித்தியயோகத்தைக் காட்டுகிறது. இது ஸாபராதர்க்கும் நினைத்தபோதே நிஸ்ஸங்கமாக ஸர்வேச்வரனைப் பற்றுகைக்குறுப்பாம். * நின்திரு * அகலகில்லேனித்யாதிகளையுமிங்கே யநுஸந்திப்பது. நாராயணசப்தம் * நிகரில் புகழாயென்று தொடங்கியருளிச்செய்த குணவிசேஷங்களையும், ஸம்பந்தவிசேஷங்களையும் காட்டிக்கொண்டு ஸர்வ

வித பந்துவான சரண்யனை ப்ரகாசிப்பிக்கிறது. (சரணௌ) என்கிற பதம் ருசிபிறந்த போது—தைவப்ரக்ருதிகளோடு அஸுரப்ரக்ருதிகளோடு வாசியறப் பற்றலாம்படியான * பொதுநின்ற பொன்னங்கழல்களை முன்னிட்டுக்கொண்டு சுபாச்ரய திவ்யமங்ள விக்ரஹ யோகத்தைக் காட்டுகிறது.

(சரணம்) என்றது — * கழல்களவையே சரணாக * நாகணைமிசைநம்பிரான் சரணே சரண் * நின்னிலங்குபாதமன்றிமற்றோர்பற்றிலேன் * என்கிறபடியே—அகிஞ்சனனான சேஷ பூதனுக்கவலம்பனமான திருவடிகள்உபாய ஸ்தானத்திலே நிற்கிற நிலையைக் காட்டுகிறது. * துயரறு சுடரடிகளாகையாலே அநிஷ்ட நிவ்ருத்திக்கு மிஷ்டப்ராப்திக்கு மவன் திரு வடிகளே உபாயம். (ப்ரபத்யே) என்கிற விடத்தில் தாதுஅத்யவஸாயத்தைக் காட்டுகிறது.

(ப்ர) என்கிற வுபஸர்க்கத்தாலே இதின் மஹத்தை சொல்லப்படுகிறது. * அடைக்கலம்புகுந்த * அடிக்கீழமர்ந்து புகுந்தேனே * என்கிறபடியே மஹாவிச்வாஸாதி களுடனே கூடின பரஸமர்ப்பணம் பண்ணுகிறே னென்றதாயிற்று. * ஸக்ருதேவ * ஸ்திதே மநஸி * இத்யாதிகளில்படியே ஸாங்கபரஸமர்ப்பணம் ஸக்ருத்கர்த்தவ்யம். உத்தமபுருஷன் * புகலொன்றில்லாவடியேன் * என்கிறபடியேஅதிகாரமும் ஸ்வரூபமும் தெளிந்த அனுஷ் டாதாவைக் காட்டுகிறது.

இப்பூர்வகண்டத்தில் சொல்லுகிற வுபாயத்தை புருஷார்த்தாந்தரங்களிலே மடை மாறுதபடி * கண்டுகேட்டு * இத்யாதிகளில் சொல்லுகிற பரமபுருஷார்த்தத்தைச் சொல்லு கிறது உத்தரகண்டம்.

(ச்ரீமதே) என்கிறது—* கோலத் திருமாமகளோடுன்னை * இத்யாதிகளிற்படியே ஸர்வசேஷி ஸர்வாவஸ்தையிலும் ஸபத்நீகனுக்கொண்டு கைங்கர்யப்ரதிஸம்பந்தியாயிருக் கிற நிலையைக் காட்டுகிறது. இங்குள்ள நாராயண சப்தத்தாலே ப்ராப்யனான ச்ரியஃ பதி யினுடைய ஸ்வாமித்வமும் ஸர்வப்ராகார நிரதிசய போக்யத்வமும் ப்ரதானமாக வநுஸந் தேயம். இதில் சதுர்த்தி நித்யஸித்தமான தாதர்த்யம் ப்ரார்த்தநீயமல்லாமையால் * வழு விலாவடிமை செய்யவேண்டுமமன்று தாதர்த்யபலமாய் ப்ரார்த்தநீயமான கைங்கர்யத்தைக் காட்டுகிறது. இங்குற்றநமஸ்ஸு திருமந்த்ரத்திற்போலே இரண்டக்ஷரமும் இரண்டு பதமா யொருவாக்யமுமாய், எனக்காவேனல்லே னென்றதாயிற்று. இத்தாலே—அவித்யாகர்மாதி களான அநிஷ்டவர்க்கத்தை யெல்லாம் கழியாநிற்கச்செய்தே—இக்கைங்கர்யமும் மற்றுள்ள புருஷார்த்தங்களில் வரும் ஸ்வாதீநஸ்வார்த்த கர்த்ருத்வ போக்த்ருத்வ ப்ரமரூபமான களை யற்று நின்ற நிலை ப்ரதாநமாக வநுஸந்தேயம்.

இவ்வவாந்தரவாக்யங்கள் மூன்றும் கூட ஏகவாக்யமாம்போது அநர்ஹ சேஷ பூதனாய் அகிஞ்சநனான நான் ஸர்வாநிஷ்டங்களும் கழிந்து நிரதிசயாநுகூலதையாலே ப்ர தாந ப்ராப்யனாய் நிருபாதிக சேஷியாகையாலே நித்யகைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாய் நிற்கிற ஸ்ரீமானான நாராயணன் திருவடிகளில் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசிதமான ஸர்வவிதகைங்கர்யங்களைப் பெறுகைக்கு ஸ்ரீமானான நாராயணன் திருவடிகளையே உபாயமாக அத்யவஸித்து ப்ரார்த்தநா பூர்வகாத்மரக்ஷாபர ஸமர்ப்பணம் பண்ணுகிறேனென்றொரு வாக்யார்த்தமாகிறது.

அம்ருதரஞ்சனி பா. 34, 35.

சேர்க்கும் திருமகள் சேர்த்தியின் மன்னுதல் சீர்ப்பெரியோர்க்
கீர்க்கும் குணங்களிலக்காம் வடிவிலிணை யடியைப்
பார்க்கும் சரணத்திற் பற்றுத நங்கிலை நாம்பெறும்பே
றேற்கு மவற்றினுளெல்லாம் களையற வெண்ணினமே.

திருமாலடியிணை சேர்ந்து திகழ்ந்த வடிமை பெறத்
திருநாரணன் சரணே சரணாகத் துணிந்தடைவோர்,
ஒருநாளுரைக்க வுயர்தரு மந்திரமோதிய நாம்
வருநாள் பழுதற்று வாழும் வகைபதிண் மன்னுவமே.

இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய வேதாந்தாசார்யஸ்
க்ருதிஷு ரஹஸ்யத்ரயசுளகே த்வயாதிகாரோ த்விதீய:

---

அத சரமச்லோகாதிகார: த்ருதீய:

திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் ப்ரகாசித்த உபாய விசேஷத்தை அதிகாராதிகளுடனே கூட விதிமுகத்தாலே வெளியிடுகிறது சரமச்லோகம். இத்தால் ஸபரிகரமாக ஸுதுஷ்கரமாய் சிரகால ஸாத்யமான வுபாயாந்தரம் அல்பஜ்ஞனாய் அல்ப சக்தியாய் அல்ப காலவர்த்தியான தனக்குத் தலைக்கட்டவரிதென்று சோகித்தவனுக்கு ஸாங்கமாக ஸுகரமாய் ஸக்ருத்கர்த்தவ்யமான உபாய விசேஷத்தை உபதேசித்து நீ சோகிக்கவேண்டாமென்கிறான். (ஸர்வதர்மாந்) என்றது எல்லா தர்மங்களையுமென்றபடி. தர்மமாவது சாஸ்த்ரமே கொண்டறிய வேண்டும் அபிமத ஸாதநம். இங்கு தர்மமென்கிறது கீழ்ச்சொன்ன பக்தியோகத்தை. இது பலவகையான படியை பஹுவசநம் காட்டுகிறது. இவற்றிலொன்று மொழியாமைக்காக ஸர்வசப்தம்; பரிகரங்களைக்கூடக் காட்டுகைக்காகவுமாம் (பரித்யஜ்ய) என்றது. தர்மங்களை விடுகையாவது அவற்றினருமையைக் கண்டு நிராசனாகை. (பரி) என்கிறவுபஸர்க்கம் ஸர்வகாலத்திலும் ஸர்வப்ரகாரத்திலும் யோக்யதை யில்லையென்று நைராச்யாதிசயத்தைக் காட்டுகிறது. அபிமதஸாதநங்களில் சக்தனுக்கும் அசக்தனுக்கும் இங்கு தியாகம் விதிக்கக்கூடாமையால் இது அநுவாதம்.

ஸர்வதர்மங்களினுடைய ஸ்வரூபத்யாகத்தை விதிக்கிறதென்கை பஹு ப்ரமாண விருத்தம். ஸாத்விகத்யாகமாத்ரம் விவக்ஷிதமானால் இங்கு த்யாக விசிஷ்ட தர்மங்கள் அங்கங்களாக ப்ரஸங்கிக்கும்; ஆகையால் த்யாகவிதி கொள்ளப்பார்க்கில் ஸாத்விக த்யாக விசிஷ்ட ஸர்வதர்ம நைரபேக்ஷ்யாதிகளிலே தாத்பர்யம் கொள்ள உசிதம். ப்ரபத்திக்கு நைரபேக்ஷ்யம் சொன்னாலும் ஸ்வதந்த்ர விதியாலே வர்ணாச்ரம தர்மங்களினுல் நிலை குலையாது. * த்வயமர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம்வக்தா * என்று ஸ்வபாவார்த்த சாஸத்ரக்ரந்தங்களோடே பொருந்தக் கொள்ளவேணும்.

இப்படி அபிமதத்துக்கு ஒரு கைம்முதலற்றுப் பற்றிலார்பற்றநின்ற தன்னை (மாமேகம்) என்கிறான். மாமேகமென்கிறது—என்னை யொருவனையுமென்றபடி. விஹிதத்தினுடைய அநுஷ்டான ப்ரகாரத்தை ப்ரகாசிப்பிக்கிற த்வயத்தில் கண்டோக்தமான வைசிஷ்ட்யத்தையும் * ஏஷ நாராயண ச் ஸ்ரீமாந் * இத்யாதிகளையுமடியொற்றி இங்கே யநுஸந்திப்பது. இங்கு ஆச்ரயணீயதைக் குறுப்பான ஸௌலப்யாதிகுண பூர்த்தியையும் அதில் ஏகமென்கிற பதத்தாலே இனிச் சுமையுமெடுக்காமைக்கு நிற்கிற நைரபேக்ஷ்யத்தையு மருளிச்செய்கிறான். ஏகசப்த முபாயோபேயமாகத் தான் நிற்கிற நிலையைக் காட்டுகிறதாகவுமாம். ப்ரபத்தியின் கர்த்தாவான தன் பக்கலிலும் தன் க்ரியையான ப்ரபத்தியிலும் பிறக்கும் ப்ராதாந்ய புத்தியை பராதீநத்வாதிகளாலே கழிக்கிறதாகவுமாம். நாநாவிததர்மங்களுக்கெல்லாம் ஸநாதன தர்மமான தானொருவனுமே எதிர்த்தட்டாக நிற்கிற நிலையைக் காட்டுகிறதாகவுமாம்.

(சரணம்) என்றது—உபாயமாகவென்றபடி. (வ்ரஜ) என்றது. அடையென்றபடி. என்னை யொருவனையுமே சரணமாகவடை யென்கிறவித்தாலே அசரண்ய சரண்யனை என்பக்கலிலே அத்யவஸாய யுக்தமான ஆத்ம ரக்ஷாபரஸமர்ப்பணம் பண்ணென்ற

தாயிற்று. மற்றும் கழிக்கிற வுபாயங்களுடைய ஸ்தாநத்திலே அகிஞ்சநனான சேஷ பூதனுக்கு அவலம்பமான திருவடிகள் உபயஸ்தானத்திலே நிற்கிற நிலையைக்காட்டுகிறது.

இப்படி ஆகிஞ்சந்யாதி விசிஷ்டனான அதிகாரிக்கு அநுரூபமான க்ருத்யத்தை பூர்வார்த்த்திலே விதித்துத் தன் க்ருத்யத்தை (அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி) என்றருளிச் செய்கிறான். இதில் 'மோக்ஷயிஷ்யாமி' என்கிற பதத்திலே நானென்று தோற்றாநிற்க அஹம்சப்தத்தால் தன்னையொழிந்தாரைத்தான் விலங்கிட்டு வைத்தவனுக்கு மோக்ஷம் கொடுக்கவல்லாரில்லை யென்னும் ஸ்வதந்த்ரனாய் விலங்கிட்ட தான் விலங்கை வெட்டிவிடும்போது விலக்கவல்லாரில்லை என்னும் தனக்குள்ளவாசி காட்டுகிறான். (த்வா) என்றது உன்னாலும் பிறராலும் உன்னை முக்தராக்கவொண்ணாதபடியைத் தெளிந்து ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாய் பரமகாருணிகனான வென்பக்கலிலே பரந்யாஸம் பண்ணினவுன்னை யென்றபடி. (ஸர்வபாபேப்ய:) என்றது எல்லா பாபங்களில்நின்றுமென்றபடி. பாபமாவது— சாஸ்த்ரமே கொண்டறியவேண்டும் அநிஷ்ட ஸாதநம். இத்தால் பாபவர்க்கமநாதிகால ஸஞ்சிதமாய் அனேக ப்ரகாரமாய் நிற்கிற நிலையைக் காட்டுகிறான். பாபங்களிலொன்றுமொழியாமைக்காக ஸர்வசப்தம். இங்கு பாபசப்தத்தாலே முமுக்ஷுவுக்கு அநிஷ்டபல ஹேதுவான புண்யமும் ஸங்க்ருஹீதம். அவித்யாதிகளுமிங்கே ஸங்க்ருஹீதங்கள். இத்தால் ப்ராரப்தவ்யதிரிக்தமான பூர்வாகத்தில் புத்தி பூர்வாபுத்தி பூர்வங்களிரண்டுவகையும், ப்ராரப்தத்திலுமிவனுக்கநிஷ்டமாய் சோக ஹேதுவான அம்சமும், உத்தராகத்தில் ப்ராமாதிகாம்சமும் ஸங்க்ரஹிக்கப்படுகிறது. புத்தி பூர்வகமான உத்தராகத்துக்கு புந:ப்ரபத்தியை ப்ராயச்சித்தமாக சாஸ்த்ரம் சொல்லிற்று. இதுவும்கூட இங்கு ஸர்வசப்தத்தாலே விவக்ஷிதமானால் ப்ராயச்சித்தத்திலே மூட்டியாதல், சிக்ஷா விசேஷங்களாலே யாதல் அவற்றையும் கழிக்கும். பக்தி தத்வஜ்ஞாநாபிவ்ருத்திகளுக்காகவாதல், பகவத்பாகவதார்த்தமாகவாதல் வரும் காம்யங்களொழிய மற்றுவரும் காம்யங்களும் பாபகோடியிலே யந்வயிக்கும். இதுக்கு புந: ப்ரபத்தி பண்ணாதொழியில், பகவதநுபவ விச்சேதாதி ப்ரத்யவாயம் வரும். ப்ரபத்திக் கநந்தரமே முக்தராவாரு மிருந்தாலும் ப்ரபத்திபலத்தாலே யாதல், ப்ராரப்த ஸுக்ருத விசேஷங்களாலே யாதல், நிரபராதராயிருப்பார்க்கும் அபராதம் புகுந்தாலும் அநுதாபாதிகளாலே புரிவருமில்லாதபோது ஹிதைஷியான சிக்ஷகன் புத்ரசிஷ்யாதிகளைப்போலே அல்பதண்டத்தாலே புரிக்கப் புரிவருமாகையாலே * சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும். இங்கே * ப்ராரப்தேதர பூர்வபாபமகிலம் * என்கிற ச்லோகத்தைப் படிப்பது.

பரமகாருணிகனாய் அவஸர ப்ரதீக்ஷனான ச்ரிய:பதி அஜ்ஞாத ஸுக்ருதாதிகளை முன்னிட்டுக்கொண்டு ஸத்வாதி விரோதிகளையும், ஆசார்யனை முன்னிட்டுக்கொண்டு தத்வஜ்ஞாநாதி விரோதிகளையும், புருஷகாரத்தை முன்னிட்டுகொண்டு உபாய விரோதிகளையும், பக்திப்ரபத்திகளை முன்னிட்டுக்கொண்டு ப்ராப்தி விரோதிகளையும் கழிக்கும். அவ்விடத்தில் அத்யந்தாகிஞ்சநனாய் சோகித்தவனுக்கு பரந்யாஸத்தை விதித்து (ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி) என்கையால் இது ப்ராப்திவிரோதி விஷயம். இப்படி ப்ரஸாதநங்களாலே நிக்ரஹநிவ்ருத்தி. நிவ்ருத்தி நிக்ரஹனான ஈச்வரனாலே ஜ்ஞாநஸங்கோச நிவ்ருத்தி. இதுதானே ஜ்ஞாநவிகாஸரூபையான ப்ராப்தி. (மோக்ஷயிஷ்யாமி) என்றது-விடுவிக்கக்கடவேனென்றபடி. இத்தால் ஸம்ஸரிக்கப்பண்ணிவைத்த ஸங்கல்பத்தை விடக்கடவேனென்றதாயிற்று. மோக்ஷத்திற்கு பவிஷ்யத் காலத்துக்கு ப்ரபந்நன் கோலினதெல்லை. ஆர்த்த்யதிசயமுடையவனுக்கு அப்போதே பலஸித்தி.

ஆறுதலுடையவனுக்குத் தன்குறைவால் வந்தநாளிழிவொழிய பொருளிழவில்லை. ஆகையால் (மாசுச:) என்கிற வாக்யத்தாலே இனியிவனுக்கு சோகிக்க ப்ராப்தியில்லை யென்கிறான். முன்பு சோகித்தவிடமதிகாரத்தோடே கூடிதுணமாயிற்று. மேல் ஹர்ஷஸ்தாநத்திலே சோகிக்கில் 'அநபிஜ்ஞக்ருத்யமாம். உன்னதிகாரத்துக்குப் பொருந்தாத உபாயாந்தரத்திலலையாதே, அநாலோசித விசேஷாசேஷலோக சரண்யனான வென்னையே உபாயமாக

வத்யவஸித்து அடைக்கலம் புகுந்தவுன்னை அர்த்திகல்பகனாய் அப்ரதிஹத ஸங்கல்பனான நான் ஸத்தாநுபந்திகளாய்ப் போந்த ஸர்வ விரோதி வர்க்கத்தில் நின்றும் விடுத்து—ஸ்வஸ்வரூபாவிர்பாவத்தை யுண்டாக்கி * மேலாத்தேவருடனே கூட்டி * பிரியாதாள் செய்ய என்றும் மீளாவடிமைகொள்ளக் கடவேன். நீ இனியொன்றுக்கும் சோகியாதே. * நாவலட்டுழி தருகின்றோம் நமன்தமர் தலைகள்மீதே, * நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கு யாதொன்றுமில்லை, * நமன் கூறுசெய்துகொண்டிருந்த குற்றமெண்ணவல்லனே * என்றநுஸந்தித்து யமவச்யத்வாதிகளில்லாமையாலும் கைங்கர்ய ஸாம்ராஜ்யம் கைபுகுருகிறபடியாலும் ஸந்துஷ்டனாய், வருகிற நல்விருந்தைப் பார்த்திருப்பாரைப்போலே * மாகவைகுந்தம் காண்பதற்கு மனமேகமெண்ணி இருவென்று சரண்யனுக்கபிப்ராயம்.

இப்படி ஸத்யமான ஸத்ய ஸங்கல்பன் வாக்யத்திலூன்றுதவன் விலக்கவொண்ணாத காலப்ரவாஹம் கழியக்கழிய மேலென்ன நிலை நிற்கப்போகிறோமென்று தளும்பும். இதில் விச்வாஸமுடையவன் ஸ்வயத்ந நிரபேக்ஷமாக கைங்கர்யத்திலே கடுகவங்வயிக்கப் போகிறோமென்று மேன்மேலும் அதிப்ரீதனும். கத்யத்தில் * நித்ய கிங்கரோ பவாநி * என்றதறுதியாக இதில் பூர்வார்த்தத்தில் விஹிதத்தினுடையவநுஷ்டாந ப்ரகாரம், மேலுத்தரார்த்தத்தின் தாத்பர்ய ப்ரகாசநம்.

அம்ருதரஞ்சனி, பா, 37, 38, 39.

எல்லாத் தருமமுமென்னை யிகழ்ந்திடத்தானிகழா
எல்லாம் தனதென வெல்லாமுகந்தருள் தந்தபிரான்
கல்லார் மதக்களிறொத்தவினைத்திரண்மாய்ப்பனென்ற
சொல்லாலினியொருகால் சோகியாத் துணிவுற்றனமே.

வினைத்திரண்மாற்றிய வேதியர்தந்தருள் வாசகத்தால்
அனைத்துமறிந்தபிறறும் பயனுமெனவடைந்தோம்
மனத்திலிருந்து மருந்தமுதாகிய மாதவனார்
நினைத்தன்மனத்திலரிதாகி நின்றன நீள்கழலே.

எட்டிலாறிரண்டி லொன்றிலங்கு மாறியம்புவார்
விட்டவாறு பற்றுமாறு வீடுகண்டு மேவுவார்
சிட்டரான தேசுயர்ந்த தேசிகர்க்குயர்ந்தமேல்
எட்டுமூன்று மூடறுத்த தெந்தைமாலிரக்கமே.

த்ரிபிரநவதிகார்த்தம் ஸங்க்ருஹீதம் ரஹஸ்யைர்:
விபுலதரமதீநாம் வ்யாஸதஃ க்யாபயிஷ்யந்,
வ்யதநுத ரமணீயம் வேங்கடேசோ வதாந்ய:
ஸமுசிதரஸிகாநாம் ஸாரஸம்க்ஷேப மேதம்.

இதி கவிதார்க்கிகஸிஹ்மஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு ரஹஸ்யத்ரயசுளகே சரமச்லோகாதிகாரஸ் த்ருதீய:.

ஸாரஸம்க்ஷேபமென்னும்

**ரஹஸ்யத்ரய சுளகம் ஸமாப்தம்.**

தேசிகன் திருவடிகளே சரணம்.